உ

சுந்தரகணேசர் துணை.

அகட விகட

# அமிர்த ரஞ்சினி.

இது ஓர் அதி அற்புத அகட விகட கதாரசக்யானம்.

இஃது

மதராஸ், கலியுகவர்த்தமானி பத்திராதிபராகிய,
M. A. கவிராஜ கந்தசாமிப்பிள்ளை யவர்களால்
இயற்றப்பட்டு,

பூ. து. மாசிலாமணிமுதலியார் அவர்களால்,
பூ. சு. துளசிங்கமுதலியார்
அண்டு சன்ஸ் அவர்களது
சுந்தரவிலாச அச்சுக்கூட்டத்திற்,
பதிப்பிக்கப் பட்டது.

1913.
REGISTERED COPY RIGHT.
இதன் விலை அணா 8.

# ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகலமான அச்சுக்கூடத் தலைவருக்கும், இதரமான பலவித புத்தக வியாபாரிகட்கும் தெரிவிப்பது யாதெனில், (அகடவிகட அமிர்தரஞ்சினி) என்கிற இப்புத்தகத்தை 1867-வது வருஷத்திய 25-வது ஆக்டின் 20-வது பிரிவின் 6-வது விதியின்படி கெவரண்மெண்டார் அவர்கள் சட்டப்படி காபிரைட் ரிஜிஸ்தர் செய்திருப்பதினால் இதை என்னுடைய உத்திரவில்லாமல் யாவரும் அச்சிடக்கூடாது. அப்படி அச்சிடுவராகில் அதினாலுண்டாகும் நஷ்டத்திற்கும், பினல்கோர்ட் சட்டத்தின் கேள்விக்கும் ஜவாப்புதாரிகளாவார்களென்று இதனால் தெரிவிக்கப்படுகிறது.

## விளம்பரம்,

இப்புத்தகமாவது இன்னும் பலவித புத்தகங்களாவது அவுஷதங்கள், வெள்ளி, பொன்நகைகள், ஜர்மன்சில்வர்சாமான்கள், கெடியாரதினுசுகள், பலவித சீமை சாமான்கள் ஏது தேவையானபோதிலும் அடியிற்கண்ட எமது விலாசத்திற்கு யெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

எமது ஆபீஸ் (கேட்லாக்குப் புத்தகம்) தேவையானவர்கள் தமது மேல்விலாசத்தைமட்டும் தெரிவித்தால் ஒரு புத்தகம் இனாமாக அனுப்பப்படும்.

இப்படிக்கு,

பூ. து. மாசிலாமணி முதலியார்

நெ. 25. வல்லம்பங்காருசெட்டி தெருவு,

பெரம்பூர் பாரக்ஸ் போஸ்ட், மதராஸ்.

உ

# விளம்பரம்.

இதனால் சகலருக்கும் அறிவிப்பது, சென்னை பெரம்பூர் பாரக்ஸ் போஸ்டைச்சார்ந்த பெருமாள்பேட்டை வல்லம்பங்காருசெட்டிவீதி, 25-வது செ. வீட்டில் ஸ்தாபித்திருக்கும் சுந்தரவிலாச அச்சுக்கூடத்தில் அநேகவித புத்தகங்களும். அற்புதமான மருந்து வகைகளும், நேர்த்தியான றப்பர் முத்திரைகளும், ஜர்மன்சில்வர் நகைகளும், தங்ககிலிட் நகைகளும், சரிகை டொப்பி, சரிகைதலைகுட்டை, புனுகு, ஜவ்வாது முதலான அத்தர்தினுசுகளும் உண்டு. விவரம் தேவையானவர்கள் ½-அணா ஸ்டாம்ப் அனுப்பி தங்கள் விலாசந் தெரிவித்தால், 1-அணா பெறும்படியான 2-கேட்லாக்புத்தகம் அனுப்பப்படும், பார்வையிட்டு தேவையானதற்கெழுதலாம்.

| | | | |
|---|---|---|---|
| நோயில்லாவாழ்வென்னும் புத்தகம் 1-க்கு விலை | 0 | 12 | 0 |
| பதினெண்சித்தர் ஞானக்கோவை விலை | 0 | 8 | 0 |
| மேற்படி இரண்டாம்பாகம் | 0 | 8 | 0 |
| இரண்டுபாகமும் ஒரேகட்டடம் கிளேஸ்கடிதம் | 1 | 0 | 0 |
| பட்டணத்துப்பிள்ளையார் திருப்பாடல் மூலமும்உரை | 0 | 10 | 0 |
| பட்டணத்தார்பாடல் பத்திரகிரியார்புலம்பல் உரை | 0 | 10 | 0 |
| பட்டணத்தார்பாடல் உரையும், பட்டணத்தார் புலம்பல் உரையும், பத்திரகிரியார் புலம்பல் உரையும், மூன்றும் ஒரேகட்டடம் கலிகோபயிண்டு. | 1 | 2 | 0 |

(ஸ்திரீபுருஷ லக்ஷணக்குறிசாஸ்திரம்) திரேகத்திலுள்ள குறிகட்கெல்லாம் பலன் தெரிந்துக் கொள்ளும்படி அச்சிட்டது. இதன்விலை அணா-12.

ஜாதகங் கணிக்கும் விபரமும் ஜாதகனுக்கு பலாபலன்களும், பெண்கள் ஜாதகமும், எளிதிலறியும்படி அச்சிட்டிருக்கிற (அனுபோக ஜாதகரகசியம்)
கிளேஸ்கடிதம் விலை அணா 0 12 0

பஞ்சபக்ஷி ஆரூடம், ஆஞ்சநேயர் ஆரூடம், ஜெயமுனிவராரூடம். வால்மீகாரூடம், அஷ்டதிக்காரூடம் ஆக ஐந்துவித ஆரூடங்களும் ஒரேகட்டடம்
கலிகோபயிண்டு விலை அணா 0 12 0

| | | | |
|---|---|---|---|
| பதினெண்சித்தர்கள் திருவாய் மலர்ந்தருளிய வாதக்கோவை பொழிப்புரையுடன் கலிகோபயிண்டு விலை | 0 | 12 | 0 |
| (மஸ்தான் சாகிபுபாடல்) மூலமும் உரையும் விலை ரூபா | 2 | 0 | 0 |
| அகடவிகட அமிர்தரஞ்சினி, இதுஓர் அதியற்புத கதாரசக்யானம். இதன் விலை அணா | 0 | 8 | 0 |

இப்படிக்கு,

**பூ. சு. துளசிங்கமுதலியார் அண்டு சன்ஸ்,**
சுந்தர விலாசம் பிரஸ்,
பிரம்பூர் பாரக்ஸ் போஸ்ட், மதராஸ். என்.

சுந்தரகணேசர் துணை.

# அகடவிகட
# அமிர்த ரஞ்சினி.

## கணபதி ஸ்தோத்திரம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்

திருவளரும் ஜெகமீது ஜெனித்துலவும் மாந்தர்கட்குத்
திகழ் ஞானத்தை
அருமையதாய்ப் போதிக்கும் அமிர்தரஞ்சினி யென்னும்
அழகியின் றன்
பெருமையுறும் சரிதையினை செந்தமிழா லினிதாக
பேசுதற்குத்
தருமநெறி தவராத யெனதுகுரு கணபதியும்
துணை செய்வாரே.

திருவளர்ஞானச் செங்கதிரோன் பிரகாசித் துளதாகிய பரத கண்டத்திற் சிறப்புறுந் தன்மையாய் விளங்கிய காஸ்மீகர் தேசத்தில் அநேககாலமாய் வியாபாரஞ்செய்து வெகுபொருள் சேகரித்து தனவந்தனாயிருந்த தனபாலபூபதியென்றொரு வைசிய னிருந்தனன். அவனுடைய கால வித்தியாசத்தினால் வல்லாள கண்டியென்னும் ஓர்பெண்ணைக் கலியாணஞ் செய்துகொண்டு வியாபாரத்தை நடத்தாமல் வறுமையாக அவனுக்கு மகப்பேறின்றிய மனவருத்தத்தை முன்னிட்டு சதாகாலமும் பகவத்யானஞ் செய்துக்கொண் டிருந்தனன். அச்சமயம் ஓர்மஹான் அந்த தனவந்தனிடம் வந்தனர்.

அவன் அவரைப்பணிந்து உபசரித்து அவருக்கு வேண்டிய நல்லுணவளித்து தனது ஏகாந்தஸ்தானத்தி லழைத்துச்சென்று தனது மனக்குறையை அவரிடம் புகன்று சுவாமி உலகிற்பிறந்த மனிதர்களுக்கு புத்திரபாக்கிய மில்லையேல் சுவர்க்கபதவி யில்லையென்பதாய் மார்க்கண்டேய புராணத்தில் முறையிடுவதினால் யான் எத்தகையதாகிய தானதர்ம பரோபகாரம் புரிந்திடினும் பயனென்னவென்பதாய் விசனமடைந்தனன். இவன் மனக்குறிப்புணர்ந்த மஹான் புந்நகைபுரிந்து சொல்வதாயினர்.

சந்நியாசி:— ஐயா! நீர் இதற்காக யாதும் சந்தேக மெயிதா தீர் யாதொருவருக்கும் மைந்தர் ஜனிப்பதும் மனையாள் வாய்ப்பதும் தெய்வச்செயலன்றி மற்றவையன்றென யோசிப்பீர்,

தனபாலபூபதி:— சரி அவ்விதமாயின் யான் யாதொருவருக்கும் அநியாயம் புரிந்திலேன் அவ்விதமிருக்க எனக்கு இத்தகைய தாயாயின காரணமென்ன?

சந்நியாசி:— அப்பா! யாதாமொருவருக்கும் பூர்வீக வினைப் பயனால் மைந்தர்ஜனிக்கத் தவமியற்றிடினும் சஞ்சிதத்தில் அவரவர் செய்யும் தானதர்ம பரோபகார குணத்தில் மகப்பேறுண்டாகும், ஆகையால் நீ இதைக்குறித்து அஞ்சவேண்டாம் யானுனக்கு விபூதி பஞ்சாக்ஷரம் தருகின்றேன் இதனை உனது மனையாளுக்குத் தருவாயாகில் அவள் அதனைப் புசித்தவுடனே கர்ப்பவதியாவாள்

என, புகன்று தனபாலன்கரத்தில் விபூதிபஞ்சாக்ஷரம் கொடுத்துவிட்டுத் தனது வாசஸ்தானத்திற்கு போயினர். அப்பால் தனபாலபூபதி தனது மனையாளுக்கு சந்நியாசிகொடுத்த விபூதிபஞ்சாக்ஷரத்தைக் கொடுத்துப் புசிக்கச் செய்தனன். வைசியப்பெண் விபூதியைப்புசித்து பகவத்பக்தி யானந்தமா யிருக்கையில் தசம திதியும் நிறைந்து ஓர்சுபதினத்தில் ஓர்ஆண்குழந்தையை யீன்றனள் அதனைக் கண்ணுற்ற வைசியன் மனமகிழ்ந்து தனது புத்திரனுக்கு வீரப்ரகாசனென பெயரிட்டு வெகு மேன்மையாக வளர்த்துக் கொண்டிருந்தனன் அவனோ மஹாசமர்த்தனாகவும், பிறர்பொருளை வஞ்சிக்கும் பேயனாகவு மிருந்தபடியால் மறுபெயர் துர்க்குணனென சிறப்புப்பெய ரமைந்துவிட்டது. அவனுக்குப் பிறகு ஓர் பெண்குழந்தைபிறந்தனள். அவளோ அழகானந்த முகவஜீகரமமைந்த சுந்தரியா யிருந்தனள். இதனைக் கண்ணுற்ற தாய்தந்தையர் மனமகிழ்ந்து, அந்தப் பெண்ணுக்கு அமிர்தரஞ்சனி யென் பெயரிட்டு வெகு மேன்மையாக வளர்த்துக்கொண்டு வருவதாயினர்.

இங்ஙனம் இவர்கள் இவ்விதமா யிருக்கையில் அங்ககரிலிருக்கும் தீயன்யென்னும் ஓர்வைசியன் திரைகடலோடினுந் திரவியந் தேடு யெனும் வாக்கியத்தை மனதி லடக்கிவைத்துக்கொண்டு பற்பல தீவுகளினும் சென்று வெகுபொருள் சேகரித்தும் அதனைச் செலவு செய்ய மனமில்லாமல் மதியீனனெனும் தனது அருமை புத்திரனை அருகில் வரவழைத்து தனது லோபகுணத்திற் கிசைந்த விதமான பிரசங்கஞ் செய்வதாயினன்.

தீயன்:— அடா மகனே! நீ ஔவையார் அருளிச்செய்த ஆத்தி சூடியை வாசித் துணர்ந்தாயா?

பேயன்:— ஆ! ஹா! வாசித்துணர்ந்தேன்? ஆனாலும் ஔவை யானவள் தையல்சோற்களே லெனும் வாக்கியத்தை சொல்லி யிருப்பதினால் அதுநமக்கு சரியல்லவென்று தடுத்துவிட்டேன்.

தீயன்:— அப்படி சொல்லாதே ஔவை சொன்னதெல்லாம் சரி யே! எவ்விதமென்றால் முதலில் அறஞ்செய விரும்பு, யென் றிருப்பதைமாத்திரம்அனுசரிக்கலாகாது ஏனென்றால்முதலில் சொன்னதை விடுத்து அப்பாற் சொன்னபதங்களாகிய திரை கடலோடினும்திரவியந்தேடு,என்பதையனுசரித்து யான்அநேக தீவுகளிற்சென்று பற்பல விதமாகிய வியாபாரங்கள் செய்து பத்துலக்ஷ விராகன் வரையினும் சேகரித்தேன் ஆனாலும், நீ தேடாதழிக்கில் பாடாய்முடியு மென்பதை யனுசரித்து நீதேடா த பெர்ருளாகிய இந்த பத்துலக்ஷ விராகனையும் செலவு செய் யாமல் பொன்காத்த பூதம்போல காவலிருந்து பொருள்தனைப் போற்றிவாழ் யென்பதாயிருந்தால் நாம் சதாகாலமும் தனவந்த ராகவே யிருக்கலாம் ஆனால் எனக்குப்பிற்கு நீ எவ்விதமாய் ஜீவிப்பாய்?

பேயன்:— தந்தையே! பிழைக்கும்வழி பலவித மிருக்கின்றது. யாதாமொரு பெண்ணைக் கலியாணஞ் செய்துக் கொண்டால் அவளுடைய தாய் தகப்பனார்களால் ஜீவித்துக் கொள்வதற் காகும்.

தீயன்:— ஆ! மகனே! நரிவயற்றில் முயல்பிறக்குமா? யென்பது போல உனது தாயாகிய மாபாவிவயற்றில் பிறந்த நீயென்ன மஹா சமர்த்தனல்லவோ? நல்லதிருக்கட்டும் யாதொருகாசும் செலவுசெய்யாமல் மாமியார்வீட்டில் சாமியாரைப்போல சுகா னுபவத்துடன் அன்னவஸ்திரங் குறையின்றி எவ்விதமாய் ஜீவித்திருப்பாய்.

பேயன்:— ஆ! ஈதென்ன இது தெரியா தந்தையே?

கலி விருத்தம்.

பெருத்த செல்வங்கள் எப்படி வருமெனின்
உருத்தும் உண்மையாய் நடந்திடில் வந்திடா
கருத்துண் மிஞ்சிய மோசமும் நாசமும்
பொருத்தி யூரை புரட்டிட வேணுமே

என்னுந் தன்மையாய்த் துர்க்குணத்தை துணைவகித்த சில நய வஞ்சகர்கள் ஊராருடமைக்குப் பேயாய்பறக்குந் தன்மையாய் பல வித ஆசைவார்த்தைகளைப் பேசுவதுபோல மாமியாரிடத்தில் மிக வும் பாசமாய் பேசிக்கொண்டிருப்பதும், இன்னும் உற்றார் உறவின் முறையாரனைவருக்கும் மெத்த உத்தமனைப்போலிருந்து பற்பலவிட ங்களிலும் விருந்துபுசித்துக்கொண்டும் காலங்கழித்தால் நமது கைப் பணம் செலவாகாது இதுதான் தகுந்த யோசனையாகும். இதனாலே தான் சில தனவந்தர் வீட்டுப்பிள்ளைகள் அழகில்லாத பெண்களாயி ருந்தாலும் மாமியார் மாமனார் மைத்துனர்கள் இன்னும் பலவிதமா ன உற்றார் உறவின்முறையார் நிறைந்தபெரியகுடும்பத்தின் பெண்க ளாயிருந்தால் விஸ்வாச பூனையைப்போல அவர்கள் வீட்டு அடிமை களைப்போல மிகவும் பரிதாபமாய்ப்பேசி அழகினால் பெருமைகிண்ட யாது அறிவுதான் பிரதான மென்று தந்திர வார்த்தைப் பலவித மாய் உபயோகித்துக் கலியாணஞ் செய்து கொண்டு சதாகலமும் புது விருந்தாளிகளைப்போல கண்டவிடத்திற் புசித்துக்கொண்டிருப் பார்கள் இது தான் நயவஞ்சக மருமகப்பிள்ளைகளி னியல்பு.

தீயன்:— ஐயோ அவ்விதமாய் நினையாதே

விருத்தம்.

ஒப்புடன் முகமலர்ந்து உபாயமாய் வரவழைத்து
உப்பிலாக் கூழைவார்த்து ஊருகாய் கையிலிட்டு
தொப்பையின் வஸ்திரத்தில் துட்டிருக் கிறதைப்பார்த்து
கப்பெனஅபகரித்தல் கடமையாம் உறவினர்க்கே.

என்னுந் தன்மையாய் உறவின ரதிகமாயிருக்கும் வீட்டில் பெண்கொண்டால் நல்லவார்த்தை பேசிக்கொண்டே கையிலிருக் கும் காசையெல்லாம் அபகரித்துக்கொண்டு ஏழையாகச் செய்து விடுவார்கள். ஆனால் தாயைப்பார்த்து பெண்ணைக்கொள் நூலைப்பார் த்து சேலைக்கொள் தன்மையாய் யாராவது குண்டுணிகளை விடு த்து பெண்பார்க்கச் சொன்னால் அவர்கள் பலவிடத்திலுந் திரிந்து நல்ல பெண்களாய்ப் பார்த்து கலியாணஞ் செய்வார்களென்று தனது கெடுமதிக்குத் தகுந்த விதமாய்க் கேடுவரும்போது மதி கெட்டு வருமென்னுந் தன்மையாய் திருட்டுத்தனத்திற் கிசைந்த குருட்டு யுக்திகளைப்பேசிக் கொண்டிருக்கையில் அவனுடைய மனை யாளாகிய மாபாவி தனது மணாளனுடைய சமர்த்திற்கும் மைந்தனு டைய தந்திரத்திற்கும் மனமகிழ்ந்தவளாய்ச் சொல்வ தாயினள்.

மாபூாவி:— நாயகா ? நமது மைந்தனாகிய பேயன் தனது பெயருக்கிசைந்த குணமுடையவனாகவே யிருப்பான். ஆனாலும் நாம் போய் பெண்பார்த்தால் யாதொருவரும் சம்மதியார் யாவரேனும் குண்டுணிகளுக்கு சம்பளம் கொடுத்து பெண் பார்க்கும் படியாய் தூதனுப்பினால் அவர்கள் தமது நய வஞ்சக மோசத்திற் கியன்றவிதமாய்ப் பேசி யாவரையேனும் துணைகொண்டு தனவந்தர் வீட்டுப் பெண்களையே பார்த்துக் கொண்டு வருவார்கள் இதுதான் தகுந்த யோசனையாகும்.

பேயன்:— ஆம்! ஆம்! இதுதான் என் மனதிற்கிசைந்த இஷ்டம் ஆனாலும் தாயிருந்தால் சாவுகிடையாதென்பது போலவே நினைக்கவேண்டும், ஆனால் அன்னையுந் தந்தையும் முன்னறி தெய்வம் என்றாலும் தாய் சோற்றுறந்தால் வாசகமில்லை யென்னும் பதத்தை யனுசரித்திருப்பது தான் உலகியல்பு.

தீயன்:— என்னடா மகனே! தந்தை சொன்மிக்க மந்திரமில்லை யென்னும் பதத்தை யனுசரித்தால் உத்தமமல்லவோ? துவாபரயுகத்தில் துரியோதனன் தனது தந்தையாகிய திருதராஷ்டிரனுடைய வார்த்தையை சிரமேல் வகித்திருந் ததினாலல்லவோ பஞ்சபாண்டவர்களை காட்டுக்கனுப்பி பலதுயரடைந்தாலும் நாட்டுக்கு அரசனாய் விளங்கியிருந்தான் இவை கவனியாமல் தாய் சோற்றுறந்தால் வாசகமில்லை யென்னும் பதத்தை மாத்திரம் யெடுத்துக்கொண்டு தந்தைசொன்மிக்க மந்திரமில்லை, யென்னும் பதத்தை அலக்ஷியமாய் மதித்துத் தள்ளிவிட்டாயே ஈதென்ன நூதனமான புதுமை?

பேயன்:— தந்தையே! தாங்கள் சொல்வது யாதொருவருமின்றிய ஏழைப் பெண்ணைக் கலியாணஞ் செய்துக் கொள்ளச் சொல்கின்றீரே அது தகாது ஏழைகளுக்கு மனோகர்வம் அதிகமாயிருக்கும். பெரிய குடும்பத்திற் பிறந்த பெண்களாயிருந்தால் அடக்கம், பொறுமை, தயாளம் முதலான நற்குணங்களும் பொருந்தி யிருக்கும். எனது தாயும் அவர்களைப் பலவித துன்பஞ்செய்தாலும் நம்மை எதிரிட்டு சண்டை செய்ய அஞ்சுவார்கள். ஆகையால் எப்போதும் தனவந்தர் வீட்டுப் பெண்தான் எனக்கிஷ்டம்.

2

என, தந்திரசமர்த்திற் கிசைந்தபடியாய்ச் சொல்லிவிட்டான். இங்ஙனம் இவர்கள் இவ்விதமா யிருக்கையில் மாபாவியின் சேனைக ளாகிய கோள்சொல்லி, குண்டுணி, வாயாடி, பஜாரி, முதலாகியவர் களெல்லாம் தமது வழக்கத்தைப்போல தமது சிநேகிதமாயிருக்கும் மாபாவியின்வீட்டுக்கு வந்தார்கள். அச்சமயம்மாபாவி அவர்களனை வருக்கும் உபசரணை செய்து உட்கார வைத்துக்கொண்டு அண்டை வீட்டா ரிவ்விதம், எதிர் வீட்டா ரிவ்விதம், பக்கத்து வீட்டா ரிவ்வித மென்று ஊர் சமாச்சாரத்தை ஒன்றுக்குப் பத்தாய் பேசிக் கொண்டிருந்து தந்திரமாய் அவர்களனைவரையும் அனுப்பிவிட்டு வாயாடியை மாத்திரம் பக்கத்தில் உட்காரவைத்துக் கொண்டு தந்திரமாய்ச் சொல்வதாயினள்.

மாபாவி:— அம்மா! யான் பிள்ளையை பெற்றதினால் பிரயோசனமென்ன என்மகனுக்கு இருபது வயதாய்விட்டது. அடித்து மிரட்டி அதிகாரஞ் செய்ய மருமகளில்லையே யென விசனப்படுகிறேன். உமது மூலமாய் யாவரேனும் தனவந்தர் வீட்டு பெண்களா யகப்படுவார்களா?

வாயாடி:— ஆ! அதற்கென்ன இந்தக் கையினால் எத்தனையோ ஏழைவீட்டுப் பெண்களை தனவந்தர் வீட்டுப் பிள்ளைகளுக்கும் தனவந்தர் வீட்டுப்பிள்ளைகளை ஏழைவீட்டுப் பெண்களுக்கும் கலியாணஞ் செய்து வைத்து பெரிய எருமை பேரெடுத்ததுபோல் சகலருக்கும் யானே சகாயமா யிருக்கின்றேனே உங்களுக்கு மாத்திரம் சகாயம் செய்யமாட்டேனோ? அவ்விதமாய்த் தாங்கள் சந்தேகப்பட வேண்டாம். இப்போதே உத்தரவானால் யாவும் சரிபடுத்தி விடுகிறேன் ஆனால் கொஞ்சம் திரவியம் வேண்டும்

மாபாவி:— என்ன அப்தா! வாய்ப்பேச்சுக்குக் காசுவேண்டுமென்றால் நம்மைப்போல உத்தமா பத்தினிகள் பரிகாசிக்க மாட்டார்களா?

வாயாடி:— ஆ! அவ்விதமாய் நினையாதே அண்டைவீடு, பக்கத்துவீடு, எதிர்வீடா யிருந்தாலும் பரவாயில்லை. நமது குணத்திற் கிசைந்த பெண்கள் வேண்டியதா யிருந்தால் கொஞ்சம் தூரதேசத்தில்தான் பார்க்க வேண்டும்.

மாபாவி:— ஆம்! ஆம் !! அது ஞாயந்தான் இந்த தேசத்தின் பெண்களைக் கொண்டால் நாம்பலவிதமாய் அடித்து மிரட்டி பயங்கரப்படுத்த முடியாது ஏனென்றால் யான் கையாடினால் அவள் வாயாடித்தனமாய் இறைச்சலிட்டால்அண்டைஅயலார் ஓடிவந்து சண்டையோ வெனக்கண்ணுற்று அந்தப் பெண்களின் தாய்தந்தையிடம் தெரிவித்தால் அவர்கள் ஓடிவந்து நம்மை யெல்லாம் அடித்து உதைத்து இடுப்பை யொடித்து பெண்ணுடனே பிள்ளையையும் அழைத்துக் கொண்டு போய் விடுவார்கள். அப்பால் இவ்வளவு கஷ்டப்பட்டும் இஞ்சித்தின்ற மந்தியைப்போ லுட்கார்ந்திருக்க வேண்டியதாயிருக்கும். ஆகையால் காசுசெலவானாலும் வெளிதேசத்தின் பெண்ணாகவேயிருக்கவேண்டும்

வாயாடி.— சரி அவ்விதமானால் முந்நூறு விராகனாகிலும் கொடுத்தால் உங்களிலும் பெரிய தனவந்தர் வீட்டுப் பெண்களையே பார்த்துக்கொண்டு வருவேன்.

என, புகன்றனன் இவள் வார்த்தையையே மெய்யென்று நம்பிய மாபாவிக்கு மாத்திரம் பணங்கொடுக்கச் சம்மதமானாலும் மணாளனாகிய தீயனுக்கும், மைந்தனாகிய பேயனுக்கும் தெரிந்தால் (ஆற்றில்மூழ்கி இறந்தாலும் ஓடக்காரனுக்கு ஒருகாசும் கொடுக்கலாகாது) என்னுந் தன்மையாய் ஐயோபணமே கைவிட்டுப்போகாதேயென்று பணத்தை பத்திரப்படுத்தி விடுவார்களேயென மனமெலிந்தவளாய் வாயாடிக்குத் தந்திரமாய்க் கண்ஜாடை காட்டி அனுப்பிவிட்டு தனது மணாளனுக்கும், மைந்தனுக்கும் பலவிதமாகிய வார்த்தையைப் புகன்று அந்திப்பொழு தானவுடனே இராப்போஜனம் புசித்துவிட்டு கண்ணுறங்கி நித்திரைபுரிந்து அருணோதயத்தில் விழித்தெழுந்து ஸ்நானபானஞ்செய்து பலகாரபக்ஷணம் புசித்தானபிறகு தீயனும், பேயனும தமக்கிஷ்டமானபடி வெளியே போய் விட்டனர்கள்.

இங்ஙனம், இவர்கள் நினைவு இவ்விதமா யிருக்கையில் வாயாடி யானவள் தனக்கு முந்நூறு விராகன் கிடைக்கவேணுமென்னும் நினைவையே மனதில் வகித்திருந்தவளான படியால் அன்றிரவு முழுதும் நித்திரை யில்லாமல் விழித்திருப்பதும் ஐயோ இன்னும் பொழுது விடியவில்லையே யென்று வருத்தப்படுவதும் சிலசமயம் கண்மூடினால் நித்திரையில் நினைவுமாறி கனவில் பணங்கிடைத்தது

என்று கனவு காண்பதுவும் விழித்தெழுந்து பார்த்து கினவிற் கண்ணுற்றபணம் மாயமானபோற்சஞ்சல மடைவதுமாய் அன்றிரவொரு யுகமாய்க்கழித்து விடியற்காலத்தி லெழுந்துபார்க்கையில் பொழுது விடிந்து விட்டது இனிமாபாவி வீட்டுக்குப் போனால் பணப்படையல் கிடைக்கு மென மனமகிழ்ந்தவளாய் ஸ்நான பானஞ் செய்துக் கொண்டு பலகாரபக்ஷணம் புசித்துவிட்டு வெற்றிலையை கையிலெடுத்துக் கொண்டு பாக்கை மென்று தின்றுக்கொண்டு சுண்ணும்புக்கு வருவதுபோல மாபாவியின் வீட்டுக்கு வந்தனள்.

வாயாடி;— அப்தா! சுண்ணும்பு இருக்கின்றதா?

மாபாவி:— ஆ! என்ன அப்தா! உனக்காக பலகாரமும் வைத்திருக்கின்றேனே நீஎன் தாம்பூலம் தின்கின்ருய் இதுவும் உன் சொந்தவீடுதானே.

வாயாடி,— ஆ! யானென்ன அவ்விதமாய் பேதகம் நினைப்பேனே? யான் இன்னுந் தாம்பூலந் தின்னவில்லை இதோ பார்த்தனை வெற்றிலையைக் கையில் வைத்திருக்கின்றேன் என்று ப்க்குவமாய்த் தந்திர. வார்த்தைகளாடிக் கொண்டு போய் ஒருபுரமாய் உட்கார்ந்தனள். அச்சமயம் 'மாபாவி, மகா மரியாதை யுடையவளைப்போல தந்திரோபாயமாய் அங்கிருந்தநாற்காலியைக் கொண்டு வந்து போட்டு அப்தா, நாற்காலியின் மீது உட்காருவாயென்று உபசரித்தனள். அந்த வாயாடியும் அவ்விதமே நல்லதென்று சம்மதித்து நாற்காலியைக் கொண்டுவந்து போட்டு அப்தா! நாற்காலியின் மீது உட்காருவாயென்று உபசரித்தனள். அந்தவாயாடியும் அவ்விதமேநல்லதென்று சம்மதித்து நாற்காலியின் மீது உட்கார்ந்திருந்தனள். மாபாவியானவள் ஓர் வெள்ளித் தாம்பாளத்தில் பலகார பக்ஷணங்களை யெடுத்துக் கொண்டு வந்து வாயாடியின்கையில்கொடுத்தாள். அவள் மனமகிழ்ந்து நாம் இரவிற்கண்ட கினவு கைமேல் கிடைத்தாற்போலாச்சுது யென மனமகிழ்ந்து பலகார பஷணங்களைப் புசித்து தந்திர யுக்திகளை தெளிந்து மனோல்லாசமா யிருக்கையில் மாபாவியானவள் முந்நூறு விராகனை மற்றோர் வெள்ளித் தாம்பாளத்திற் கொண்டுவந்து கையிற் கொடுத்தாள் வாயாடி மனமகிழ்ந்து ஆ! ஹா!! நீயன் கப்பலேறி ஆழி சஞ்சாரியாய்ப் பலதீவிலுஞ் சென்று பணம் சம்பாதித்து ஆத்மதுரோகி மஹாபாவியென வயற்றுக்கும்

நாவுக்கும் துரோகஞ் செய்து எடுத்தால் செலவாகுமோ? புசித்தால் செலவாகுமோ வென பணத்தை சேகரித்து பெட்டியில் போடுவதற்கு தெரியும், எடுப்பதற்குதெரியாது சிலசமயம் எடுப்பதற்கு அருகில் நெருங்கினல் பாம்பைக்கண்டு பயப்படுவோர்களைப்போல அப்பப்பா குறைந்து விடுமேயென்று விலகிப்போதுபோல செலவு செய்யாமல் வைத்திருந்த காசுக்கு இப்போது சிறகு முளைந்தவிதமாக இந்த மாபாவியானவள் தான் தேடாப் பொருளுக்கு மாற்றுமில்லை நிறையுமில்லையென்னுந் தன்மையாய் "அடுக்கின்ற அருமை உடைக்கின்ற நாய்க்குத் தெரியுமா" என்னுந் தன்மையாய் இந்த தீயன் பல தீவிலும் சென்று வியாபாரஞ் செய்து திரவியஞ் சேகரிக்க இந்தமாபாவி வீட்டிலுள்ள காசை காட்டிலுள்ள தூஸாய் மதித்து வீண் செலவு செய்ய ஆரம்பித்துக் கொண்டாள் இனி நமக்கு பாக்கியஸ்தானத்து குருதிசையும் அவர்களுக்கு விரயஸ்தானத்து சனிதிசைதானென்று மதித்து மாபாவிகொடுத்த முந்நூறு விராகனையும் வாங்கி மூட்டைகட்டிக்கொண்டு சொல்வதாயினள்.

வாயாடி:— என்ன அப்தா! உனக்கு புதுவழியில் பெண்வேண்டுமோ? பழைய வழியில் பெண் வேண்டுமோ!

மாபாவி:— இவையனைத்தும் உனக்குத்தான் தெரியும். உனது பெயருக்குத் தகுந்த குணமமைந் திருப்பதினல் உனக்குத் தெரியாத யோசனையா! ஆனல் யான் எவ்விதமாய் தூஷித்திகழ்ந்து அடித்து உதைத்தாலும் யாதொருவருக்கும் தெரியாமலிருக்க வேண்டும், சில பெண்கள் மாமியார் கையாடாததற்கு முன்னமே வாயாடிகளாய் கூச்சலிடுவதும் அவர்களுடைய சொந்தக் காரர்கள் ஓடிவந்து நம்மை யெல்லாம் அடித்து உதைத்து இடுப்பை யொடித்து விடுவதும் பார்ப்பவர்கள் நம்மை பரிகாசஞ் செய்வது மாயிருப்பது கூடாது. இதற்காகவே உனது துணையையான் வேண்டி முந்நூறு விராகனையும் மொத்தமாய் உனக்கு கொடுத்திருக்கிறேன்.

வாயாடி:— இது நியாயந்தான் அதற்காகவே உன் இஷ்டத்தை விசாரித்தேன் நீயும் சரியாய்ச் சொலவி விட்டாய் ஆகையால் கண்காணு தேசத்தின் பெண்கொண்டு வந்தால் தான் உனது இஷ்டத்திற்கு கஷ்ட மில்லாமலிருக்கும் உள்ளூரின் பெண் கொண்டு வந்தால் உனது வாய்க்கும் கைக்கும் உனக்கு அடி உதைக்குப் பஞ்சமில்லாமற் கஷ்டப்படுவாய்.

மாபாவி:— ஆம்! ஆம்!! அப்படிதான் செய்யவேண்டும் உனக்கு தெரியாதயோசனையா?

வாயாடி:— சரி அவ்விதமானல் அநியாயபுரியில் எனது மகள் வாழ்கின்ருள். அங்கு சென்று விசாரித்துப் பார்க்கின்றேன். அங்ஙனம் கிடைக்கா விட்டால் ஆச்சரிய புரியில் என்தங்கை வாழ்கின்ருள் அங்கு சென்று விசாரிக் கின்றேன். அங்கும் பெண் கிடைக்காமற் போனுல் காலற்றவூர் உடலற்றவூர் தலையற்றவூர்களிலெல்லாம் திரிந்து என்னலானமட்டும் விசாரித்து தாய் தகப்பனில்லாத பெண்ணைப் பார்த்து அழைத்துக் கொண்டு வருகின்றேன்.

மாபாவி:— ஆம்! ஆம்!! அப்தா! அப்படிப்பட்ட பெண்களிருந்தால் தான் எனதுவாய்க்கும் கைக்கும் சரியாயிருக்கும். நீமாத்திரம் எனக்கு இவ்வளவு சகாயம் செய்தால் நமது வீட்டில் எந்நாளிலும் அலங்காரமாய் வேடிக்கையாகவே யிருக்கும் அப்போது தான் யான் பிள்ளையைப் பெற்ற பெருமை கிடைக்கும் யானும் வெகுநாளாய் சரியான மருமகளில்லையே யென விசனப்பட்டுக் கொண்டு மருமகளில்லா வீடு மயான மென்பதற்குச் சரியாய் யாதொரு சந்தடியு மில்லாமல் இஞ்சிதின்ற மந்திரியைப்போல உட்கார்ந்து உறங்கிக்கொண்டு மூதேவியை ஸ்தோத்திரஞ் செய்பவனைப்போல சதாகாலமும் நித்திரை செய்துக் கொண்டிருப்பேன். அந்த கிழட்டொடிவானும் சரியானவனல்ல எந்நேரமும் கப்பல்மீதமர்ந்து ஆழிசஞ்சாரியாய் பலதீவுகளிலும் திரிந்துக் கொண்டிருக் கின்ருன் எப்பொழுதாகிலும்அவன் வீட்டுக்குவந்தால்வீட்டேக்கழகுவீண்சண்டை செய்தல் என்னும் வாக்கியத்தை யனுசரித்து கொஞ்சநேரம் வாயாடினல் பதிற்சொல்லாமல் மவுனம்கலகநாஸ்தியென்னும் வாக்கியத்தை வாயிலடைக்கி வைத்துக் கொண்டவனைப்போல பயந்து ஓடிப்போகிருன். இவ்விதமா யிருக்கின்றது என்னுடைய பிழைப்பு யான் பெண்ணைப்பிறந்த குறை போதும் போதுமம்மா என்று அழுதாள்.

இவையனைத்தும் கேள்வியுற்ற வாயாடிக்கு மனதில் மஹா சந்தோஷமும் முகத்தில் மூதேவிசஞ்சலமுமாய் பொய்யழுகை யழுதுக்கொண்டு, அம்மா மாபாவி, நீ இனிமேல் விசனப்படாதே யானுனக்கு சரியான மருமகளாய் அழைத்துக்கொண்டு வருகிறேனென்று அவளுக்கு பலவிதமாகிய ஆசைவார்த்தைகளைச் சொல்லிவிட்டுத் தனது வீட்டுக்கு போய்விட்டாள்.

இங்ஙனம் இவர்கள்நினைவு இவ்விதமாயிருக்கையில் வெளியே போயிருந்த தீயனும், பேயனும் வீட்டுக்குவந்துவிட்டார்கள். அச்சமயம் மாபாவியானவள் அவர்களுக்கு அன்னம்படைத்து தானும் புசித்து மனோல்லாசமா யிருந்தனள். அச்சமயத்தில் தனது மகனுக்குக் கலியாணஞ் செய்யும் விஷயத்தை மணாளனுக்குச் சொல்வதாயினள்.

மாபாவி:— நாயகா! நமது அண்டைவீட்டு அப்தாவாகிய வாயாடி நமது மகனுக்கு பெண் பார்க்கவேணு மென்று வெகு பிரயாசை யெடுத்துக் கொண்டிருக்கின்ற படியால் இனிமேல் நமக்கு நல்ல காலம் சமீபித்து வந்து விட்டது.

தீயன்:— ஆம்? அப்படியா மெத்த சந்தோஷம். தனவந்தர் வீட்டுப் பெண்ணாகவே யிருக்க வேண்டும். ஆனால் நமது காசு செலவாகாமல் அவர்கள் பணத்தையே அடிக்கடி வசூலித்துக் கொண்டிருக்கும் பெண்ணாகவே யிருக்கவேண்டும் சம்மந்திகள் நம்மைக்கண்டால் மனமிரண்டு நாம்கேட்டதை யெல்லாம் கொடுக்கவேண்டும். இவை யனைத்தும் முன்னதாய் விசாரித்துப் பார்த்துக் கொண்டு கலியாணஞ் செய்தால் உத்தமமாயிருக்கும்.

மாபாவி:— அடடா! யானென்ன அற்பமானவளா! மாபாவியென்றால் மாதாபிதாவும்மனமிரண்டு பயப்படுவார் களெனின் மற்றவர்கள் அஞ்சி நடுங்குவதற்குப் பஞ்சமா? இவையனைத்தும் எனக்கு சொல்லாதே எனது பெயருக்குத் தகுந்த குணமாகவே யிருப்பேன்.

பேயன்:— அம்மா என்மனதிலோர் ஆசையிருக்கின்றது. அது என்னவென்றால் சிலர் கைநிறைந்த பொன்னைப் பார்க்கினும் கண்ணுக்கிசைந்தபெண் இருந்தாற் போதுமென்பார் யான்அவ்விதமாய் அற்ப சந்தோஷப் படவில்லை. பெண்ணும் நவரத்னகசிதமயமாய்த் துலங்கும் ஆடை ஆபரண சிங்காரலங்கார அழகானந்த முகவஜீகரமாயிருக்கவேண்டும், ஆஸ்திபூஸ்தியில் குறையாத தனவந்தர் வீட்டுப் பெண்ணாகவு மிருக்க வேண்டும் அப்படிப்பட்ட பெண்ணையே தேடிப்பார்த்து எனக்கு கலியாணம் செய்ய வேண்டும்.

மாபாவி:— அடா மகனே! யானென்ன அவையனைத்தும் கவனியாமல் கலியாண காரியத்தைத் முடித்து விடுவேனோ? நமது அண்டைவீட்டு அப்தா வாகிய வாயாடி யம்மாளுக்கு முன்னமே சொல்லி யிருக்கிறேன். இதைக்குறித்து நீங்கள் பேச வேண்டாம்.

என தனது மனதிற்கிசைந்த குருட்டு யுக்திகளை நினைந்து வஞ்சமையாளன் அரசனுனல் தரணியைப்புரட்டிவிட நினைப்பதுபோல பலவிதமான யோசனைகளை செய்து கொண்டிருந்தாள். வாயாடியோவெனின் மாபாவி மகனுக்கு கலியாணஞ் செய்ய பெண்பார்க்கப் போகிறேனென்று எனது வீட்டில் சொல்லி விட்டு தனது கையிற் சிக்கிய முந்நூறு விராகனையு மெடுத்துக்கொண்டு தன்மனதிற்கிசைந்த தேசத்திற் சென்று ஓர் வீட்டை வாடகைக்கு வாங்கி அங்கு தனக்கு வேண்டிய உணவாதிகளை வாங்கிக் கொண்டு வந்து பக்குவமாய் சமைத்து மதுமாம்ஸ பக்ஷணாதிகளுடன் மனோல்லாசமாய் புசித்து மனோகர்வத்துடன் அங்கிருக்கும் துர்க்குணமமைந்த பெண்களுடன் ஊர் நியாயங்களைப் பலவிதமாய்ப் பேசிக்கொண்டு வெகு விநோத விகடானந்தமாய் பாஷித்துக் கொண்டு சஞ்சலமின்றியசந்தோஷமா யிருந்தனள்.

இங்ஙனம், இவர்கள் நினைவு இத்தகைய அற்புதமான அகஸ்ய அகடவிகட விநோத வேடிக்கையா யிருக்கையில் தனபாலன் யென்னும் வர்த்தகன் தனது காலவித்தி யாசத்தினுல் தனக்குக் கிடைத்த மனைவி மைந்தருடைய துர்க்குணத்தினுலும் தனக்கு நேர்ந்த வறுமையையும் நினைந்து நினைந்துமனமுருகி அழுதுக் கொண்டிருக்கையில் அவனுடைய மனையாளாகிய வல்லளாகண்டி திடீரென ஓடி வந்து விசாரிப்ப தாயினள்.

வல்லாளகண்டி:— நாயகா! ஏனழுகின்றீர்?

தனபாலன்:— பெண்ணே! யானென் செய்வேன்! எனது வறுமைகாலத்திற் கிசைந்த படியே பலவிதமான கஷ்டநஷ்டம் நேர்ந்து வருத்தப் படுத்து கிறபடியால் என்மனது யாதொன்றையும் கவனியாமல் பலவித சஞ்சல மாகவே இருக்கின்றது நமது புத்திரனுகிய துர்க்குணனே வென்ருல் வர்த்தக விஷயத்தைக் கவனியாமல் வியாபாரி களிடத்தில் சண்டை சச்சரவு செய்துக் கொண்டிருப்பதினுல் அவர்களனைவரும் பேய்க்

குப் பயப்படாவிட்டாலும் வாய்க்குப்பயப்பட வேண்டுமென்பதாய் மனம்வெறுத்துக் கொண்டுபோய் விட்டார்கள். நமது புத்திரியோ வென்றால் தெய்வகன்னியைப் போலிருந்தாலும் சண்டையில் இலங்கணியும் பயந்தோடும் விதமான சமர்த்தமைந்து சண்டையிலே பிறந்து சண்டையிலே வளர்ந்த இராக்ஷசகுண மமைந்திருக்கின்றாள் மனையாளாகிய நீயாகிலும் பத்தாவுக்கேற்ற பதிவிரதை யாயிருந்தால் ஒரு விதமாய் ஜீவிப்பதற்காகும் நீயோ வயற்றுக்கு சோறில்லா விட்டாலும் வாயாடுவதற்குப் பஞ்சமில்லை யென்னுந் தன்மையாய் சண்டைசச்சரவு செய்துக் கொண்டிருக்கின்றாய் இத்தகைய துன்பத்திற் சிக்கிய எனதுளம் எவ்விதமாய் சகித்திருப்பது?

வல்லாளகண்டி:— ஆ! இதற்காகவா அஞ்சுகின்றீர்?

### விகடவிருத்தம்.

வாழ்விலா திருக்கும்போது மகளைவைத் திருக்கவேண்டாம்
தாழ்வுவந் திருக்கும்போது சபைதனிற் செல்லவேண்டாம்
பாழ்கடன் வந்தபோது பதியிலே யிருக்கவேண்டாம்
ஆழ்துயர் வந்தபோது அராக்களை விடவேண்டாமே

என்னுந் தன்மையா யிருந்தால் கஷ்டநஷ்டம் வருமோ இதை கவனியாமல் நீ வீணாய் விசனப்படுவது எங்களைப்போன்ற உத்தம பத்தினிகளுக்குப் பொருந்தாது என்று தனது வல்லாளகண்டி குணத்திற்கியன்ற விதமாய்ச் சொல்லும்போது தனபாலபூபதி கலகலவென் சிரித்து பெண்ணே ஈதென்ன நூதனமாய்ச் சொல்லுகின்றாயே.

### விருத்தம்.

வாழ்வது வந்தபோது மனகர்வங்கொள்ள வேண்டாம்
தாழ்வது வந்தபோது தளர்வரோ தக்கோர் மிக்கோர்
ஊழ்வினைப் பயனுலெய்தும் உடலிதற் கமைந்தவாறே
ஏழையாயிருந்தோர் பல்லக்கேறுதல் கண்டிலீரோ

என்பதாய் அநேக பெரிய மனுஷாள் பாடிக்கொண்டிருக்கின்றார்கள். நீ சொல்வது நீதிக்குச் சரியாகுமா? யென்று சொன்னவுடனே வல்லாளகண்டி பல்லை நெறநெற வெனக்கடித்து சீச்சீ அறிவில்லா எருமைக்குச் சமானமான மணாளனே யான்சொன்ன பாடல் நீதிக்குச்சரியல்ல வென்று சொன்னாயே அதன் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விசேடவுரை, யனைத்தும் விபரமாய்ச் சொல்கின்றேன் கவனிப்பாய்.

விகட விருத்தத்தின்-பதவுரை.

வாழ்விலா திருக்கும்போது=வறுமையினால் வயற்று சோற்றுக்கு வனவாசியாயலைந்து கஷ்ட நஷ்டத்துடன் சுகஜீவன மில்லாதிருக்கும்போது.

மகளை வைத்திருக்க வேண்டாம்=தான் அருமையாய்ப் பெற்ற புத்திரியை எவர்களுக்கும் கலியாணம் செய்து கொடுக்காமல் தன் வீட்டில் வைத்துக் கொண்டிருக்கலாகாது.

தாழ்வுவந்திருக்கும்போது=தன்னுடைய வறுமையினால் கஷ்ட நஷ்டமடைந்து சஞ்சலத்தினால் மனந்திகைத்து தன்னைப் போன்றவர்கட்கு முன்னால் தான் தாழ்ந்திருக்கும்போது.

சபைதனிற்செல்ல வேண்டாம்=எத்தகைய ஜன கூட்டத்திலும் போய் யானும் ஓர் மனிதனென்று பேசக்கூடாது.

பாழ்கடன் வந்தபோது=திரவியஞ் சேகரிக்கத் திறமையின்றி பல பேரிடத்திலும் கடன் வாங்கிக் கொடுக்கச் சக்தி யற்றவனாய் அணைகடந்த வெள்ளம் மேலும் மேலும் புரண்டு வருவது போல அதிகமான கடனாகி விட்டால் பதியிலே இருக்கவேண்டாம்=தனது சுயதேசத்தி லிருக்கலாகாது. ஆழ்துயர் வந்தபோது=தன்னாலும் சகிக்க முடியாத பலவிதமாகிய சஞ்சலத்தின் சகாயமாய் துயரம்வரும் போது சாராயம் குடிப்பதையும் கள்குடிப்பதையும் விடக்கூடாது.

ஷை பொழிப்புரை.

வறுமையினால் வயற்று சோற்றுக்கு வனவாசியா யலைந்து உண்ண உணவற்று உடுத்த வஸ்திர மற்று அன்னமோ ராமச்சந்திராவென்று அலையும் போது அருமையாய்ப் பெற்று வளர்த்த புத்திரியை எவர்கட்கும் கலியாணம் செய்து கொடுத்து விடாமல் தன்வீட்டில் வைத்திருப்பது நியாயமல்ல. தன்னுடையகாலவித்யாசத்திற் கிசைந்த வறுமையின்கொடுமையினால் கஷ்ட நஷ்டமடைந்து காண்போரிகழும் யாசகவேஷமா யிருக்கையில் தன்னுடைய இனத்திற் கூடி ஜாதி ஒழுங்கிற் கிசைந்த நாட்டாண்மை பேசும்படியான சபையிற்போக லாகாது. திரவியஞ் சேகரிக்கச் சக்தியில்லை கடன் வாங்க சக்தியுண்டு யென்னுந் தன்மையாய் பலபேரிடத்திலும் கடன் வாங்கிக் கொண்டு துன்பமடையும் போது தனது சொந்த தேசத்திலிருக்கலாகாது அநேகவிதமான ஆபத்துகள்நேர்ந்து அலைச்சற் படும்போது விசனத்தையகற்றும் துணையமிர்த சஞ்சீவியென்னும் கள்ளும் சாராயமும் கலந்துகுடித்துக்கொண்டே யிருக்கவேண்டும்.

ஷை கருத்துரை.

வறுமையுற்றகாலத்தில் தனது புத்திரியை எவனுகிலும் ஓர் தனவந்தனுக்கு கலியாணஞ்செய்து கொடுத்துவிட்டால். வயற்று பசியதிகரிக்கும்போது மருமகன் வீட்டில் விருந்தாளிபோற் சென்று அன்னபதார்த்தம் புசித்துவிட்டு அகப்பட்ட வரையினும் அபகரித்துக்கொண்டு வரலாகும், அன்னவஸ்திரத்திற்குப் பஞ்சமாயலையும்போது தமது இனத்தினர் சபையிற்சென்ருல் யாதொரு மரியாதையும் செய்யாமல் அலக்ஷியமாய் நினைந்து பலவிதமான வேலைசெய்யச்சொல்லி வயற்றுபசிதணிய அன்னமுங்கொடுக்கார்கள். ஆகையால் அப்படிப்பட்ட கஷ்டகாலத்தில் அந்நியரிடத்திற் சென்று அடிமைவேலை செய்தாலும் அன்னவஸ்திரங் கிடைக்கும். அணைகடந்த வெள்ளத்தைப்போல அளவுக்குமீறி அதிகமான கடனுகிவிட்டால் அநத இடத்திலிருந்தால் பலநாளும் துன்பமேயாகும் ஆகையால் கடன் அதிகமானவுடனே அடுத்ததேசத்திற் சென்று கஷ்டப்பட்டு காசுசம்பாதித்து தனது வயற்றைவளர்த்துக் கொண்டு மீதியானதை சேர்த்துவைத்திருந்து தனது தேசத்திற்குவந்து கடன்காரருக்கு கொடுத்தால் அவர்கள் மனமகிழ்ந்து அப்பப்பா இவன் மஹா உத்தமனென்று வாழ்த்துவார்கள். மறுபடியும் வேண்டுமான பொருளுதவியும் புரிவார்கள். தன்னுலும் சகிக்கமுடியாத மனசஞ்சலம் நேர்ந்தகாலத்தில் வெறியமைந்த கள்ளும் சாராயமும் குடித்துக் கொண்டிருந்தால் மனேற்சாகமதிகரித்துக் கொண்டேயிருக்கும்.

ஷை விசேடவுரை.

யாதாமொருவனுக்கும் திரவியமே சிறந்தது "பணமில்லான் பிணத்திற்குச் சரியானவனென்று" சொல்வதற்காகும் அதனுலே தான் சில அவிவேகிகள்.

விருத்தம்.

பொன்னுடன் மணியுண்டானல் புலையனுங்கிளைஞனென்று
தன்னுடனுறவுகொண்டு ஜாதியில் மணமும் செய்வார்
மன்னராயிருந்தபேர்கள் வகைகெட்டுப் போவாராயின்
பின்னையும் யாரோவென்று பேசுவாரேசுவாரே.

என்னும் பாடலை வாயிலடக்கி வைத்துக் கொண்டு பெற்ற தாய் பசித்திருக்க பிராமண போசனமளித்தால் பலனுண்டாமோ வென்பதையும் கவனியாமல் தனது சகோதரியின் பிள்ளைகள்

ஏழையா யிருந்தால் அவர்களுக்கு யாதேனும் பொருளுதவி புரிந்து தமது புத்திரியைக் கலியாணம் செய்து வைத்தால் தனது சொந்தமும் கலையாம லிருக்கும். தனக்கும் சிலசமயம் நன்மை யாகு மென்பதையும் கவனியாமல் அவர்கள் ஏழையானபோதே ஜாதியும் மாறி விட்டது. அவர்களெனக்கு சொந்தமில்லை யென்று பலவிதமாகிய மாயப்பேச்சு, மந்திரப்பேச்சு, தந்திரப் பேச்சுகளைப் பலவிதமாய்ப் பேசிக்கொண்டு அந்நிய னெவனாகிலும் எந்த ஜாதியாய் இருந்தாலும் அழகின்றிய கிழவனானாலும் சரியே "பொருளுடையொருவன் மருமகனானால் குறையணுகாமல் பெருமையாய் வாழ்வரெனும்,, குருட்டுயோசனை திருட்டுயோசனைகளை செய்து அவரெனது பாட்டனூர்காலத்தின் பங்காளி கூட்டத்தில் மருமகனாகையால் எனது மகளையே அவர்கலியாணஞ் 'செய்து கொள்ள வேண்டுமென்று பொய்சொல்லி விவாகஞ்செய்துவிட்டால் விர்த்தாப்பியகிழவன் எத்தனைநாளைக்கிருப்பான் ஆயுள் முடிந்து மயானமார்க்க மணுகினால் "செத்தவன்வாயில்மண்ணு இருப்பவன் வாயில் சோறு,, என்னுந் தன்மையாய் மஹா விஸ்வாசமுடையவரைப்போல ஓடிவந்து பார்த்தால் "பாட்டிநூற்ற நூலுக்கும் பேராண்டி அரைஞாண் கயிற்றுக்கும்,, சரியா யிருப்பதுபோல மருமகன் கையிருப்புக்கும் கடனுக்கும் சரியானதுபோல பிராணன் பிரிந்தபோதே கடன்காரர்வந்து வழக்கிட்டால் 'செத்தால்தெரியும் உற்றாருமை, யென்பதுபோல யாதொன்றும் மீதியில்லாம லிருந்தால் இஞ்சிதின்றமந்தியைப்போல மனமெலிந்தழுது ஐயோ விதிவ்சமே யானென்னசெய்வேன் பேராசை பொருள் நஷ்டமென்பதுபோலாச்சுதேயென் றழுதுக்கொண்டு போய்விடுவார்கள்,

தனபாலன்:— பெண்ணே! உலகியல்பு இவ்வித மிருக்கின்றதே நாம் எவ்விதமாய் நமது புத்திரிக் கிசைந்த மணாளனைத் தேடுவது?

வல்லாளகண்டி-; மகளிருக்கும்போது மருமகன் கிடைப்பதுதானா கஷ்டம்? அவ்விதமாய்த் தாங்கள் மனவிசாரப் படவேண்டாம்'என் மனதிற் கிசைந்தவ னெவனாகிலும் வந்தால் அவனுடைய ஆஸ்தி பூஸ்திதியனைத்தும் விசாரித்து, அவன் சாகாம லிருப்பவனா யிருந்தால் கலியாணஞ் செய்வோம் இல்லாவிட்டால் நமது மகள் நமது வீட்டிலேயே இருந்தால் வீட்டுக் கலங்காரமா யிருக்கும்.

தனபாலன்:— பெண்ணே! நீ சொல்வது என்மனதிற் கிசைந்தவையல்ல. உலகத்தில் வசிக்கும் மனிதர்கள் உலகியல்பையே யனுசரித்திருக்கவேண்டும். அஃதெவ்விதமென்றால், ஓர்பெண்ணுக்கு சரியான வயது வந்த காலத்தில்,

விருத்தம்.

கன்னிகையைக் கலியாணஞ் செய்யவேண்டும்
கருதுபிதா வித்வானைத் தேடவேண்டும்
அன்னையோ தனவானை நாடவேண்டும்
அழகுளோன் தனையோபெண் தேடவேண்டும்
பன்னுகுரு விவேகியையே பார்க்கவேண்டும்
பந்துக்கள் வம்மிஷனை சேர்க்கவேண்டும்
இன்னவிதம் உலகியல்பிற் குற்றதென்று
இப்புவியின் பெரியோர்க ளுரைத்ததன்றோ.

என்னுந் தன்மையாய் உலகியல்பு இருக்கின்றதே, நீசொல்வது நீதிக்கு விரோதமல்லவோ? யென்று தனது மனதிற் கிசைந்தவை யனைத்தும் சொல்லிக்கொண் டிருக்கையில் வல்லாளகண்டி யென்ன சும்மாயிருப்பாளா அவள் மனதிற் கிசைந்தவை யனைத்தும் சரியாய் சொல்லி வாய்ப்பேச்சினால் ஜெயித்துக்கொண்டவளைப்போல சாமார்த்தியமாய்ப் பேசினாள். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற தனபாலன் மனையாள் வார்த்தைக்கு பதில் சொல்ல முடியாமல் மவுனமாயிருந்துவிட்டான்.

இங்ஙனம் இவன் நினைவு இவ்விதமா யிருக்கையில் அமிர்தரஞ்சினியானவள் ஓர்நாள் தனதுதாயாகிய வல்லாளகண்டியை விசாரிப்பதாயினள்.

அமிர்தரஞ்சினி:— அம்மணி! நீ மாத்திரம் புருஷனுடன் சுகானந்தமா யிருக்கின்றையே யானும் அவ்விதமா யிருக்கவேண்டுமல்லவோ?

வல்லாளகண்டி:— என்னடி! மகளே! உனக்குக் கொஞ்சமேனும் வெட்கமில்லையா? உனக்கும் ஓர் புருஷன் வேணுமென்று என்னிடம் கேட்கின்றையே ஈதென்ன ஆச்சரிய காக்ஷியாயிருக்கின்றதே.

அமிர்தரஞ்சினி:— ஆ! ஈதென்ன ஆச்சரியகாசுஷியென்றுசொல்லுகின்றாயே நீமாத்திரம் மணாளனுடன் மனோல்லாசமாய் வாழ்ந்துக்கொண் டிருக்கவில்லையா? அப்படிதானே யானு மிருக்க வேண்டும். அவ்விதமின்றி நீங்கள் சுகானந்தமாயிருக்க யான் மனவிசாரமாயிருப்பது நீதியாகுமோ? சரி! சரி! உன்னைப்போன்ற தாயிருந்தால் உலகில் நன்ருய் பிழைக்கலாம் சீச்சீ! மூதேவி முண்டை.

வல்லாளகண்டி:— என்னடீ! மகளே! எனக்கு மங்கிலிய மணிந்த மணாளன் உயிருடனே எதிரில் மரம்போல நின்றிருக்க நீ கொஞ்சமேனும் ஆலோசனை யில்லாமல் முண்டை யென்று சொல்லுகின்றாயே உனக்கென்ன அறிவில்லையா? இதோபார் என்கழுத்தில் மங்கிலியம்? இந்தக்கயறுதானே உங்களை யெல்லாம் பெற்று வளர்த்திடச் செய்தது.

அமிர்தரஞ்சினி:— (கையைத்தட்டி கலகலவென சிரித்து) சீச்சீ கழுத்தில் கயிறுகட்டிக் கொண்டிருந்தால் பெரிய மனுஷியாய் விட்டாயோ! ஆடு, மாடு, குதிரை, நாய் முதலான அறிவில்லா மிருகங்களுக்கெல்லாம் கழுத்தில் கயிறுகட்டி யிருப்பதுபோல அறிவில்லா எருமையைப்போல உனக்கும் கழுத்தில் கயறுகட்டி யிருந்தால் சாமார்த்திய முடையவளென்று உனது காலை நீயே கும்பிடுவதுபோல உனக்கு நீயே நமஸ்காரஞ் செய்துக்கொண்டால் ஆசிர்வதிப்பவர்யார்?

வல்லாளகண்டி:— ஈதென்ன ஆச்சரியம்? யானென்னவல்லாளகண்டியாயிருந்தால் நீஎன்னிலும் அதிகசாமார்த்தியமுடையவளாய் பேசுகின்றாயே இனியானென்ன செய்வேன்?

அமிர்தரஞ்சினி:— அதனாலேதான் உன்னை மூதேவி முண்டை யென்று சொன்னேன் நீநல்லவளாயிருந்தால் மருமகன் துணையுடனே இருக்கமாட்டாயோ?

வல்லாளகண்டி:— மருமகன் துணையாவதென்றால் யாவரேனும் நம்புவார்களோ? மகளுக்கு மருமகன் துணையும் மங்கையர்க்கு மணாளன் துணையென்பதும் மாநிலத்தியல்பு. இவ்வித மின்றி நீசொல்வது மதியீனர் புகலும் வீண்வார்த்தையா யிருக்கின்றதே.

அமிர்தரஞ்சினி:— அம்மா! நீயொன்றும் வேறுவிதமான நூதனமாய் நினைக்கவேண்டாம் "மருமகனில்லாவீடு மயான,,மென்றுஉன்னைப்போல சிலவாயாடி பெண்கள் சொல்வதைத்தான் உனக்கு போதித்தேன்

வல்லாளகண்டி:— ஆ! அப்படியா! அதன் விபரத்தை எனக்குக் கொஞ்சம் விபரமாய் புகல்வாய்.

அமிர்தரஞ்சினி:— சரி அவ்விதமேஉனக்கு அநியாய உலகியல்பை உபதேசிக்கின்றேன். கவனிப்பாய் அஃதெவ்விதமென்றால்மனிதராய் பிறந்தவர்கள் ஓர் பெண்ணைப்பெற்றால் ஓர் அறிவீனனுக்குக்கலியாணஞ் செய்து * கோலம்வரும்போது குயவன் வீட்டைப் பார்த்துக்கொண்டு நாலாவதுநாள் "தலையணை மந்திரம்,, உபதேசித்து பெரிய குடும்பத்தை யுடையவனானாலும் சரியே, திக்கில்லாஏழையைபோல ஓர்வீட்டில்தனியாயிருக்கச் செய்து† அவனிடம் பலநாளும் சண்டைசச்சரவு செய்து

---

* கோலம்வருதல் = விவாககாலத்தில் மணமகளும்மணமகனும் மாநிலத்தோர் மனமகிழுந்தன்மையாய் ஆடைஆபரண சிங்காரத்துடன் கண்காக்ஷியாய் ஊர்கோலம் வருவது.

† ஸ்திரீகளாய்ப் பிறந்தவர்கள் தமது மணாளனை தமது நேத்திரத்தைப் போல காப்பாற்ற வேண்டியது நேத்திரமில்லாத குருடனுக்கு யாதொரு உலக இன்பமும் தோற்றாததுபோல மணாளனை இழந்த மங்கையர்கட்கு, மஞ்சள், குங்குமம், மணமலர், முதலாகியவை உதவாமற் போய்விடும், ஆகையால் தனது மணாளன் அவிவேகியானாலும் அஷ்டதரித்திர முடையவனானாலும், அங்கஈன அவலக்ஷண சரீரமுடையவனானாலும், அழகில் அருச்சுனனைப்போலவும், வல்லமையில் வீமனைப்போலவும், தெய்வபக்தியில் குசேலனைப்போலவும், ஐஸ்வரியத்தில் குபேரனைப்போலவும், மதித்து மங்கிலியமணிந்தமணாளன்மீதுஅன்புவகித்திருந்தால்இம்மையில்பெருமையும் மறுமையில் சாயுஜ்யபதவியு மடைந்திருப்பார்கள். அவ்விதமின்றி "கொண்டவன்மேல் பழிசுமத்தும் பெண்டிருந்தால்,, குடிக்கு எமன் அவளைவிடவேறே யுண்டோ?

கொண்டிருந்தால் பிறர்துன்பம் தனக்கின்ப மென்றிருக்கும் மாபாவிகளனைவரும்மாமியார்பேரைச்சொல்லிசொல்லிவேடிக் கையாய் சிரித்துக்கொண்டிருப்பார்கள் இவையனைத்தும் கவனியாமல் நீபெரிய மனுஷியானது எனக்கே ஆச்சரியமாயிருக்கின்றதே,

வல்லாளகண்டி:— ஆ! ஈதென்ன கண்காக்ஷி எங்கள் காலத்தில் இவ்வளவு சாமார்த்திய மனைத்தும்பெண்களுக்கு கிடையாது. அந்தகாலத்திலேயே என்னை வல்லாளகண்டி யென்று பெயரிட்டு சண்டைக்காரியென்றுசொல்லுவார்கள். அவ்வளவு சாமார்த்தியமுடைய எனக்குச் சமானமானவர் உலகத்திலில்லையென்றிருந்தேன். இப்போது வாழையடி வாழை வளருந்தன்மையாக இந்த அமிர்தரஞ்சினி பிறந்திருக்கின்றாளே. இவளுடைய சமர்த்திற்கு எத்தகைய துர்க்குணஸ்திரீகளும் சமானமாக மாட்டார்கள்.

என தன்மனதிற்குளே பலவிதமாய் யோசித்துக்கொண்டிருந்தவளாகையால் அமிர்தரஞ்சினியைப் பார்த்து இதைக்குறித்து நீ யாதொன்றுக்கும் மனவிசாரப்படவேண்டாம் நாளையதினம் நமது அண்டைவீட்டு குண்டுணி யிடத்தில் ஆலோசித்து விவாகத்திற்கிசைந்த ஏற்பாடு யாதேனும் செய்வோம்.

என, தனது குமாரத்தியாகிய அமிர்தரஞ்சினிக்கு சமாதான வார்த்தையைச் சொல்லி யனுப்பிவிட்டு தனது வழக்கம்போல அன்னம்புசித்து ஆயாசந்தீர்ந்து பாக்கைவாயிலிட்டு வெற்றிலையைக் கையிலேந்திக்கொண்டு தன்னைப்போன்ற வாயாடி பெண்களிருக்கும் ஸ்தானத்தில் வந்துட்கார்ந்து மனோல்லாசமாய் தாம்பூலந் தின்றுகொண்டிருந்தனள். அச்சமயம் அவர்களை சபையிலிருந்த துர்க்குண ஸ்திரீகள் விசாரிப்ப தாயினர்.

குண்டுணி:— ஏனம்மா! வல்லாளகண்டி! இன்றைய தினமென்ன ஒருவிதமான யோசனையோ டிருக்கின்றாயே.

வல்லாளகண்டி:— ஆ! அம்மா! அந்த துக்கத்தை உங்களிடத்திற்சொன்னால் என்துயர் தீர்க்கும் மார்க்கத்தைச் சொல்ல உங்களால் முடியுமா?

கோள்சோல்லி:— என்ன செய்யலாமம்மா? அந்தக் கிழ மூறியன் பொல்லாதவனு யிருக்கின்றான். இந்த வல்லாளகண்டி நம்மிடத்தில்நேசமாயிருப்பதினல் வீட்டிற் சேர்க்காமல்தூரத்திவிடவேண்டுமென்று தனது மகனுகிய மதியீனனிடத்திற் சொல்லிக்கொண் டிருந்தான். யான அருகிற் சென்றவுடனே அந்த சொல்லை நிறுத்திவிட்டு அப்பால் என்னென்னமோ சொல்லிக்கொண் டிருந்தான். யான் அதனை யாதொருவருக்கும் சொல்லவில்லை, யானென்ன அவ்விதமான கலகக்காரியா? ஆனல். அந்த சமாச்சாரத்தைதான் நமது வல்லாளகண்டி மனதில் வைத்துக்கொண்டு மஹாவிசனமா யிருக்கின்றாள்போற் காண்கின்றது. என்ன செய்யலாம் பாபம். இந்தம்மாள் நல்லகுடும்பத்திற்பிறந்து ஆகாதலோபியை மணந்து அலைச்சற்பட லாச்சுதே. அம்மா! இதைக்குறித்து நீயாதும் விசனப்படவேண்டாம். யாங்கள்அந்த கிழட்டொடிவானுகிய உனது மணளனை சரிப்படுத்தி விடுகிறோம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS REGISTERED 20 NOV 1913 MADRAS

குண்டுணி:— ஆ! அதென்ன அப்படி சொல்லுகிறது? இச்சமயமே யாம் சென்று அந்தக் கிழவனை சரிப்படுத்தி விடுவோம், சீக்கிரமாய் எழுந்து வருவீர்.

வல்லாளகண்டி:— அப்படியல்ல எனது குமாரத்தியாகிய அமிர்தரஞ்சினிக்கு புருஷன் வேணுமென்று என்னை தொந்தரை செய்கின்றாள். யானென்ன செய்வேன்? திடீரென நமது பெண்ணுக்கென்று ஒருவன் பிறந்திருப்பானே? ஈதென்ன நூதன புதுமையாயிருக்கின்றதே நமது காலத்தின்பெண்களுக்கு முப்பது வயதானாலும் மணளனென்ற பேர்மனதில் வராது அப்படி தாய் தகப்பன் பந்து ஜனங்கள் முதலானோர் இஷ்டப்பட்டு எவனுக்காகிலும் கலியாணஞ் செய்து கொடுத்தாலும்; கணவனைக் காண்பதற்கும் அச்சமுற்றிருப்பார்கள். இந்தகாலத்தின் பெண்கள் பத்துவயதானவுடனே கலியாணஞ் செய்துகொண்டு தனியாயிருப்பதற்கு எண்ணுகிறார்களே ஈதென்ன ஆச்சரியம்? சபாஷ்! இதுவும் நல்லவேடிக்கைதான்.

குண்டுணி:— அம்மா! அப்படி சொல்லாதே முற்காலத்தில் யாதொன்றுந் தெரியாத மூடர்களாயிருந்தார்கள். அப்போது நாம் அறிவிற் சிறந்தவர்களென்று நம்மை புகழ்ந்து கொண்

டிருப்பார்கள் இந்தகாலத்து பெண்களோ வெனில் நம்மிலும் சிரேஷ்டமாயிருக் கின்றார்கள், ஆகையால் உமது குமாரத்தி யாகிய அமிர்தரஞ்சினிக்கு இப்போதே கலியாணஞ் செய்து மனமகிழவேண்டும். அதற்காக தகுதியான பிள்ளையைப்பார் த்துதான் கலியாணஞ் செய்ய வேண்டும். அப்போது தான் நமது வாய்ப்பேச்சுக்கும் கைச்சண்டைக்கும் சரியாயிருக்கும்.

வல்லாளகண்டி:— ஆம்! ஆம்!! யானும் உன்னைதான் நம்பி யிருக்கின்றேன் எவ்விதமாயினும் நல்லதனவந்தன் வீட்டுப் பிள்ளையாய்ப்பார்த்து அழைத்துக்கொண்டு வருவாய்.

குண்டுணி:— ஆ! அதற்கென்னயான் மனம்வைத்தால்எப்படிப் பட்ட தனவந்தர் வீட்டுப் பிள்ளைகளையெல்லாம் வசப்படுத்திக் கொண்டு அன்னவஸ்திரத்திற்குப் பஞ்சமுற்ற ஏழைப்பெண்க ளுக்கெல்லாம் கலியாணஞ் செய்துவைத்து, சிறிய குடியை பெரியகுடியாக்கி யாவரும் என்னை புகழ்ந்துகொள்ளும்படியா க பேரியஎருமை பேரெடுத்ததுபோல நற்பே ரெடுத்திருக்கின்றே னே. ஆனல் கொஞ்சம் திரவியம் வேண்டும், என்றாலும்அதிக மாய் வேண்டியதில்லை நூறுவிராகனிருந்தால்போதுமானது.

கோள்சோல்லி:— ஆம்! ஆம்! அவ்வளவு திரவியம் வேண்டும், ஏனென்றால் சிலசமயம் குண்டுணி அம்மாளுக்கு, அபாயம் நேரிட்டால் அதனல் வெகுபொருள் நஷ்டமாவதுடன் அடி உதைகளும் விசேஷமாய் கிடைக்கும், இவை யனைத்தும் கவ னித்து தான் அவ்வளவு தொகை கேட்டாள்.

என சொல்லிக்கொண்டிருக்கும்போதே குண்டுணி யோசித்து, இனி தாமதித்திடில் இந்த கோள்சொல்லி நாம் அனுபவித்தவை யனைத்தும்சரியாய் சொல்லிவிட்டால் அவமானமாய் விடும். இவ் வளவிலேயே சமாளித்துக்கொள்ளவேண்டு மென்று மனதிலெண் ணியவளாய் கோள்சொல்லிக்குக் கண்சைகைகாட்டி, அம்மா! வல் லாளகண்டி இனி கலியாண விஷயத்தை கொஞ்சம் கவனிக்க வேண்டும். யான் கேட்ட தொகையிருந்தாற் சொல். இந்த மாதத் திலேயே யாவும் சரிப்படுத்தி விடுகிறேனென்று சொன்ன வுடனே வல்லாளகண்டியும் சரிதானென்று சம்மதித்துக்கொண்டு தனது வீட்டில் வந்துவிட்டாள் அச்சமயத்தில் குண்டுணியானவள் கோள் சொல்லியைப்பார்த்து அம்மா! நல்லசமயத்திலெல்லாம் நீவிண்கல

கம் செய்கின்றாயே இது நியாமாகுமா? நல்லதிருக்கட்டும், யான் என்னமோ ஓர்நாள் சண்டைசெய்துக் கொண்டிருந்தபோது அடிபட்டதை ஒரு கதையாய்ச் சொல்லிவிட்டாயே இனிமேல் அவ்விதமாய்ச்சொல்லாதே வல்லாளகண்டி எனக்குக் கொடுப்பதில் யானுனக்குப்பாதி கொடுக்கின்றேனென்று சொல்லிவிட்டாள் அந்தகோள் சொல்லியும் சரிதானென்று சம்மதித்துக் கொண்டிருந்து விட்டாள்.

இங்ஙனம் இவர்கள் நினைவு இவ்விதமாயிருக்க வல்லாளகண்டியானவள் தனது வீட்டிற் சென்று நூறுவிராகன் மாத்திரம் எடுத்துக்கொண்டு அண்டைவீட்டு குண்டுணியிடத்தில் வந்து தான் கொண்டுவந்த தொகையைக் கையிற் கொடுத்து விட்டு சொல்லுகிறாள்.

வல்லாளகண்டி:— என்ன அப்தா! எனது மணாளன் தன்பாலனென்ற பெயர் வைத்துக் கொண்டிருக்கின்றானல்லாமற் காசு சம்பாதிப்பதில்பிரயோசனமில்லை என்னுடைய அதிஷ்டத்தினாலேயே கொஞ்சந்திரவியம் சேகரித்திருக்கின்றார். அதில் உனக்கு நூறுவிராகன் எடுத்துக்கொண்டு வந்தேன். இதனை எவ்விதமாயினும் சரிபடுத்திக்கொள்வாயாகில் மறுபடியும் வேண்டுமான போது சரிப்படுத்திக் கொள்வோம்.

என புகன்றவை வினவிய குண்டுணியும் தன்மனதிற்றானே மகிழ்ந்து, சரிஇதுவும்நமது அதிர்ஷ்டானுகூலந்தானெனமகிழ்ந்து, அம்மா வல்லாளகண்டி யாவும் உனது இஷ்டப்படியே சரிப்படுத்திவிடுகிறேனென்று ஒருவிதமான சமாதானமாய்ப் புகன்று இனி பெண்ணுக்குப் பிள்ளையைப் பார்த்துக்கொண்டு வருகிறேனென்று தந்திரமாய்ச் சொல்லிவிட்டு தனது சகோதரியிருக்கும் தேசத்திற்குப் போய்விட்டாள். இங்ஙனம், இவர்கள் நினைவு இவ்விதமாயிருக்கையில் முன்னம் மாபாவியின் மகனுக்குப் பெண்பார்த்து அழைத்துக்கொண்டு வருகிறேனென்று மூந்நூறுவிராகன் வாங்கிக்கொண்டுவந்த வாயாடியானவள் அந்த திரவியமனைத்தும் வீண் செலவு செய்து சுகபோஜனம் புசித்துக்கொண்டு மனோல்லாசமாயிருந்தனள்.

இங்ஙனம் இவ்விதமாயிருக்கையில் ஓர்நாள் வல்லாளகண்டியின் புத்திரனாகிய துர்க்குணன் தனது வழக்கப்படியே பலவித கலகம் விளைத்துக்கொண்டு யாவரையும் மதியாமல் மனோகர்வியாயிருந்தாலும்.

வெண் பா.

நற்றாமரைக்கயத்தில் நல்லன்னஞ் சேர்ந்தாற்போல்
கற்றாரைக்கற்றாரே காமுறுவர்—கற்பில்லா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கையுகக்கும் பிணம்.

என்னுந்தன்மையாய் உத்தமருக்குஉத்தமரே துணையாவார்கள். துஷ்டருக்குதுஷ்டரே துணையாவாரென்பதுபோல வல்லாளசண்டி மகனாகிய துர்க்குணனுக்குத் தகுந்த சில அற்பநேயர் சிநேகிதமாயிருந்து அந்ததனபாலன் சேகரஞ் செய்த திரவிய மனைத்தும் பலவிதமாய்ச் செலவுசெய்துக் கொண்டிருக்கையில் ஓர்நாள் அவர்களிலொருவனாகிய மனோகர்வியானவன் யாதொருவரையும் மதியாமல் தமது அற்பநேயர்களே சிறந்தவர்களென மதித்திருப்பதினாலும் துர்க்குணனுக்குபிரியாநட்பினனாகவுமிருப்பதினாலும் தனது குணத்திற்கியன்ற விதமாய்ப் புகல்வதாயினன்.

மனோகர்வி:— அப்பா! துர்க்குணசிகாமணி! நாம் சதாகாலமும் சுகானந்தமாகவே யிருக்கின்றோம். நமக்குச் சமானமானவர்கள் உலகத்தில் யாரிருக்கின்றார்கள்?

துர்க்குணன்:— ஆ! அதற்கென்ன சந்தேகமா? நம்மைப்போற் செலவு செய்பவர் உலகத்திலேது? என்னுடைய தகப்பன் சிறு வயதிலிருந்து பலவிதமாய்க் கஷ்டப்பட்டு திரைகடலோடினுந் திரவியந்தேடு, யென்பதை யனுசரித்து உயிருக்குத் துணிந்து பயங்கரமாகிய மிருகங்கள் சூழ்ந்த பற்பல தீவிலும் சென்று வியாபாரஞ் செய்து திரவியங்களைச் சேகரித்தும் பொருள்தனைப் போற்றிவாழ், யென்னும் பதத்தை வாயிலடக்கி வைத்துக்கொண்டு தனக்கு தனபாலனென்ற பெயர் மாத்திரமிருந்தால் போதுமானது உண்பதை யார்காண்பவர்கள்? ஒழுங்காய் உடுத்திக்கொண்டு ஊரைச்சுற்றி வந்தால் அப்பப்பா இவனைப்போல தனவந்தர் எந்த தேசத்திலுமில்லை யென்று மதித்துக் கொள்ளுவாரென்னுந் தன்மையாய் ஆத்மதுரோகி மஹாபாபி என்பதை கிஞ்சிற்றும்கவனியாமல்எடுத்தால் செலவாகும் என்பதாய் பணத்தைச் செலவு செய்யாமல் "பொன்காத்த பூதம்போல,, காசு பணத்திற்குக் காவலாயிருக்கின்றான். என்றாலும் யான்மாத்திரம் திருட்டுபூனையைப்போல சமயம் பார்த்து அகப்பட்ட மட்டும் அபகரித்துக் கொண்டுவந்து வீண்

செலவு செய்துகொண்டிருக்கின்றேன். இந்த சமாச்சாரத்தை எவ்விதமாயினும் கவனித்துக் கொண்டு என்னைக்கேட்டால் எனது தாயாராகிய வல்லாளகண்டியானவள் வாய்மிரட்டு, கைமிரட்டு, மிரட்டி கலகஞ் செய்துக் கொண்டிருந்தால் மன மிரண்டு சும்மாயிருந்து விடுவான். அச்சமயம் யான் மனோல்லாசமாய் பலவிதமாய் பணத்தைச் செலவு செய்துக் கொண்டிருப்பேன். என்றாலும் ஆயிரம் இரண்டாயிரமாய்ச் செலவு செய்ய முடியவில்லை.

மனோகர்வி:— ஆ! அதற்கென்ன தாயாரிருந்தால் சாவுகிடையாது என்னுந் தன்மையாய் உன்தாயிருக்கும் வரையில் உனக்கு யாதொரு பஞ்சமுமில்லை யென்றாலும் கொஞ்சம் ஜாக்கிரதையாகவே யிருக்கவேண்டும்.

அநியாயமுத்தன்:— அண்ணேன்! நீங்களென்னசுகானந்தத்தை யனுபவித்தீர்கள்? அடடா! என்னைப்போல சுகத்தை யனுபவித்தவர் தொல்லுலகிலேது?

துர்க்குணன்:— அடடா! அதென்ன அப்படியானசுகம் ஒன்று நூதனமாயிருக்கின்றதோ? சரி! அதைஎங்களுக்குக்கொஞ்சம் விபரமாய்ச் சொல்வீர், யாங்களும் அதைகவனித்துக்கொண்டு மனோல்லாசமாய் சுகத்தை யனுபவிக்கவேண்டும்.

நெஞ்சேரிந்தான்:— சீச்சீ! ஈதென்ன தானனுபவிக்கும் சுகத்தை யர்வரும் அனுபவித்திடல் வேண்டுமென்பது நியாயமாகாது. இதையெல்லாம் யாருக்கும் கற்றுக்கொடுக்க லாகாது.

மனோகர்வி:— அப்பா! நெஞ்சேரிச்ச லுடையவனே பொறுமையுடையோர் வறுமையடைவாரென்பதை யனுசரியாமல் நீ பலநாளும் பொறுமையையே துணைகொண்டிருக்கின்றாய். இதனாலே உனக்குப் பலவித கஷ்டநஷ்டம் வாய்க்கும். இனிமேல் இத்தகைய பொறுமையை மனதில் லகித்திடாதே தான் அனுபவிக்கும் சுகத்தை பலபேரும் அனுபவிப்பதே நலமாகும்.

நெஞ்சேரிந்தான்:— ஆ! அஃதெவ்விதமாய் பொறுமை யுடையோர் வறுமை யடைவார்?

மனோகர்வி:— (கலகலவெனசிரித்து) அப்பா! உன்னைப்போன்ற நினைவையுடைய ஓர் குடியானவன் தனது நிலத்தில் மாடுபோற்கஷ்டப்பட்டு பயிரிட்டு ஜீவனஞ் செய்துக்கொண்டு வெகு

பொருள் சேகரித்து விசேஷமாய் நிலத்தைவாங்கிக்கொண்டிரு ந்தான் ஆனல் ஓர் ஏழையான வைசியசிறுவன் சிறுவயதிலிரு ந்து அந்த குடியானவனிடத்தில் அடிமைத்தொழிற் புரிந்துக் கொண்டிருக்கையில் அவனைப்போலவே தானும் பயிரிடுந்தொ ழிலிற் பலவிதமாய்க் கஷ்டப்படும் வழக்கத்தை யனுசரித்துக் கொண் டிருந்தனன். இவனுடைய நற்காலத்திற் கிசைந்தவித மாய், ஓர்நாள் இவனுடைய சமர்த்தையும் அடக்கம், பொறு மை, சாந்தம், தயாளம் முதலாகிய நற்குணங்களைக் கண்ட ஓர் வைசியனானவன் அழகிற்சிறந்த தனது குமாரத் தியை அவனுக்குக் கலியாணஞ் செய்துகொடுத்து சீதனவரி சையாவும் அவனுக்குக் கொடுத்தனுப்பினன். அன்றையமுதற் கொண்டு அவன் பழையபடியே அடிமைத்தொழிற் புரிந்தால் மனையாள் மதிக்கமாட்டாளே யென்று மனவிசாரமா யிருந்த னன். எஜமான் அழைத்தாலும் இவன்போகிறதில்லை இவ்வித மே தினந்தோறும் பயிரிடுந் தொழிலுக்குப் போகாமலிருந்த னன் தொழிலாளிநின்றுவிட்டதினல் எஜமான் இவனுக்கு பதி லாய் மற்றோர் தொழிலாளியை நியமித்துக்கொண்டான்.

துர்க்குணன்:— ஐயோ! ஈதென்ன கொடுமை? அன்னங்கொடுக் கும் எஜமானை பிரிந்துவிட்டால் பிழைப்பு கசப்பாய் விடுமே அப்பால் அவன்கதி எவ்விதமாயின?

மனேகர்வி:— அவ்விதமாய் நினையாதீர்.

## வெண்பா.

கருப்பைக்குண் முட்டைக்கும் கல்லினுட் டேரைக்கும்
விருப்புற் றமுதளிக்கும் ஈசன் - உருப்பெற்றால்
ஊட்டி வளர்க்கானே ஓகெடுவாய் நெஞ்சமே
வாட்ட முனக்கேன் மகிழ்.

என்னும் தன்மையாய் யாவருக்கும் படியளக்கும் பகவான் ஒருவரிருக்கின்றாரே அவ்விதமிருக்க, அவனுக்கும் புசிப்பிற்கிசை ந்த விதமாய் ஓர்நாள் அவன்போகும் மார்க்கத்தில் வழியிலெதிரு ற்ற ஓர்நந்தவனத்தின் வசந்தமண்டபத்தில் வந்திருந்தமஹானைபணி ந்து சுவாமி அடியேன் ஜீவிக்கும் மார்க்கத்திற் கிசைந்தவையாக ஓர் சகாயம் அனுக்கிரகம் புரிவீரென வேண்டினன்.

அம்மஹான் மனமகிழ்ந்து, அப்பா! நீயாதொன்றுக்கும்அஞ்ச வேண்டாமென்று ஓர் செம்புத் துணுக்கையைக் கொண்டுவரச்சொல்லி அதனை தங்கமாய்செய்து கொடுத்து, இதனை இப்போதே விற்கிரயஞ் செய்து பணமாக்கிக்கொண்டு உனக்கு வேண்டியபடி செலவுசெய்து மனையாளுடன் மனோல்லாசமாய் வாழ்ந்துக்கொண்டிருப்பா யென்று அக்ஞாபித்தனர். அந்த வைசியன் தங்கத்தை வாங்கிக்கொண்டு போய் ஆயிரம் விராகனுக்கு விற்கிரயஞ்செய்து அதனை வைத்துக்கொண்டு தானும் தன்மனையாளும் சுகானந்தமாய் ஜீவித்துக்கொண் டிருந்தனர்.

இவ்விதமாயிருக்கையில் ஓர்நாள் அந்தபொருமை யுடையவனாகிய எஜமான் அவன்வீட்டுக்கு வந்தனன். அவனைக்கண்டவுடனே வைசியனானவன் மனமகிழ்ந்து எனது தகப்பனுக்குச் சமானமாகிய எஜமான் இதோ வந்துவிட்டார். இவருக்கு நல்லவிருந்து செய்யவேண்டுமென்றுதனதுமனையாளுக்குசொன்னவுடனே அந்த உத்தமியும் சரிதானென்று சம்மதித்துக் கொண்டு. அறுசுவை பதார்த்ததிவ்யான்னசுகபோஜன மதுமாம்ஸபக்ஷணாதிகளும்தயார் செய்து வைத்துவிட்டனள்.

வைசியனும் தனது எஜமானுச்சுதே யெனும் விஸ்வாசத்தினால் அவனிடத்தில் நல்லவார்த்தைகளை பாஷித்துக்கொண்டிருந்து சமையலாய்விட்டதென்று மனையாள் சொன்னவுடனே திடீரென்றெழுந்து அந்த பொருமை யுடையவனையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு ஆற்றிற் சென்று ஸ்நானபானஞ் செய்துக்கொண்டு இருவரும் வீட்டுக்குவந்து போஜன வீட்டில் போய் உட்கார்ந்திருந்தனர். அந்த உத்தமி மணாளனுக்கும் வந்த விருந்தாளிக்கும், வாழையிலையில் அன்ன பதார்த்தம் படைத்து மதுமாம்ஸ பலகார பக்ஷணமும் படைத்தனள். இருவரும் மனோல்லாசமாய்ப் புசித்து நந்நீரருந்திக் களை தெளிந்து கைவாயலம்பிக் கொண்டு ஓர் ஏகாந்தஸ்தானத்தில் வந்துட்கார்ந்திருந்தனர். அச்சமயம்வைசியப் பெண் ஓர் வெள்ளித்தாம்பாளத்தில் வெற்றிலை, பாக்கு, இலவங்கம், ஜாதிக்காய் முதலான வாசனாதி தாம்பூலங்கொண்டுவந்து வைத்தனள். அதனைக்கண்டவுடனே பொருமையைத் துணையாய் வகித்திருக்கும் குடியானவன் பெருமூச்சு விடுத்து, ஐயையோ நம்மிடத்தில் அடிமைத் தொழிற் புரிந்திருந்தவன் இவ்வளவு தனவந்தனாகவும் சுகபோஜனாதிகளுடனும் புசித்துக் கொண்டிருந்தால் என்

னமாய் மனஞ்சகித்திருப்பது? அப்பபா! ஈதென்ன அந்நீதமென்று தன்மனதிற்றனே பொறுமையை வகித்தவனாயிருந்தனன். இவன் நினைவை யறியாத வைசியச்சிறுவன் நமது எஜமான் தன்மீது விஸ்வாசமுள்ளவனைப்போல மதித்து, தாம்பூலத்தில் இரண்டு விராகன் வைத்து தாம்பூல தக்ஷணையாக கொடுத்தனன். இதனைக்கண்ணுற்ற பொறுமையுடைய குடியானவனுக்கு மேலும் மேலும் பொறுமை யதிகரித்து அப்பா! இவ்வளவு திரவியமும் உனக்கெவ்விதமாய் கிடைத்ததென்று விசாரித்தனன். வைசியச்சிறுவன் உண்மையை ஒளியாமற் சொல்லிவிட்டனன்,

அவ்வார்த்தையைக் கேட்ட பொறுமையுள்ள குடியானவன் வயறெரிந்து நாமும் இவ்வித ரசவாதஞ் செய்யும் சந்நியாசிகளின் உதவியால் தங்கஞ் செய்துக்கொள்ள வேண்டுமென மதித்து, அன்றையதினத்திலிருந்து தனது குலத்தொழிலாகிய பயிரிடுந்தொழிலை கவனியாமல் ரசவாதத்தொழிலையேசெய்து, வீட்டிலிருக்கும் பித்தளைபாத்திரம், செம்புபாத்திரம், வெண்கலபாத்திரங்களனைத்தும் தங்கமாய்ச் செய்துவிட வேண்டு மென்றிருந்தனன். அப்பால் வெவ்வேறுவிதமான சமாச்சாரமனைத்தும் பேசிக்கொண்டிருந்து அந்த வைசியச்சிறுவனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு தனது வீட்டிற்குப் போயினன்.

அப்பால் பொறுமையுடைய குடியானவன் அன்றையதினம் வரையிலும் ஓர் விதமாய்க் காலங்கழித்து இரவில் இராப்போஜனம் புசித்து விட்டு தனது மஞ்சத்திற் சயனித்திடினும் நித்திரை வராமல் அன்றிரவு முழுமையும் பலவிதமாகிய யோசனை செய்துக் கொண்டே யிருந்தனன். பொழுது விடிந்தவுடனே சந்நியாசியைத்தேடுதற்குகானகமார்க்கமாய்ச்சென்றான். இவனுடையநினைவிற் கிசைந்த பாவியாகிய ஓர் சோம்பேரியானவன் கஷ்டப்பட்டு காசு சம்பாதித்து மனைவிமைந்தரைக்காப்பாற்றமுடியாமல் காவிவஸ்திரமணிந்துக்கொண்டு சாமியார் வேஷமாய் கானகமார்க்கமாய் வருகையில், அந்த பொறுமையுடைய குடியானவன் அவனைப்பணிந்து, சுவாமி யான் தங்களைக்கண்டது பகவானைக்கண்டது போலாச்சுது. ஆகையால் தாங்கள் எனது வீட்டில் வந்து எனக்கு சகாயமாயிருந்து தங்கஞ் செய்து கொடுக்க வேண்டு மென்றான். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற சோம்பேரி சாமியார் மனம்பூரித்து இனி நமக்கு நற்காலம்வந்தது. இச்சமயம் நாம் இவன் மனதை

மயக்கி ஆசைவார்த்தைகளை அநேகமாய்ச் சொல்லி மோசதந்திரமாய்ப் பொருள் பறிக்கவேணு மென்னும் பேராசையாய்ச் சொல்வதாயினன் அடா! சம்ஸாரியே! உங்களுக்குதான் மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை யெனும் மூவாசையும் அதிகரித்திருக்கின்றது, எங்களைப்போன்ற சந்நியாசிகளுக்கு யாதொரு உலக ஆசையேகிடையாது என்றாலும் யானுனக்கு முதலில் வெள்ளியை யெல்லாம் தங்கமாய்ச் செய்து கொடுக்கின்றேன். சந்தோஷமாய் வருவாயென்றான். பொருமையுடைய குடியானவன் சந்நியாசியை தன்னுடன் அழைத்துக்கொண்டுபோய் அவனுக்கு ஸ்நானபானஞ் செய்து வைத்து அறுசுவை பதார்த்த திவ்யான்ன சுகபோஜனம் படைத்தனன். சோம்பேரி சந்நியாசி மனோல்லாசமாய் அன்னம் புசித்து ஆயாசந்தீர்ந்து தாம்பூலந்தின்று சந்தோஷமா யிருக்கும்போது சொல்லுகிறான், அப்பா! சம்ஸாரியே! யான் உனக்கு ஓர்சகாயம் செய்யயோசிக்கின்றேன். அதென்னவென்றால் இன்றையதினம் உன்னிடத்திலிருக்கும் காசு, பணம், விராகன் முதலான திரவிய மனைத்தும் ஓர்பெட்டியிலிட்டு இங்குகொண்டுவந்து வைத்துவிட்டு தேங்காய், பழம், கற்பூரம், சாம்பிராணி முதலாகிய பூஜாதிரவிய மனைத்தும் வாங்கிக் கொண்டுவந்து தருவாயாகில் யான் பூதயாகம் செய்து யாவும் பொன்னாகச் செய்து விடுவேனென்றான்.

அவன் மோச நினைவையறியாத குடியானவன் அவன் சொன்ன வார்த்தையை உண்மை யென மதித்து, அச்சமயமே தனக்கு எவரெவர்கள் கொடுக்கவேண்டுமோ அந்த பாக்கித்தொகை யனைத்தும் வசூலித்துக்கொண்டு இன்னமும் பலபேரிடத்திலும் கடனாக ஆயிரம் விராகன் வரையிலும் வாங்கி தனது பணப்பெட்டியிலிட்டு சாமியாரிருக்கும் வீட்டில் கொண்டுபோய் அவன் முன்னால் வைத்துவிட்டு சுவாமி! இந்தப்பெட்டியிலிருக்கும் செம்பு வெள்ளி யனைத்தும் தங்கமாய் செய்து விடுவீரென்று சொல்லிவிட்டு அண்டை அயலார்க்கு தெரியாமல் தனதுமனைவியினால் தேங்காய், பழம் கர்ப்பூரம் முதலாகிய பூஜாதிரவிய மனைத்தும் வாங்கிக்கொண்டு வரச்செய்து சந்நியாசியின் கையில் கொடுத்துவிட்டு அவன் முன்னாலேயே உட்கார்ந்துக்கொண்டு சுவாமி இந்த மந்திரத்தை யானும் கற்றுக் கொள்ளுகிறேனென்றான். அந்த பொய் சந்நியாசி மனம் பூரித்து சரி அவ்விதமே செய்யலாம். இதைக்குறித்து நீயாதொன்

றுக்கும் அஞ்சாதே யென்று மஹா உண்மையுடையவனைப்போல அந்திப்பொழுதான வுடனே ஸ்நானபான நேமநிஷ்டை புரிந்துக் கொண்டு அன்ன பதார்த்தம் புசித்து விட்டு, பெட்டி யிருக்கும் ஸ்தானத்தில் வந்துட்கார்ந்துக் கொண்டு அப்பா! சம்ஸாரியே! இந்தஸ்தானத்தில் யாதொருவரும் இருக்கக்கூடாது அஃதே னெனில் இரவு பதினைந்து நாழிகையில் ஒருபூதம்வரும் அச்சமயம் எதிர்ப்பட்டவர்களை கொன்று விடும். ஆகையால் நீதவிற மற்றவர் களை யெல்லாம் பின்கட்டில் சயனித்துக்கொண்டு தாளிட்டுக் கொள் ளச்சொல்வாய். நீ யான் செய்யும் யாக சடங்கையும் மந்திரங்களை யும் கற்றுக்கொண்டு பக்தி பூர்வகமாயிருப்பா யென்று சொன்னான் அவன் உண்மை யென்றே மதித்து மஹாபாக்கியம் சுவாமி யென்றான்.

இவ்விதமாய் பொய் சந்நியாசி துர்ப்போதனை செய்து சக லரையும் பின்கட்டில்போய் சயனித்துக்கொண்டு கதவை தாளிட் டுக் கொள்ளச் சொல்லிவிட்டு, குடியானவனுக்குப் பலவிதமான ஆசை வார்த்தைகளைச் சொல்லிக்கொண்டு சமித்துகளை எதிரில் வைத்து அக்கினியை மூட்டி மந்திரஞ் சொல்பவனைப்போல முணு முணு யென்று பிதற்றிக்கொண்டு தேங்காயுடைத்துக் கற்பூர மேற்றி செம்பிலிருந்த ஜலத்தை கவிழ்த்துவிட்டு அப்பா! இன்னும் பத்துநாழிகை யாகவில்லை நீயாதொன்றுக்கும் அஞ்சாமல் இந்தக் கிராமத்தின் வடதிசையிலிருக்கும் எந்தகிணற்றின் ஜலத்தையாகி லும் சீக்கிரமாய்க் கொண்டு வருவாய். அதேனெனில் பூதம் தென் திசையாய் ஓடிவரும் அதுவருவதற்குள் நீ ஜலத்தை கொண்டுவந்து வைத்துவிட்டு என் முன்பாக இருப்பாயானால் பூதம் வந்த வுட னே அதன் முகத்தில் இந்த ஜலத்தை தெளித்து அது உனக்கு வசியமாகும்படி செய்துவிட்டு இந்தப்பெட்டியிலிருக்கும் செம்பு, வெள்ளிகளை யெல்லாம் தங்கமாகும்படி செய்து விடுவேனென்றான். அந்த பொய்வார்த்தையை மெய்யென்று நம்பிய பொறுமையுடைய குடியானவன் மனமகிழ்ந்து இனி நமக்கு நற்காலம் சமீபித்துவிட் டது. என்றாலும் இந்த சந்நியாசி நமது குலதெய்வம்போல வந் திருக்கிறானென்று மனோல்லாச மெய்தியவனாய் ஜலங்கொண்டு வரு வதற்காக வடதிசை மார்க்கத்திலிருக்கும் கிணற்றி லிருக்கும் ஜலத்தை யெடுத்துக்கொண்டு ஓடிவருதற்குள் பொய்ச்சந்நியாசி யானவன் அங்கிருந்த பெட்டியைத்தூக்கித் தனது தலைமீது வைத்

துக்கொண்டு தென்திசை மார்க்கமாய் ஓடிப்போயினன். பொருமை யுடைய குடியானவன் ஓடிவந்து பார்த்து பெட்டியைக் காணு மையால் வயறெரிந்து வெறியனைப்போல அந்தராத்திரியில் அந்தக் கிராம முழுமையும் சுற்றிப்பார்த்தும் சந்நியாசியைக் காணுமையால் மனந்துடித் தழுதுக் கொண்டிருந்தனன்.

பொழுது விடிந்தபிறகு அந்தக்கிராம வாசிகள் அவனை விசாரித்து உண்மையை கவனித்து சகலரும் விசன மடைந்தார்கள் அச்சமயத்தில் முன்னம் இவனிடத்தில் அடிமைத்தொழிற் புரிந்திருந்த வைசியச் சிறுவன் கேள்வியுற்ற மஹாவிசனமடைந்து எஜமானே முன்னம் நாமிருவரும் வெகுவாய்க் கஷ்டப்பட்டு சேர்த்து வைத்திருந்தவை யனைத்தும் திருடன் அபகரித்துக்கொண்டு போய்விட்டானே யென்று விசனப்பட்டு அழுது அவனுக்கு பலவித மாகிய தைரிய வார்த்தையைச் சொல்லி மனதைத்தேற்றினுன். பொருமை மிகுந்த குடியானவன் மாத்திரம்,

கலிவிருத்தம்.

வானரமழைதனில் நனையத்தூக்கினன்
தானொருநெறிசொலத் தாண்டி பிய்த்திடும்
ஞானமுங்கல்வியும் நவின்ற நூல்களும்
ஈனருக்குறைத்திடில் இடறதாகுமே.

என்னுந் தன்மையாய் வஞ்சக நெஞ்சமைந்த தன்குணத்திற் கிசைந்த தந்திரோபாயமாய்ச் சொல்வதாயினன். அப்பா! யான் கையில் பணத்தை வைத்துக் கொண்டிருந்ததினுல் திருடன் அபகரித்துக்கொண்டு போயினன். நீயும் கையில் பணத்தை வைத்திருப்பதினுற் பிரயோசனமில்லை பணந்தேடி யாரிருந்தாருலகமீது யென்னுந்தன்மையாய் பணமென்பது ஆட்கொல்லி ஆகையால் அந்த பணம் உன்னிடத்திலிருக்கின்றமையால் எனக்கும் பயமாயிருக்கின்றது. ஆகையால் அதனை இப்போதேநீதான தர்மபரோபகாரஞ் செய்து விடுவாயாகில் மறுஜனனத்திற் காகிலும் நல்ல பதவி கிடைக்கு மென்றனன்.

இவன் வார்த்தையைக் கேள்வியுற்ற வைசியச்சிறுவன் கல கல வென சிரித்துக்கொண்டு ஐயா!

கவி.

தன்கைப் பொருளும் தன்னுயுதமும்
பிறன்கை கொடுக்கும் பேதையும் பதரே.

என்னுந் தன்மையாய் தாங்கள் தான் திருட்டுப்பயலை யழைத்துக்கொண்டுவந்து கைப்பொருளைப் பெட்டியிலடக்கஞ்செய்து அவ

னிடத்தில் ஒப்பித்தபடியால் அவன் அபகரித்துக்கொண்டு ஓடிப் போயினன் சகலரும் அப்படி யாவரர்களா? கையில் காசில்லாம லிருந்தால் ஜீவிப்பதெவ்விதம்? தானதர்மம் செய்து விட்டு ஆத்ம துரோகியாயிருந்தால் பாபமல்லவோ யான் அவ்விதமாய் அற்ப மதியை மனதில் வகித்திடேன். ஆனால் யான் இப்போது ஐந்நூறு விராகனில் நிலம் வாங்கிக்கொண்டு மற்றமீதியாகிய ஐந்நூறு விரா கனில் பயிரிடுங்கருவிகளும் மாடுகளும் வாங்கி பயிரிட்டு ஜீவனம் செய்வேனென்றான். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற குடியானவன் வயறெரிந்து ஐயோ! இனி இவனை கவனியாமல்விட்டு விட்டால் எவ்விடத்திலாகிலும் நிலத்தைவாங்கி உழுது பயிரிட்டு மஹாதன வந்தனாய் விடுவான். ஆகையால் யாமிவனைப் பக்குவமாய் சிக் குப்படுத்த வேணுமென மதித்தவனாய் மனதில் மோசமும் நாசமும் உதட்டில் பாசமுமாய்ப் பேசுவதாயினன். அப்பா நீ வேறுவித மாய் நினையாதே எனது மனவருத்தத்தினால் யாதொன்றும் கவனி யாமல் சொல்லிவிட்டேன் என்றாலும் நீ இப்போது செய்திருக் கின்ற யோசனை சரியானதுதான் என்றாலும் என்னுடைய நிலத் தில் உனக்கு தேவையான வரையிலும் விலைக்குவாங்கிக் கொள்வா யென்று சொன்னான். அந்த வைசியச்சிறுவனும் சரிதானென்று சம்மதித்துக் கொண்டு அவனிடத்திலேயே ஐந்நூறுவிராகனுக்கு நிலம் வாங்கிக்கொண்டு அதற்குத் தகுந்த துணைக்கருவிகளும் வாங் கிக்கொண்டு பயிரிட்டு ஜீவனஞ் செய்துக் கொண்டிருந்தனன்.

இவ்விதமா யிருக்கையில் ஒருவருஷம் வரையிலும் இந்தவைசி யச்சிறுவன் தனது நிலத்தில் உழுது பயிரிட்டுக் கொண்டிருக்கை யில் அந்த வஞ்சகனுடைய பயிரினும் இவனுடைய பயிர் மிகவும் செழிப்பாய் வளர்ந்திருப்பதைக் கண்ட வஞ்சகன் வயறெரிந்து ஐயோ! அதிர்ஷ்டம் வந்தால் இவ்விதமல்லவோ வரவேணுமென்று பொறாமை யுடையவனா யிருந்தனன். அந்த வருஷத்திய தானியத் தில் வைசியச்சிறுவனுக்கு வெகுலாபமும் கிடைத்தது. இவ்விதமா யிருக்கையில் மறுவருஷத்திலும் வைசியச் சிறுவன் அனுதினமும் அதிகாலையிலெழுந்து ஏற்றமிறைப்பது வழக்கமா யிருந்தமையால் அண்டைவீட்டிலிருக்கும் வஞ்சகன் இவனுக்கு ஓர்நாளைக்கு இரத்த குறிசகுணங் காண்பித்தால் ஏற்றமிறைக்கும்போது திடீரென கிண ற்றில் வீழ்ந்து இறந்துபோவான். அப்போது நாம் வேடிக்கைபார் த்து சந்தோஷப்படலாமென மதித்தவனாய், ஓர்நாள் வைசியச் சிறு

வனை அருகிலழைத்து நீ நாளைய தினத்திலிருந்து அதிகாலையில் ஏற்றமிறைக்கும் போது என்னையும் அழைத்துக் கொண்டு போவாயாகில் நாமிருவரும்போய் ஏற்றமிறைக்கலா மென்றான், அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற வைசியச்சிறுவனும் சம்மதித்து எஜமானே உமது இஷ்டப்படியே நாளையதினத்திலிருந்து உம்மையான் அதிகாலையில் அழைத்துக்கொண்டு போகிறேனென்று சொன்னான்.

இங்ஙனம் இவ்விருவரின் நினைவு இவ்விதமா யிருக்கையில், பொறாமையுடைய குடியானவன் மனமகிழ்ந்து, ஆ! ஹா!! நாளைய தினம் வைசியச் சிறுவன் ஏற்றமிறைக்கப் போகும்போது நமது நாசியை அறுத்துக்கொண்டால், இரத்தம் பெருகும், அப்போது அவன் இரத்தக்குறிகண்டு ஏற்றமிறைப்பதற்குப் போனால் கிணற்றில்விழுந்து மரணமாவான், இதுதான் தகுந்த யோசனையென்று அன்றைய பகற்பொழுதிலேயே அம்பட்டனிடத்திலிருந்து கூர்மையான ஓர்கத்தியை இரவலாக வாங்கிக்கொண்டுவந்து தயாராய்வைத்துக்கொண் டிருந்தனன். அன்றைய பகற்பொழுதனைத்தும் ஓர்விதமாய்க் கழிந்தன. அன்றைய இரவானவுடனே யாவரும் அன்னம் புசித்து நித்திரை செய்துகொண் டிருக்கையில் அந்த வஞ்சகநினைவையுடைய குடியானவனுக்கு நித்திரை யில்லாமல் எப்பொழுது பொழுது விடியுமென்று விழித்துக்கொண்டு பலவிதமாகிய துர்ரெண்ணமா யிருந்தனன்.

அப்பால் பொழுதுவிடிய ஒருஜாமத்திற்குமுன் அந்த வஞ்சகனெழுந்து தெருத்திண்ணையின்மீது வந்துட்கார்ந்து அம்பட்டன் கத்தியை தயாராய் வைத்துக்கொண் டிருந்தனன். இங்ஙனம்இவன் நினைவு இவ்விதமா யிருக்கையில், யாதொரு கபடம் சூதுமார்க்கமுமறியாத வைசியச்சிறுவன் காலையிலெழுந்து எஜமானையும் அழைத்துக்கொண்டு துறவுக்குப் போவோமென்று வெளியில் வரும்போது தயாராய் பார்த்துக்கொண்டிருந்த குடியானவன் திடீரென்றெழுந்து கையிலிருந்த கத்தியினால் தனது மூக்கை யறுத்துக்கொண்டு எதிரில் வந்தான். அதனைக்கண்ட வைசியச் சிறுவன் மனந்திகைத்து, ஐயோ! ஈதென்ன இவருடைய மூக்கறுபட்டு இரத்தம்பெருகிக்கொண் டிருக்கின்றதேயென ஓடிவந்து தனது வஸ்திரத்தினால் இரத்தத்தைத் துடைத்து காயத்தை யாற்றும் பச்சிலைகளை அறைத்து காயத்திலிட்டு சவுக்கியப் படுத்துதற்கிசைந்த பரிகாரஞ் செய்துக்

கொண்டிருந்தனன், மூக்கிழந்த குடியானவன் மனம்பதறி ஐயோ! சூதும்வாதும் வேதனைசெய்யும், என்பதுபோல நாம் வைசியச்சிறுவனுக்கு இரத்தக்குறி காண்பித்து மரணமடையச் செய்வோமென்றெண்ணி நமது மூக்கை யறுத்துக் கொண்டதினால் அவன் நமது உபசரணையினால் இன்றையதின முழுமையும் எற்றமிறைக்கப் போகாமலிருந்துவிட்டான், நாளையதினம் அவனுக்கு யார் நம்மைப்போல மூக்கறுத்துக்கொண்டு இரத்தக்குறி காண்பிப்பார்கள், அவனெப்படி மரணமடைவானென்று விசன மடைந்தவனாயினும் அவன் சதாகாலமும் † மூக்கறையனாகவே இருந்தனன். அதைப்போலவே இந்த நெஞ்செரிந்தானும் "பிறர்துன்பம் தனக்கின்பமென்றிருப்பவனாகையால், அந்நியர் சுகானுபவம் இவனுக்குத் துன்பமாகவே இருக்குமென்று * பரிகாசமாய்ச் சொன்னான் இதனைகேள்வியுற்றவர்களனைவரும் கையைக்கொட்டி கலகலவென சிரித்துக்கொண்டிருந்தனர்.

நெஞ்செரிந்தான்:— அப்பா! நீங்களென்னை இவ்வித இழிவாய் மதித்து பரிகாசிப்பதினாற் பிரயோசனமென்ன? யான் நன்மையைப் புகன்றேனல்லாமல் துன்பம் விளைவதாய்ச் சொல்லவில்லை. இந்த துர்க்குணனும் நமது சிநேகித வகுப்பிற்சேர்ந்தவனானபடியால் நம்மைப்போலவே இவனும் சுகமனுபவிக்க வேண்டும். இந்த அநியாயமுத்தன் சொன்னது விபரமாய்ச் சொல்லவில்லை. அதனாலேயான் கவனியாமல் மறுத்தேன், நீங்கள் என்மீது கோபிக்கவேண்டாம்.

அநியாயமுத்தன்:— அவ்விதமாய்த் தாங்கள் வேறு விதமாய் நினைக்கவேண்டாம். உலக இன்பத்திற் கிசைந்தவையேயான் நமது துர்க்குணனுக்கு உபதேசிக்க முயன்றேன்.

துர்க்குணன்:— ஆ! அப்படியா! யானும் அதைத்தான் விரும்புவதாயினேன். அதைக்கொஞ்சம் விபரமாய் புகல்வீர்.

அநியாயமுத்தன்:— சரி! அவ்விதமே உபதேசிக்கின்றேன் கவனிப்பீர். ஆண்பிள்ளையாய்ப் பிறந்தபோதே பெண்ணாசையுமிருக்கவேண்டும். ஆகையால் ஓர்நடன சிங்கார தாசிப்பெண் ஒருத்திவந்திருக்கின்றாள். அவளோ மஹா அழகுடையவள்.

---

† மூக்கறையன் = மூக்கறுபட்டவன்.
* பரிகாசித்தல் = இகழ்ச்சியாய்ப் பேசுதல்.

அவளுக்குச் சமானமாய் மதுரை மரகதம், தஞ்சாவூர் தன பாக்கியம், புதுச்சேரி பொன்ரங்கம், காஞ்சீவரம் கனகவல்லி, மைசூர் மாணிக்கம், கோயம்பத்தூர் கோமளம், நீலகிரி நீல ஜாக்ஷி, வந்தவாசி வனவாக்ஷி, காசிதேச காமாக்ஷி, தென்காசி தெய்வரம்பை, முதலான தாசிகளெல்லாம் அவளுக்கு இணை யாக மாட்டார்க ளென்றால் அவளைக் கண்ட ஆண்பிள் ளைகள் மனமெவ்வித மாயிருக்கும் ஆ! ஹா !! அவளென்ன அழகு? என்ன அழகு? என்ன சுந்தரம்? அப்பப்பா! யான் சொல்லும்போதே மனமயக்கமா யிருக்கின்றது.

துர்க்குணன்:— அண்ணேன் மனோகர்வி! இந்த அநியாயமுத் தன் பார்க்காத தேவடியாள் வீடில்லை! என்றாலும் இப்போது தான் இவருக்கு என்மீது தயைபிறந்தாற் போலிருக்கின்றது,

மனோகர்வி:— ஆ! இவர்பார்க்காத தேவடியாள் வீடா! ஓர் நாள் இவர் ஓர் அழகான தேவடியாளிடத்தில் நேசமா யிருக் கையில் சிலபோக்கிரி பயல்கள் சேர்ந்து இவரை இடுப்பொடிய உதைத்தனர். அச்சமயம் யான்போய் அவர்களை அடித்துத் துரத்திவிட்டு இவருக்கு சகாயமாயிருந்தேன்.

துர்க்குணன்:— ஐயோ! அந்த பெண் ஆசையால் அடி உதை களும் உண்டோ!

மனோகர்வி:— ஆ! அதற்கென்ன சந்தேகமா? இன்பமென்பது ஒன்றிருந்தால் அதன் பக்கத்தில் துன்பமென்பது ஒன்றிரு க்குமல்லவோ! ஆகையால் பெண்ஆசை யினால் மனதிற்கு இன்பமும் சரீரத்திற்கு துன்பமும் நேரிடும் ஆனால், எங்களைப் போன்ற உத்தமாபத்தினி பிள்ளைகள் சகாயமிருந்தால் சரீரத் திற்கு துன்பமே யணுகாது.

துர்க்குணன்:— ஆ! அப்படியா? எனக்கு பனிரெண்டு வயதா கிறது இத்தனைநாள் யானிந்த இன்ப துன்பத்தை கவனிக்க வில்லை. என்றாலும் யான் இந்த இன்பதுன்பத்தை அநுபவிப்ப தென்னும் மார்க்கத்தை யெனக்குச்சற்று விபரமாய் போதிக் கவேண்டும்.

மனோகர்வி:— இது இவ்விதமாய் வாயினாற் சொன்னால் முடி யாது. இச்சமயமே நீ உனது வீட்டிற் சென்று எவ்விதமா

யினும் உனது தகப்பனிடம் பத்து விராகன் வாங்கிக்கொண்டு வந்தால் அதன்பிறகு தாங்களே கவனித்துக் கொள்வீர்.

என்று சொன்னவுடனே துர்க்குணன் அதிசயித்து ஈதென்ன பத்துவிராகனில் உலகஇன்பமிருக்கின்றதென்றால் ஆச்சரியந்தானே அடடா! நாம்இத்தனைநாளாய் இதைகவனியாமல் பலவிதமானவிளையாட்டு விஷயத்தினால் எவ்வளவோபணம் செலவுசெய்து விட்டோமே! இப்போது *சூட்சத்தி லிருக்கின்றது மோட்சமென்னுந் தன்மையாய் பத்துவிராகனில் உலக இன்ப மிருக்கின்றதென மதித்து "கேடுவரும்போது மதிகெட்டுவரும்,, என்னுந் தன்மையாய் தனக்குப்பின்னால் விளையும் கெடுதியை நினையாமல் திடீரென தனது வீட்டுக்குப்போய் தந்தையே சுக்கு, மிளகு. திப்பிலி, அதிக விலைசகாயமாய் விற்பதாய் ஓர்வியாபாரி சொல்லுகிறான். அதனையாவே சீக்கிரமாய் வாங்கிக்கொண்டு வருகின்றேன், அதற்காக பதினைந்து விராகன் வேண்டுமென்று தந்திரோபாயமாய்ச் சொன்னவுடனே அந்த மூடன்பிள்ளையின் குணத்தைப் பலதடவையும் பார்த்திருந்தும் யாதொன்றும் கவனியாமல் பதினைந்துவிராகன் கொடுத்துவிட்டான். அதனை வாங்கிக்கொண்டு தனது சிநேகிதர்க ளிருக்குமிடத்திற் சென்று மனோகர்வியின் கரத்திற் பத்து விராகனையும் கொடுத்து, எனதன்பிற்கிசைந்த நண்பா! தாங்கள் எனக்கு உலகஇன்பத்தை காண்பிப்பதற்காக உங்களிடம் இதோ பத்துவிராகன் கொடுக்கின்றேன். எவ்விதமாயினும் உலகஇன்பத்தை எனக்கு உபதேசஞ்செய்யவேண்டுமென வேண்டிக்கொண்டான். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற மனோகர்வியும் அநியாயமுத்தனும் இன்னும் இருக்கப்பட்ட துஷ்டநேயர்களுமாய்ச் சேர்ந்து மரகதமென்னும் ஓர் தாசிவீட்டிற் சென்று அவளிடம் இரண்டு விராகன்கொடுத்து துர்க்குணனை பார்த்துக் கொள்ளுவீர்களென்றுசொல்லிவிட்டு, எட்டுவிராகனையும் எடுத்துக் கொண்டுபோய் தமக்கிஷ்டமானபடி செலவுசெய்து மதுமாம்ஸபக்ஷணாதிகளுடன் நாவிற்கினிய நல்லுணவாதிகள் புசித்து வெறிமிகுந்தவராய் வேடிக்கையா யிருந்தனர்கள்.

இங்ஙனம் இவர்கள் இவ்விதமா யிருக்கையில் தாசிவீட்டிலிருக்கும் துர்க்குணன் அங்கிருக்கும் பெண்களைக் கண்டவுடனே அதிக சந்தோஷமா யிருக்கையில் அவர்கள் தமது குலாச்சாரத்திற்கிசைந்தபடியே இனிமையாய் பேசிக்கொண்டு அவன் மனதிற்கிசை

ந்தபடியே சுகானந்தமாய்ப் பாடிக்கொண்டிருந்தார்கள். துர்க்குணன் மனமகிழ்ந்து எத்தினமுங்காணாத சுகாநந்தத்தை இத்தினங் கண்டேன் சித்தமகிழலாச்சுதென மனோல்லாச மெய்தியவனுமிருக்கையில், அங்கிருக்கும் தாசிகளெல்லாம் அவனுடைய மதியீனத்தை கவனித்துக்கொண்டு இனி நாமனைவரும் இவனாலே தனவந்தராய் விடுவோமென்றிருந்தார்கள். ஆனால் துர்க்குணனும் தாசிகளின் இஷ்டப்படியே வேண்டிய திரவியமனைத்தும் தருவதாய் ஆசைவார்த்தை சொல்லிக்கொண்டேயிருந்தனனன்றி, காசு செலவுசெய்யாமல், இதோ கொண்டுவருகிறேன். அதோகொண்டு வருகிறேனென்று பலவிதமாகிய தந்திரவார்த்தைகளைச் சொல்லிக் கொண்டே நாலைந்துநாள் வரையினும் அவர்கள் வீட்டுவிருந்தாளியைப்போல நாவிற்கினிய நல்லுணவாதிகளுடன் சுகபோஜனம் புசித்துக்கொண்டிருந்தனன்.

இவன்நினைவு இவ்விதமாயிருக்கையில் ஓர்நாள் துர்க்குணன் இல்லாத சமயத்தில் மரகதம் தன்னைப்போன்ற தாசிகளையெல்லாம் அருகில் உட்காரவைத்துக்கொண்டு, அம்மா! ஈதென்ன ஆச்சரியம்? மனோகர்வியும், அபிப்ராயமுத்தனும் இந்த துர்க்குணன் தனவந்தன் வீட்டுப் பிள்ளையென்றும் இவன் திரவியம் செலவு செய்வதில் கர்ணனென்றும் பலவிதமான ஆசை வார்த்தைகளைச் சொல்லிவிட்டுப்போயினர்கள். இச்சமயமோ இவன்நம்மிடத்தில் திரவியஞ்சேகரித்துக்கொண்டு போக வந்தவனைப்போல இரண்டுவிராகன் கொடுத்துவிட்டு நாலைந்து விராகன்வரையிலும் வசூலித்துக் கொண்டானே இனியாமென்ன செய்வது? இவனோ தனது பெயருக்கிசைந்த விதமான மனதமைந்தவனாயிருக்கின்றானேயென்று விசனப்படுகையில், அருகிலிருந்த தாசிகள் அவளுக்கு தைரியமபுகன்று, அம்மா! அந்த துர்க்குணன் வரும்போது நீ தரையில் சயனித்துக்கொண்டு மிகவும் விசனமாய் அழுதுக்கொண்டிரு, அச்சமயம் நாங்கள் பலவிதமான தந்திர வார்த்தையால் அவனிடம் இருபதினாயிரம் விராகன் வரையினும் வசூலித்துக் கொடுக்கிறோமென்று சொன்னார்கள். இவர்கள் சொன்ன வார்த்தையைக் கேள்வியுற்ற மரகதமும் மனமகிழ்ந்து, இனி தனக்கு நற்காலம் வந்துவிட்டதென மகித்திருந்தனள். அந்த தாசிகள் தாம்நினைந்த காரியத்திற்கிசைந்த முயற்சியனைத்தும் தயார்செய்துக்கொண்டு வட்டி பணத்தினால் வயறு வளர்க்கும் ஓர் பெரிய * சவ்காரியை வரவழைத்து தமது வீட்டின் பின்புரத்திலிருக்கச் செய்தார்கள். அவனும் பதினாயிரம் விராகனும், பத்திரமெழுதும் துணைக்கருவியும் தயாராய்வைத்துக் கொண்டிருந்தனன் துர்க்குணன் வரும் சமயத்தில் குளிர்ஜுரம் கண்டு மரணமடையும்

* சவ்கார்=பணம் வேண்டும்போது கடன் கொடுத்து வட்டி வாங்கி ஜீவிப்பவன்.

பிரேதம்போல் வஸ்திரத்தினல் முக்காடிட்டு போர்த்துக்கொண்டு சயனித்திருந்தனள். மற்றதாசிகளோ வெனின் பிரேதத்தைச் சூழ்ந்திருக்கும் துக்கமுடையவர்போல மரகதத்தைச் சுற்றிலும் உட்கார்ந்து கொண்டு மனவிசாரமுடையவர்களா யிருந்தனர்கள்.

இங்ஙனம், இவர்கள் நினைவு இவ்விதமா யிருக்கையில் வெளியிற் சென்றிருந்த துர்க்குணன் தனக்கு மனேகர்வி அநியாயமுத்தன் முதலான சிநேகிதர்களால் கிடைத்த மாமியார் வீடுபோன்ற தாசிவீட்டுக்கு வந்து பார்க்கையில் தனது ஆசை நாயகியாகிய மரகதம் பிணம்போல சயனித்திருக்கவும் மற்றபெண்களெல்லாம் மஹா விசனத்துடன் கண்ணீர் சொரிந்தவர்களா யிருப்பதையும் கண்டு ஆச்சரியமுற்றவனுய் விசாரிப்ப தாயினன்.

துர்க்குணன்:— ஆ! என தன்பிற்கினிய சரசநாயகி! இன்றைக்கென்ன எம தரிசனமோ?

தாசிகள்:— அப்படியாதொரு அபாயமுமில்லை உம்து முகதரிசனமிருக்கும் வரையிலும் எமதரிசனம் கிடைப்பது கடினமேயாகும், ஆனுல் மன்வருத்தத்தினு லித்தகைய சஞ்சல முற்றவளாயிருக்கின்ருள்.

துர்க்குணன்:— ஆ! யானிருக்கும் வரையில் சஞ்சலமேது?

தாசிகள்:— கையிற் காசில்லாத சஞ்சலமே யாகும் மற்றவை யாதொன்று மில்லை.

துர்க்குணன்:— ஆ! அப்படியா? நீங்கள் அவ்விதமாய் மதிக்க வேண்டாம். யானிருக்கும் வரையில் பணத்திற்குக் குறைச்சலா? யானே தனபாலன் புத்திரனுச்சுதே. தனபாலன் சிநேகித மிருக்கும் வரையில் பணங்காசுக்கு குறைவேது?

மரகதம்:— (அழுதுக்கொண்டே) ஆ! பணம் காசு பெட்டியிலிருந்தால் அழகாயிருக்குமோ? அவைகளை செலவு செய்து ஆபரணங்களாய் செய்து அணிந்துகொண்டால் பார்ப்பவர்கள் அந்தபிரபுவின் தாசி இவ்வளவு சிங்காரமா யிருக்கின்ருளென புகழ்ந்து கொள்வார்கள்.

தாசிகள்:— அம்மா! மரகதம்! யாங்களெல்லாம் தனவந்தர் சிநேகிதத்தினல் நவரத்தின கசிதமயமாய்த் துலங்கும் ஆடை ஆபரண சிங்காரமாயிருக்கின்ருேம். உனது அதிர்ஷ்டம் இவ்

விதமாயிருந்தால் யாரென்ன செய்வார்கள்? இவரும் செலவு செய்வதில் கர்ணனுக்குச் சமானமானவரென்றாலும் தற்சமயம் கையில் காசில்லேபோலிருக்கின்றது. இதைக்குறித்து நீ விசனப்படுவதினாற் பிரயோசனமில்லை. அழவேண்டாம்மா?

மரகதம்:— கையிற் காசில்லாவிட்டாலும் கடன்வாங்கி ஆபரணங்களை செய்துக்கொள்ளக் கூடாதோ;

துர்க்குணன்:— ஆம்! ஆம்!! யானும் அவ்விதமே யோசித்தேன். அடுத்தவருஷம் நமது சவ்கார்ஒருவர் வருவார். அவரிடம் கடன்வாங்கி உனக்கு வேண்டிய ஆபரணங்களைச்செய்து தருகின்றேன் அஞ்சாதே பெண்ணே!

என்று சொல்லிக்கொண் டிருக்கும்போதே பின்கட்டிலிருந்த சவ்கார்வந்து என்ன சங்கதியென்று தெரியாதவன்போல விசாரிக்கையில் இவர்கள் நினைவை யறியாத துர்க்குணன் சொல்லுகிறான், ஐயா! இவளெனதுஆசைநாயகி. இவளுக்கு ஆபரணம் வேண்டுமென்கின்றாள். அடுத்தவருஷம் எமது சவ்கார் வருவார் அச்சமயம் அவரிடத்தில் கடன்வாங்கி வேண்டிய ஆபரணங்கள் செய்து தருகிறேனென்று சொன்னேன். இவள் அதை கவனியாமல் விசனப்படுகின்றாள். நீங்களாகிலும் சமாதானஞ் சொல்லுவீரென்றான். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற சவ்கார் சிரித்துக்கொண்டு சொல்லுகின்றான். ஐயா! சமாதானமென்ன இப்போதே யான் பதினாயிரம் விராகன் கொடுக்கின்றேன் நீர் கடன்பத்திரம் மாத்திரம் எழுதிக் கொடுத்து விடும். இந்தக்கடனை எனக்குஇப்போதே கொடுக்கவேண்டாம் உமது தந்தை இறந்துபோனபிறகு உமது தந்தையின் ஆஸ்தி பூஸ்திதியனைத்தும் உனது சுவாதீனமானபிறகு எனக்குக்கொஞ்சம்கொஞ்சமாய் கொடுத்துவிடுமென்று சொன்னான். இதனைக் கேள்வியுற்ற துர்க்குணன் அதிர்ஷ்டம் வந்தால் இவ்விதமல்லவோ வரவேண்டும். நமது தகப்பன் சாவதேது? நாம் இந்தக் கடனை கொடுப்பதேது? சவ்காரிவாயில் மண்ணைப்போட்டு பணத்தைவாங்கி மூட்டைகட்டி எடுத்துக்கொண்டு இந்த மரகதத்தையும் அழைத்துக்கொண்டு எந்ததீவிலாகிலும் சென்று சுகானந்தமாய் ஜீவித்திருக்கலாமென குருட்டு யுக்திகளைப் பலவிதமாய் யோசித்துக்கொண்டு சொல்லுகின்றான். ஐயா! சவ்காரியே எனது தகப்பன் ஆழிசஞ்சாரியாய்ச் சென்று அநேக தீவுகளிலும் வர்த்தகம்செய்து வெகுபொருள் சேகரி

த்திருக்கின்றார் இவையனைத்தும் எனது சுவாதீனமாகவே யிருக்
கின்றது. பதினாயிரம் விராகன் வாங்குவது எனக்கு சம்மதமில்லை,
ஒருலக்ஷம் விராகன் கொடுத்தால் எனது பெருமைக்குச் சரியாயிரு
க்குமென்றான். அந்த சவ்காரியும் சரிதானென்று சம்மதித்துக்கொ
ண்டு அச்சமயமே சென்று ஒரு லக்ஷவிராகனைப் பெரியமூட்டையா
கக்கட்டிக்கொண்டு வந்து துர்க்குணன்கையிற் கொடுத்து நூற்றுக்கு
ப்பத்துவீதமாய் வட்டியும் ஏற்படுத்தி அதனை வசூலித்துக் கொள்
ளும்படியான கடன்பத்திரமு மெழுதி வாங்கிக்கொண்டு போய்விட்
டான். தாசிகளுந்தலைமறைவாய் போய்விட்டனர் துர்க்குணன் அந்
த லக்ஷவிராகனையும் ஒருபெட்டியில்வைத்து பெண்ணே இதோபார்
த்தனையா பணப்படையல். மனிதனுக்கு நற்காலம் வந்தால் யாவும்
சரியாகவே யமைந்திருக்கும். ஆகையால் நீயும் அழகானந்த முகவஜீ
கர முடையசுந்தரி, இந்ததிரவியமும் இலக்ஷவிராகன். உலகிற்பிற
ந்தவர்களுக்கு மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசையெனும்
மூவாசையும் சூழ்ந்திருக்கும். ஆகையால், எனது மனதற்கிசைந்த
படியேசுகானந்தமாயிருப்பதற்கு நீயும் அகப்பட்டாய். செலவுசெய்
வதற்கு திரவியமும் கிடைத்தது. நாம் இன்னும்நாலைந்து தினத்திற்
குள் நமது மனதிற்கிசைந்தபடி சகலதீவுகளிலும் திரிந்து சுகானந்த
மாயிருக்கலாமென்று சொல்லிவிட்டு மிகவும் நம்பிக்கையுடன் திர
வியமூட்டையை மரகதத்தின் கையிற்கொடுத்து மறுபடியும் வாங்கி
க்கொண்டு பெண்ணே! இங்கிருந்தால் திருடர் அபகரித்துக் கொள்
வார்கள். யான் பத்திரப்படுத்தி வைத்துக்கொண்டிருக்கின்றேனென்
று அவளுக்கும் தெரியாமல் பின்கட்டிலிருக்கும் சுவற்றின் புரமாய்
புதைத்து வைத்துவிட்டுத் தனது வீட்டுக்குப் போயினன். இவை
யனைத்தும் தந்திரமாய்ப் பார்த்துக்கொண்டிருந்த ஓர் தாசிப்பெண்
அவன் போய்விட்டபிறகு அந்த லக்ஷவிராகனையும் மூட்டையைப்
போ லெடுத்துக்கொண்டு ஓடிப்போயினள்.

இங்ஙனம் இவர்கள்நினைவு இவ்விதமாயிருக்கையில் துர்க்குண
ன் தனதுவீட்டிற்சென்று தனது தாயைப்பார்த்து அம்மா! எனக்கு
அதிர்ஷ்டானுகூலம் வந்து விட்டதென்று சொன்னான். அவள்
அப்படியாவென மனமகிழ்ந்து மகனே இது எனது வயறு
செய்த பாக்கியந்தானென்று சொல்லி மகனே அதென்ன அதிர்ஷ்
டமென்றாள். அம்மா ஓர் அழகானந்த முகவஜ்ஜ்கரமுடைய தெய்வ
கன்னியைப்போன்ற ஓர்பெண் இலக்ஷ விராகனுடனே எனக்குக்

கிடைத்திருக்கின்றாள். யான் நாளையதினம் நமது வீட்டுக்கு அழைத்துக்கொண்டு வருகின்றேனென்று சொன்னான். தாயாகிய வல்லாளகண்டி மனமகிழ்ந்து, ஆம்! ஆம்!! அப்பா மகனே மருமகளில்லா வீடு மயானமென்பதுபோல வெட்டியான் சுடுகாட்டில் யாதொரு சந்தடியுமில்லாமல் உட்கார்ந்திருக்குந் தன்மையாய் யான் யாதொரு கலகமு மில்லாமலிருக்கின்றேன். ஆகையால் இன்றைய தினமே அழைத்துக்கொண்டு வருவாயென்று சொன்னாள், துர்க்குணனும் சம்மதித்து அச்சமயமே தாசிவீட்டில்வந்து பெண்ணே! சீக்கிரமாய்வருவாய் எனது தாயார் உன்னை அழைத்துக்கொண்டு வரச்சொன்னாள், நீ அங்குவந்தாலும் தாசிப்பெண் யென்று சொல்லவேண்டாம். வைசியப்பெண் யென்று சொல்லிவிட்டு யான் இவர்மீது ஆசையானதினால் எனது வீட்டிலிருந்த இலக்ஷவிராகனையும் எடுத்துக்கொண்டு வந்தேனென்று சொல்லிவிடு, அவர்கள்யாதொன்றும் கவனியாமல் நமது இனத்தின் பெண்தானென மதித்து நம்மிருவருக்கும் கலியாணஞ்செய்து விடுவார்கள். அச்சமயம் சகலமும் உன்னுடைய அதிகாரமாகவே இருக்குமென்று சொன்னான். இவன் மோசநினைவின் உண்மையை இன்னதென்றுங் கவனியாத மரகதம் மனமகிழ்ந்து, சரி! சரி!! நாம் இத்தனை நாளாய் காண்பேரிகழும் தாசியாயிருந்து இப்போது வைசிய கூட்டத்தில் வாழ்ந்திருப்பதற்காயிற்றேயென்று மனமகிழ்ந்தனள். அச்சமயம் அவன் தந்தையாகிய தனபாலன் தனது புத்திரனிருக்கும் சந்தோஷ மனோற்சாகத்தைக் கவனித்துத் தனது மனையாளாகிய வல்லாளகண்டியை விசாரிப்ப தாயினன்.

தனபாலன்:— பெண்ணே! இன்றையதினம் நமதுபுத்திரனாகிய துர்க்குணன் யாதோ ஓர்வித மனோல்லாசமா யிருக்கின்றானே இதனுண்மை உனக்குத் தெரியுமா?

வல்லாளகண்டி:— ஆ! ஈதென்ன கண்காக்ஷி! என் வயறென்ன இலேசானதா? அவனென் வயற்றில் பிறக்கவில்லையா தாயைப்போல பிள்ளை நூலைப்போல சேலை யென்னுந் தன்மையாய் என்வயற்றில் பிறந்தபிள்ளை என்னைப்போல சாமர்த்தியமுடையவனாயிருக்க மாட்டானோ?

தனபாலன்:— அதென்ன சாமர்த்தியம்? கொஞ்சம் விபரமாய்ச் சொல்வாயாகில் யானும் கவனித்து சந்தோஷப்படுவேன்.

வல்லாளகண்டி:— சரி சொல்லுகின்றேன் கவனிப்பீர் நமது புத்திரனாகிய தூர்க்குணன் நேற்றையதினம் தனது சினேகிதருடனே அடுத்த தேசத்திற் போய்க்கொண்டிருக்கும் போது அந்நகரத்தின் வைசிய வீதியில் ஓர்வைசியப்பெண் இவனைக் கண்டு ஆசை யுடையவளாய் தன் வீட்டிலிருந்த இலக்ஷவிராகனையு மெடுத்துக் கொண்டு வந்து விடுகிறேனென்று சொன்னாள். ஆனால் நமது புத்திரன் மிகவும் புத்திசாலியான படியால் எத்தகைய சமாச்சாரமும் தாயாரிடத்தில் புகன்று தாய் சம்மதித்தால் தான் சம்மதிக்க வேண்டு மென்பதாய் மதித்து என்னிடம் சொன்னான். யானும் அப்படியே அழைத்துக் கொண்டு வருவாயென்று சொன்னேன். அவனும் அவ்விதமேநன்கென சம்மதித்து தாய்சோற்றுறந்தால்வாசகமில்லை, யென்னும் பதத்தை நன்றாய் வாசித்தவனாகையால் என் சொற்படியே நாளையதினம் அந்த இலக்ஷவிராகனுடனே அந்த வைசியப் பெண்ணையும் அழைத்துக்கொண்டு வருவேனென்றான்.

தனபாலன்:— பெண்ணே என்னைப்போலவே என் பிள்ளையுமிருப்பானென் பதற்குச் சந்தேகமில்லை என்றாலும் யான் உயிருக்கு பயப்படாமல் வெளிதேசத்திற் றிரிந்து வியாபாரஞ் செய்து வெகு பொருள் சேகரித்து அந்த திரவியத்தினால் திருப்தி யடையாமல் அந்தந்த தேசத்திலிருக்கும் புருஷனை இழந்த அமங்கிலியஸ்திரீகளை யெல்லாம் கைவசப்படுத்திக்கொண்டு அவர்களிடமிருக்கும திரவியங்களை யெல்லாம் அபகரித்துக்கொண்டு ஓடிவந்துவிடுவேன். அவ்விதமே அநேக அமங்கிலியஸ்திரீகளை யெல்லாம் கைவசப் படுத்திக்கொண்டு அவர்கள் மணாளர்கள் மாடுபோற் கஷ்டப்பட்டு காசு சம்பாதித்து, வயற்றுக்கும் நாவுக்கும் துரோகஞ் செய்து ஆத்மதுரோகி மஹாபாபி யென அலைந்து அநேகவிதமாய் பொருள் சேகரஞ் செய்து பெட்டியில் வைத்துக்கொண்டு எடுத்தால் செலவாகுமோ? புசித்தால் செலவாகுமோ? வென சந்தேகமுடையவர்களாய் "பொன்காத்த பூதம்போல" பணப்பெட்டிக்கு காவலாயிருந்து கொண்டு வறுமை நோயால் ஆயுள் குன்றி எமலோக மணுகினால் அமங்கிலிகளென்ன செய்வார்கள். யாதொன்றும் கவனியாமல் துயரப் பட்டுக்கொண்டிருப்

பார்கள். அச்சமயம் யான் சென்று அவர்களுக்குப் பலவித மாய் பொருள் செலவு செய்து சந்தோஷப் படுத்தி, இனி நீங்கள் அஞ்சவேண்டாம். உமது புருஷன் எனக்கு சகோதர முறையான சிநேகித வாஞ்சையால் இருவரும் பிரியர்நட்பின ராயிருந்தோம். ஆகையால், அவருக்கும் ஆயுள் முடிந்து மரணமானர். நீயும் மனசஞ்சல மாயிருப்பதற்காயிற்றே பென விஸ்வாச பூனையைப்போல கொஞ்சம் பரிதாபமாய்ப் பேசி, அவர்களிடமிருக்கும்திரவியங்களையெல்லாம் அபகரித்துக்கொ ண்டு ஓடிவந்துவிடுவேன். இவ்விதமாய்* முண்டைச்சிகள்திரவி யங்களை யெல்லாம் அபகரித்துக் கொண்டு வந்து இரண்டு லக்ஷவிராகன் சேர்த்து அநேக பூஸ்திதிகள் வாங்கிக்கொண் டதினுல் எனக்கு தனபாலனென்னும் பெயரமைந்தது, ஆஹா! பெண்ணே! என்னைப்போன்ற சமர்த்தரெவர்களாயினு மிருப் பார்களா?

வல்லாளகண்டி:— ஐயோ! அநியாயமே! அப்பால் அந்த முண் டைச்சிகள் ஜீவிப்பதெவ்விதம்?

தனபாலன்:— ஆ! இது தெரியாதா? புருஷனிறந்த போதே மஞ்சள், குங்குமம், மலரணிதல் முதலான சுகமிழந்தார்கள். கையிலுள்ள திரவியம் போனபிறகு வயிற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு குய்யோ முறையோ வென கூச்சலிட் டழுது மரணமடைந்து போவார்கள். ஆனல் பிறர்துனபம் தனக்கின்ப மென்று சந்தோஷிக்கும் மாபாவிகள் கையைத் தட்டிக் கலகலவென சிரித்து சந்தோஷப்படுவார்கள்.

வல்லாளகண்டி:— சரி! சரி!! தகப்பன் பலபேரை மோசஞ்செ ய்து இரண்டுலக்ஷ விராகன் சேகரித்தால், உனது புத்திரன் ஒரே தடவையில் யாதொரு கஷ்டமுமில்லாமல் இலக்ஷவிராக னும் அழகான சிறுபெண்ணையும் சம்பாதித்துக்கொண்டு வரு வதற்காயினன். இவை யனைத்தும் எனது மங்கிலியபாக்கிய மும் வயறுசெய்த பாக்கியமுமாகும்.

தனபாலன்:— பெண்ணே! ஈதென்ன ஆச்சரியகாக்ஷி, யாங்கள் எமது சமர்த்தினுல் திரவியசேகரஞ் செய்கிறேமே யல்லாமல், உன்னல்யாதேனும்கிடைத்ததா? அவ்விதமிருக்க உன்னுடைய

மங்கிலிய பாக்கியமும், வயறுசெய்த பாக்கியமுமென்றுசொல்லுகின்றாயே ஈதென்ன மூடமதி?

வல்லாளகண்டி:— ஆ! நீஎன்ன மூடனாயிருக்கின்றாயே யான் உன்னைக் கலியாணஞ் செய்துக்கொள்வதற்கென்றிருந்தபடியினால்தான் நீ திரவியஞ்சேகரித்து தனவந்தனாவதற்கிசைந்த விதமாகவே அநேக முண்டைச்சிகள் உனக்கு திரவியங்களையெல்லாம் கொடுத்துவிட்டு வயறெரிந்து போனார்கள். எனது வயறுசெய்த பாக்கியத்தினால் நல்லபிள்ளை பிறந்தான். அவனும் உன்னிலும் விசேஷமாய் திரவியஞ்சம்பாதிக்கும் திறமையுடையவனாகவே இருக்கின்றான். இவையனைத்தும் என்னாலேதானேவந்தசம்பத்து.

தனபாலன்:— ஆம்! ஆம்!! பெண்ணே! எவ்விதமானாலும் பணம் தானே சிரேஷ்டம்.

என, பேராசையுடனே அற்ப சந்தோஷியா யிருந்தனன். இவன் நினைவு இவ்விதமா யிருக்கையில், துர்க்குணனானவன் அன்றைய பகற்பொழுதுபோய் இராப்பொழுது வந்தபடியால் மரகதத்தைபார்த்து பெண்ணே! இரவுகால மானதினால் இச்சமயமே வருவாயாகில் யாதொருவருங் கவனியாதபடியே உன்னை எனது வீட்டில் இரகஸ்யமா யழைத்துக்கொண்டுபோய் எனதுதாய்தகப்பனிடத்தில் பக்குவமாய்ச்சொல்லி, எனதுபாட்டனுக்கு பங்காளிவழியில் எனது அத்தைமகளென்று சொல்லி கலியாணஞ் செய்துக்கொள்ளுவேனென்று சொன்னான். மரகதமும் அவ்விதமே நன்றெனச் சம்மதித்துக்கொண்டு துர்க்குணனுக்குதெரியாமல் தனது அண்டைவீடு, பக்கத்துவீடு, எதிர்வீடு முதலான எல்லாவீட்டு தாசிப்பெண்களையும் அழைத்து, அம்மா! யான் உங்களுடைய சகாயத்தினால், இந்தபிரபுவை கலியாணஞ்செய்துக்கொண்டு வைசியக்கூட்டத்தில் சேர்ந்துக்கொண்டு வேசியென்ற பேரைமறைத்து வைசியப்பெண்ணாக வாழ்ந்திருப்பதற் காயிற்று, இவையனைத்தும் உங்களுடைய சகாயந்தானாகும் யென புகன்றாள், அவர்கள் கவனித்து, சரி! இவையனைத்தும் உன்னுடைய அதிர்ஷ்டானுகூலமாகும். சிலசமயம் எங்களுக்கு திரவியம் வேண்டியதாயிருந்தால் அப்போதைக்கப்போது பணப்படையல் போட்டுக்கொண் டிருப்பதாய் வாக்குதத்தம் செய்தால் போதுமானதென்றார்கள். அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற மரகதம் மனமகிழ்ந்து, ஆ! அதற்கென்ன யான் கஷ்டப்பட்

டபணமா? எப்படி செலவுசெய்கிறதென்று யோசிப்பதற்கு, நாமனை வரும் "பலபேரை மோசஞ்செய்து பணம் சம்பாதித்தும் வயற்றுக் கும் வாய்க்கும் துரோகஞ்செய்து,, பொன்காத்த பூதம்போன்ற மாபாவிகள் சேர்த்து வைத்திருக்கும் திரவியத்திற்குச் சிறகுமுளை ந்து பறக்கவைத்திடுவதுபோல வீட்டிலிருக்கும் காசை காட்டிவிரு க்கும் தூஸாய் செலவுசெய்வதற்கு தானே நம்மைப்போன்ற தாசிப் பெண்களின் துணைவகித்துத் துன்ப மடைவார்கள்.

ஓர்நாள் ஓர் தாசிப் பெண்ணானவள் தன்மனதில் ஓர் பெரிய சந்தேகந் தோன்றியதினால் தனது தாய்க்கிழவியை வரவழைத்து விசாரிப்பதானாள். அஃதெவ்விதமென்றால்,

அம்மா! உலகிற்ஜனித்த மனிதர்களில் அநேகர் தமது தகப்ப ன் பாட்டன் சேகரித்து வைத்திருக்கும் ஆஸ்தி பூஸ்திதியனைத்தும் நமது விஷயமாக செலவுசெய்து மனைவி மைந்தரை அன்னவஸ்திர த்திற்கு அலையவிட்டு வேடிக்கைபார்க்கும் விநோத கண்காக்ஷியென் னவென்று வினவ, தாய்க்கிழவி சொல்லுகிறாள். அம்மா! யாதா மொருவரும் உண்மையான கஷ்டப்பட்டு காசுசம்பாதித்து அநியா யத்திற் பிரவேசியாமல் சுத்தமனதமைந்தவராய் பகவத் பக்தியான ந்தமாய் வயற்றுக்கும் நாவுக்கும் துரோகம்செய்யாமல் நாவிற்கினிய நல்லுணவாதிகளருந்தி, இருக்கும்வரையில் சம்பாதித்ததற்கும், சாப் பிட்டதற்கும் சரியாய் விட்டதென்று ஆயுள்முடிந்தால் அரைக்கா சும் மீதியில்லாவிட்டால் அவர்களுடைய பிள்ளைகள்வயற்றைவளர்ப் பதற்கு பலவிதமாய்க் கஷ்டப்பட்டு காசுசம்பாதித்தால் பணத்தின் அருமை பெருமை தெரியும். அப்பப்பா உடல்வருந்தக் கஷ்டப்பட் டால்தானே ஒருபணம் கிடைக்கும். எறும்பு பலநாள் சேகரித்த ஒருபடியரிசியை ஆனையின் ஒருவாய்க்கு கொடுத்து விட்டதைப் போல காசை செலவுசெய்தால் கஷ்டப்பட வேண்டுமேயென்று ஜாக்கிரதையாயிருந்து தமது இனத்தின் பெண்ணைக் கலியாணஞ் செய்துகொண்டு மனைவி மைந்தருடனே சுகானந்தமா யிருப் பார்கள்.

ஆனால் சில மோசநினை வமைந்த துன்மார்க்க குணத்தையு டைய துரோகசிந்தனையமைந்த வஞ்சகர்கள் மாத்திரம் ஊராருடை மைக்குப் பேயாய்பறந்து காண்பவர் மனமிரங்கும் தன்மையாய் துர் க்குண சஹிதராய் அடுத்துக்கெடுத்தல், நயவஞ்சகம், சூது, வாது, பொய், புரட்டு, முதலாகிய மோசகுணத்தினால் பிறர்பொருளை யப

கரித்தும், அநேக ஆஸ்தி பூஸ்திகளை சேகரித் திருந்தாலும், ஆத்ம துரோகி மஹாபாபியென பலபே ரிகழும்படியாக உண்பது ஒருவருக்குந் தெரியாது உடுத்திக்கொண் டிருந்தால்தானே ஊராரைமோசம்செய்யலாமென்று குடிப்பதுகூழாயிருந்தாலும் நடிப்பததனவந்தர்வீட்டு மருமகப்பிள்ளையைப்போல வேஷமாய்த்திரிந்து பிறர்துன்பந்தனக்கின்பமென்னுந்தன்மையாய் ஏழைகளைவஞ்சித்து காசுசேகரித்து வைத்திருக்கும் துர்க்குணத்தினர்கட்கு பிறக்கும்பிள்ளைகள் தான்தேடாப்பொருளுக்குமாற்றுமில்லை,நிறையுமில்லையென்பதுபோல கைகொண்டவரைக்குஞ் செலவுசெய்து துர்க்குண அண்ணுத்தைகளாகிய அற்பநேயர் நட்பினுல் வீட்டிலுள்ள காசை காட்டிலுள்ள தூஸாய் மதித்து வீண்விஷயமாய் கள்ளுக்கும், சூதாட்டத்திற்கும் தாசிக்கும் பணத்தையெல்லாம் பலவிதமாய் செலவுசெய்துக்கொண்டிருப்பார்கள். அப்படிப்பட்ட பிரபுக்களைதான் நாம் நம்பி யிருக்க வேண்டுமென்று சொல்லுவார்கள்.

இவ்விதமெல்லாம் உலகியல்பிருக்கின்றது. அவற்றிற் கிசைந்த விதமே இந்த துர்க்குணன் தந்து தகப்பன் அநியாயமாய்ச்சேர்த்து வைத்திருந்த திரவியங்களுக்கு சிறகுமுளைந்து பறக்குந் தன்மையாய்ச் செலவு செய்வதற்காக என்னை தனது வீட்டில் அழைத்துக் கொண்டு போகிறுனென்று சொன்னுள். தாசிப்பெண்களனைவரும் மனமகிழ்ந் திருந்தனர்.

இவர்கள் நினைவு இவ்விதமா யிருக்கையில் துர்க்குணன் தாசி வீட்டுக்குவந்து பெண்ணே! மரகதம் இனி சீக்கிரமாய் உனது ஆடை ஆபரணுதிகளை யெல்லாம் அலங்காரஞ் செய்துக்கொண்டு வருவாய் இரவு காலத்திற் சென்றுல்தான் யாதொருவரும் பார்க்கமாட்டார்கள். நீ வீட்டுச்கு வந்தவுடனே வைசியப்பெண் யென்று சொல்லவேண்டும். ஜாக்கிரதை ஞாபகமில்லாமல் தாசிப்பெண்ணென்று சொல்லாதே. இதோ யான் முன்பு புதைத்து வைத்திருக்கும் இலக்ஷவிராகனையும் எடுத்துக்கொண்டு வருகிறேனென்றுபோய் பார்க்கும்போது காணுமையால் ஐயோ யாவரோ அபகரித்துக்கொண்டு போய்விட்டார்களே யென்று வயறெரிந்து நின்றபடியே திகைத்து நின்றுவிட்டான்.

மரகதவல்லி அவன்நின்றிருக்கும் பரிதாபத்தைப்பார்த்து ஆச்சரிய முற்றவளாய் ஆசைநாயகா! நீங்கள் யாதுகாரணமாக இவ்

விதமாய் மனசஞ்சல மெய்துகின்றீரென்று கேட்டனள். அவன் மனவிசாரத்துடனே சொல்லுகிறுன்

துர்க்குணன்:— பெண்ணே! யானென்னவென்று சொல்வேன்? சவ்காரிடத்தில் கடன்வாங்கிய இலக்ஷம் விராகனையும் இங்கு புதைத்து வைத்தேன். யாவரோ எடுத்துக்கொண்டுபோய்விட்டார்கள். இதைக்குறித்து என்மனம் விசனமாயிருக்கின்றதே.

மரகதம்:— ஐயோ! அப்போதே என்னிடம் கொடுத்துவைக்க மனமில்லாமல் புதைத்து வைத்ததனுலல்லவோ? இத்தகைய தாய் சித்தந்திகைத்துத் துயரப்படலாயினீர். சரி!! இனி உமது உண்மையான கருத்தென்ன?

துர்க்குணன்:— நமது வீட்டில்வருகின்ற தாசிப்பெண்களையெல்லாம் விசாரித்தால் உண்மையைத் தெரிந்துகொண்டு திருட்டு தாசிகளை அரசனிடம் ஒப்பித்துக் கையைவெட்டி காட்டில் ஓட்டிவிடச் செய்வோம்.

என, துர்க்குணன் மஹா சமர்த்தனைப்போற் பேசிக்கொண்டிருக்கையில் அருகிலிருந்த தாசிப்பெண்கள் கேள்வியுற்று மஹா கோபத்துடனே சென்று தமது புருஷர்களை யெல்லாம் துணையாய் அழைத்துக்கொண்டு வந்து சண்டைசெய்யும்படி ஏவினுர்கள். அந்த வேசிநேசர்களெல்லாம் சேர்ந்து துர்க்குணனை அடித்து உதைத்து இடுப்பை யொடித்து ஜீவஹிம்ஸை செய்யும்போது, அப்பப்பா! இனி இங்ஙனம் தாமதித்தால் ஆபத்தாகுமென மனமிரண்டு இவன் சிறுவயதில் வாசித்துக் கொண்டிருந்த நீதி சாஸ்திரத்தின் பாடலாகிய,

விருத்தம்.

கைப்பொருளெல்லாமழியும் உடம்பிற் ஹீனம்
கண்களித்த உறவினர்க்கும் கண்டபேர்க்கும்
செப்பரிய நகைக்கிடமாம் பாபமாகும்
செய்தொழிலுக் கிசைதேடும் சிலர்க்குக்கோபம்
இப்படியே பரத்தையர்தரின்பமெல்லாம்
இமைப்பொழுது மவருடனே இணங்கலாமோ
மைப்பரவும் கண்டத்தா னெம்பிரானை
மறைக்காட்டி லம்மானை வணங்குவீரே.

எனுந் தன்மையாய் இனிமேல் வேசியாசை காசளவும் நம்பலாகாதென சொல்லிக் கொண்டே தனது வீட்டுக்கு ஓடி வந்து

O-13MKK2,A
N13

யாதொருவரும் காணுமல் ஓர் பக்கத்தில் படுத்து நித்திரை செய்து அருணோதயத்தி லெழுந்திருக்கும்போது திரேகம் மெலிந்து எழுந் திருக்கச் சக்தியற்றவனு யிருந்தனன். அச்சமயம் அவனுடைய தாய்ஓடிவந்து என்னடாமகனேயென்றுவினவினள். அவன்தனக்கு நேர்ந்த அநியாய ஆபத்தை எவர்கட்காயினும் புகன்ருல் பரிகாசஞ் செய்வார்களென மதித்து, அம்மணி பித்தவாய்வினுல் ஊஷ்ண மதிகரித்து எழுந்திருக்கச் சக்தியில்லாம லிருக்கிறேனென்று பரி தாபமாய்ச்சொன்னுன் அவளுமியாதொன்றுங் கவனியாதவளாகை யால் வைத்தியனுக்கு பத்துவிராகன் கொடுத்து சவுக்கியப் படுத் தும்படி சொன்னுள், வைத்தியன் கைநாடியைப் பார்த்து ஆறு காசுக்கு சுக்கு, மிளகு, திப்பிலி, வாங்கிக்கொண்டுபோய் சூரணஞ் செய்து கொடுத்துவிட்டு யான் கொடுக்கும் அவுஷதங்கட்குப் பத் தியமே கிடையாது இஷ்டமான தெல்லாம் சாப்பிடுவீரென்று சொல்லிவிட்டு போயினன். துர்க்குணனும் தனக்கு நேர்ந்த ஆபத் தை பலதரமும் நினைந்து விசனமடைந்தவனுயினும் திரவியம் சம் பாதிப்பதற்கிசைந்த முயற்சியுடனே தனது குலாசாரப்படியே வியாபாரத்தை நடத்திக்கொண்டிருந்தனன்.

இங்ஙனம் இவர்கள் நினைவு இவ்விதமாயிருக்கையில் முன் னம் தாசிவீட்டில் இலக்ஷம் விராகனே துர்க்குணனுக்குக் கடன் கொடுத்தசவ்காராகிய தீயன்வட்டியும்முதலுமாய்சேர்த்து இரண்டு லக்ஷமாய் வசூலித்துக் கொள்வதற் கிசைந்த சமயம் பார்த்துக் கொண்டிருக்கும்போது தனது பெண்ணுக்குப் புருஷன் தேடிக் கொண்டு வருவதற்காக அனுப்பிய வாயாடியும், மாபாவியின் மக னுகிய பேயனுக்கு பெண் பார்துக்கொண்டு வருவதற்காக பிரயாண மாகிய குண்டுணியும் ஓர்நாள் சனி, ராகு, கும்பராசியிலிருந்ததைப் போல ஓர் வீட்டின் திண்ணையில்போய் உட்கார்ந்திருந்தனர்.

அந்தசமயத்தில் இவ்விருவரும் துர்க்குணத்தில் மிகுந்த குரூர வஞ்சக குணவதிகளாகையால் ஒருவர்க்கொருவர் தமது க்ஷேம லாப சமாச்சாரங்களை விசாரிப்பதாயினர்.

வாயாடி:— அம்மா! நீயார்? நீவசிப்பது எந்நகரம் யாதுகாரண மாய் இந்த வீட்டுத் திண்ணையில் வந்து உட்கார்ந்திருக்கின் ருய்.

குண்டுணி:— அம்மா! என்பேரைச் சொன்னால் கேட்பவர் கலகலவென சிரித்து ஆனந்தமாகும்படி யிருக்கும்.

வாயாடி:— ஆ! அப்படியா? அப்படிப்பட்ட பேரைக்கேட்க வேண்டுமென்று தான் யான் மூன்றுநாளாய் சோறில்லாமல் பட்டினியாய் வருகின்றேன். ஆகையால் என் பசிதணிந்து மனமகிழ உனது பேரைச் சொல்வாயம்மா?

குண்டுணி:— அம்மா! என்பெயரென்ன வென்றால் அண்டை வீட்டு சண்டையைக் கண்குளிரப் பார்க்கும் குண்டுணியாகும். யான் வல்லாளகண்டியின் குமாரத்தியாகிய அமிர்தரஞ்சனிக்கு தகுந்த புருஷனை தேடிக்கொண்டுவருகிறேன். வெய்யலாயிருப்பதினால் இளைப்பாறுவதற்கு இங்கு வந்து உட்கார்ந்திருக்கின்றேன். தாங்கள் யார் தமது பெயரென்ன? தாங்கள் யாதுகாரணமாக இந்த வீட்டுத் திண்ணையின்மீது வந்து உட்கார்ந்திருக்கின்றாய்.

வாயாடி:— ஆ! அப்படியா மெத்த சந்தோஷம்? யானும் உன்னைப்போலவே தான் வந்திருக்கின்றேன். என்பெயர் வாயாடி யான் மாபாவி மகனாகிய பேயனுக்குப் பெண்பார்த்துக்கொண்டு வருவதற்காக வருகையில் வெய்யல் தீக்ஷண்யத்தினால் இளைப்பாறுவதற்காக இந்த வீட்டின் திண்ணையில் வந்து உட்கார்ந்திருக்கின்றேன், ஆனாலும் நாமிருவரும் ஒரேகாரியத்தை நாடி வருவதால் நாமிருவரும் சம்மந்திகளாயினோம், ஆகையால் கலியாண விஷயத்தை சீக்கிரமாய் நடத்தி மனமகிழ்வோம்.

குண்டுணி:— ஆம்! ஆம்! இதுதான் தகுந்த யோசனையாகும் என்னுடன் வருவாய்.

என, புகன்று தன்னுடனே அழைத்துக்கொண்டு வல்லாளகண்டியின் வீட்டுக்கு வந்தனள். அவர்களைப் பார்த்தவுடனே வல்லாளகண்டி மிகவும் மரியாதை யுடையவளைப்போல க்ஷேமலாபம் விசாரித்துக்கொண் டிருக்கையில் அமிர்தரஞ்சினி அன்னபதார்த்தம்சமைத்து வந்த விருந்தாளிக்கும் வாழையிலையில் வட்டித்து தானும் உட்கார்ந்து அன்னம் புசித்துவிட்டு அவர்களுடனே யெழுந்து கைவாயலம்பிக்கொண்டு யாவரும் தாம்பூலம்புசித்து சந்தோஷமா யிருக்கையில் ஒருவர்க்கொருவர் சம்பாஷிப்ப தாயினர்.

வல்லாளகண்டி:— அம்மா! தாங்கள் யார்? யாது காரணமாக வந்திருக்கின்றீர்.

வாயாடி:— அம்மா! யான் வந்தகாரியத்தை உனக்குச் சொல்லுகின்றேன்கவனிப்பாய். அநேககாலமாய் கப்பல் வியாபாரஞ் செய்து பத்துலக்ஷம் விராகன் சேகரித்து கையிருப்பாக வைத்துக்கொண்டு தீய சவ்காரியென பெயர் வகித்திருக்கும் தனவந்தனுடைய குமாரனுகிய பேயனுக்குக் கலியாணஞ் செய்ய வேண்டுமென்று தகுந்த பெண்ணைத் தேடிக்கொண்டு வருகின்றேன், இந்த குண்டுணி யம்மாள் உமதுபெண் இருப்பதாக எனக்குச் சொல்லி அழைத்துக்கொண்டு வந்தனள். உமக்குச் சம்மதமானல் இந்த மாதத்திலேயே கலியாண க்ரியத்தை சரிப்படுத்தி விடுவோம்.

வல்லாளகண்டி:— சரி! அப்படியே செய்வோம்.

என, புகன்றனள். அச்சமயம் குண்டுணியும், வல்லாளகண்டியும், வாயாடியுடனே பிள்ளையைப் பார்ப்பதற்காக வேண்டிய பல்கார பக்ஷணங்கள் செய்துக்கொண்டு ஆடை ஆபரண அலங்கார சிங்காரமூாயணிந்துக் கொண்டு மாபாவியின் வீட்டுக்குப் போயினர்கள். இவர்கள் வருகையைக் கண்டமாபாவி யானவள் மனமகிழ்ந்து அவர்களுக்கு வேண்டிய உபசரணை புரிந்து அறுசுவை பதார்த்த திவ்யான்ன சுகபோஜன மதுமாம்ஸ பக்ஷணுதிகளுடனே விருந்து செய்து யாவருக்கும் பசிதணிய விருந்திட்டு தானும் புசித்து அவர்களுடனே யெழுந்து கைவாயலம்பிக்கொண்டு யாவரும் தாம்பூலந் தரித்துக் கொண்டு மனுேல்லாசமாய்ப் பேசுவதாயினர்.

மாபாவி:— அம்மா! நீ போனகாரியத்தை சரிப்படுத்திக்கொண்டு வந்து விட்டாயா?

வாயாடி:— ஆ! அதற்கென்ன சந்தேகமா? இதோ பார்த்தீரா இந்த அம்மாள் குமாரத்தியாகிய அமிர்தரஞ்சனியைப் பார்த்துக் கொண்டு வந்தேன். அழகிலோ தெய்வ கன்னிபைப் போலிருக்கின்ருள். ஆஸ்தி பூஸ்திதியோ கணக்கிட்டுச் சொல்ல முடியாது என்ருலும் பெண்ணின் தகப்பனுே யாதொன்றையும் கவனிப்பதில்லை "மவுனம் கலக நாஸ்தி,, யென்பதாய் எவரென்ன சொன்னுலும் ஏனென்றுங் கேட்கமாட்டார். யாவும் இந்த அம்மாளுடைய அதிகாரந்தான், பெண்

ணின் தமயனே வென்றால் தாய்தகப்பனுக்கு பிரியமில்லாத வனயிருக்கின்றான். ஆகையால் இந்த அம்மாள் தன்னுடைய குமாரத்திக்குஒருபுருஷனைத்தேடிகலியாணஞ்செய்துவைத்து மனமகிழ வேண்டுமென்று வெகு பிரயாசையா யிருக்கின்றாள். ஆகையால் உனது இஷ்டத்தைக் கஷ்டமில்லாமல் தெரிவிப்பாயாகில் நன்மையாயிருக்கும்

மாபாவி:— ஆ! அதற்கென்ன உனது இஷ்டம் போலவே யானும் சம்மதித்துக் கொண்டேன்,

என்று மாபாவி சொன்னவுடனே வாயாடியும், குண்டுணியும், மனமகிழ்ந்து அம்மா! வல்லாளகண்டி இனி உனது கருத்தென்ன என்று விசாரித்தனர்கள், சரி உமது இஷ்டப்படியே யாகட்டுமென்று வல்லாளகண்டி சொல்லிவிட்டாள்.

இங்ஙனம் இவர்கள் நினைவு இவ்விதமாயிருக்கையில் யாவரும் அவ்வரவ ரிருப்பிடம் போய்விட்டனர்கள். மாபாவி மகாமகிழ்ந்து இனி நமக்கு நற்காலம் வந்துவிட்டது இத்தனைநாளாய் மருமகளில்லாவீடு மயான மென்பதுபோல பலவிதமாய் ஆலோசித்துக்கொண்டிருந்து, தற்சமயம் நமது மனம்போல நமது புத்திரனுகிய பேயனுக்குக் கலியாணமாகின்றது; இனிநமக்கு அதட்டிமிரட்டி அதிகாரஞ்செய்வதற்கு சரியா யிருக்குமென்று மனமகிழ்வா யிருக்கையில் தீயனென்பவன் வீட்டுக்கு வந்து விசாரிப்பதாயினன்.

தீயன்:— பெண்ணே! இன்றைக்கென்ன மனேல்லாசமா யிருக்கின்றனையே.

மாபாவி:— ஆ! உமக்கின்னமுந் தெரியவில்லையோ? உமது மருமகள் வரப்போகிறுளே!

தீயன்:— ஆ! அப்படியா? மெத்த சந்தோஷம். பெண்ணின் குணமென்ன ஆஸ்தி பூஸ்திதி எவ்வளவிருக்கின்றது, பெண்ணின் தாய் தகப்பன் தமயன் முதலானோர் எவ்வளவிலிருக்கின்றார்கள். இவையனைத்தும் எனக்கு விபரமாய்ச் சொல்வாயாகில் யானும் மனமகிழ்வேன்.

மாபாவி:— சரி! அப்படியே தெரிவிக்கின்றேன் கவனிப்பீர், பெண் மிகவும் அழகானந்த முகவசீகரமா யிருக்கின்றாள். பெண் தகப்பனே மிகவும் தனவந்தன், பெண்ணின் தமயனே

அறிவில்லாத எருமைக்குச் சமானமாகிய மதியீனனுகையால் தாய்தகப்பன் தமது புத்திரியை நமதுபிள்ளைக்கு கலியாணஞ் செய்து வைத்து தனது ஆஸ்தி, பூஸ்திதி யனைத்தும் நமது சுவாதீனமாகச்செய்துவிடுவதாய்ச்சம்மதித்திருக்கின்றனர்கள்.

தீயன்;— ஆ! அப்படியா? மஹா சந்தோஷம், ஆனுல் கலியாண காரியம் சீக்கிரமாகட்டும். யானும் ஓர் வேசிநேசனுக்கு இலக்ஷ விராகன் கடன் கொடுத்திருக்கின்றேன். அதற்கு இப்போது வட்டியும் முதலுமாய் இரண்டுலக்ஷ விராகனு யிருக்கின்றது.

மாபாவி:— ஆ! அப்படியா! சரி! சரி!! அப்படிதான் பணத்தை ஒன்றுக்கு பத்தாய் சேர்த்து வாங்கவேண்டும். மெத்தசந்தோஷம், கடன் வாங்கியவனுக்கு பூஸ்திதி விசேஷமா யிருக்கின்றதா?

தீயன்;— ஆ! அவனுக்கென்ன குறைச்சல் அவனுக்கிருக்கும் ஆஸ்தி பூஸ்திதியை கணக்கிட்டுச் சொல்வதற்கு யாவராலாகும் அடடா! அவர்கள் பூஸ்திதியைப் பார்க்கும்போதே பொருமை யுடையவர்கள் வயறெரிந்து பெருமூச்சு விடுத்து மரிண மடைகுவரென்ருல், அப்போது அவர்கள் எவ்வளவு தனவந்தர்களா யிருப்பார்களோ வென்பதை நீயே கவனித்துப்பார்த்தால் உனக்கே தெரியும்.

மாபாவி;— ஆ! அப்படியா? ஐயோ! அவ்வளவு திரவியவந்தனைப் பார்த்துவிட்டும் தாங்களென்னமாய் உயிரைவைத்துக் கொண் டிருக்கின்றீரோ தெரியவில்லையே. சரி! சரி! இனி அவர்களை வெகு சீக்கிரத்தில் ஏழைபாகச் செய்துவிடலாம். ஒரு லக்ஷத்தை பத்துலக்ஷமாய்ச் செய்து விடுவாயாகில் உத்தமமா யிருக்கும்.

தீயன்:— சரி! எவ்விதமாயினும் சாமார்த்தியஞ் செய்துபார்க்க வேண்டும். இவை யனைத்தும் பிறகுயோசித்துக்கொள்வோம். இனி கலியாணகாரியம் சீக்கிரமாகட்டும்.

என, மனமகிழ்வாய்ப் புகன்றனன். அந்த மாபாவியானவள் தனது சகாயமாயிருக்கும் வாயாடியை வரவழைத்துச் சொல்லுகின்ருள்.

மாபாவி;— அம்மா! நீ! சீக்கிரமாய் வல்லாளகண்டியின் வீட்டுக்குப்போய் கலியாணப்பந்தல் முதலானவையும் ஜோடித்து

பெண்ணுக்கு நலங்கணிந்து நவரத்ன கசித மயமாய்த் துலங்கும் ஆடை ஆபரணங்களைச் சிங்காரித்துத் தயாரா யிருக்கும்படி சொல்லிவிட்டு வருவாய்.

வாயாடி:— என்ன அம்மா! உனக்கு உலகியல்பு கொஞ்சமும் தெரியவில்லையா? கலியாணஞ் செய்வதென்றால் பிள்ளை வீட்டார் கலியாண செலவு செய்து பெண்ணை தனது வீட்டில் அழைத்துக் கொண்டுவந்து, தமது பிள்ளைக்குக் கலியாணஞ் செய்துக்கொண்டால் யாவும் நமது அதிகாரமா யிருக்கும். இது தெரியாமல் அருமையாய்ப் பிறந்தபிள்ளையை வளர்த்து பெண் வீட்டாருக்கு ஒப்பித்து விடுவதுபோல கலியாணத்தை அங்கு வைத்துக் கொள்வது எனக்குக் கொஞ்சமும் இஷ்டமில்லை.

மாபாவி:— (சிரித்து) அம்மா! உனக்கு வாயாடி யென்றபேர் வைத்தவர்கள் மோசதந்திரங்களைக் கற்றுக்கொடுக்கவில்லையே யென்று யான் விசனப்படுகின்றேன்.

வாயாடி:— என்ன அம்மா! என்னை அவ்விதமாய் அலக்ஷியமாய் மதித்துக் கொண்டாயே? யான் பிறந்தபோதே தாய் தகப்பனையும் அலக்ஷியமாய் மதித்து அவர்களையும் பலவிதமாய்ப் பழித்து தகப்பனை அடித்து, தாயை உதைத்துப் பலவிதமாய் கலகம் விளைத்து அண்டைவீடு அயல்வீடு எதிர்வீடு பக்கத்துவீடுகளெல்லாங் கண்டு மனமிரளும்படியாய் பற்பலவிதமாய் சண்டை செய்துக்கொண் டிருந்ததினால் எனக்கு வாயாடியென பெயர்கொடுத்தனர். எனக்கு கலியாணமான வுடனேமாமிவீட்டுஎமனைப்போலஅவ்விடத்திலும்பலவிதகலகம்விளைத்து அவர்களையெல்லாம்மனமிரண்டு ஓடும்படியாய் அடித்துத் துரத்திவிட்டு யானே வீட்டுக்காரியா யிருக்கின்றேனே. இவ்வளவு சமர்த்துடைய என்னை நீ அலக்ஷியமாய் நினைப்பது ஆச்சரிய மல்லவோ?

மாபாவி:— அம்மா! நீ கோபித்துக் கொள்ளவேண்டாம். எப்படிப்பட்டவர்களும், தன்பலம், எதிரிபலம், காலபலம் மூன்றையும், அனுசரித்து பலவிதமாகிய நயவஞ்சக மோசஞ்செய்து எதிரிகளின் திரவியத்தை அபகரித்துக்கொள்ளவேணும், அது எவ்விதமென்றால் நாயானது தன்னை வளர்ப்பவர்கட்குக் காவ

லாயிருந்து திருடர்பயம், பகைஞர்பய மில்லாமல் காப்பாற்றி
னாலும், அது ஜனங்கள் மனமிரளுந் தன்மையாய்க் குலைப்பதி
னால் அதனைக்கண்ட யாவர்களும் அடித்துத் துரத்துவார்கள்.
அதுயாதேனும் தின்பண்டங்களின்மீது இச்சித்தாலும் தனது
இஷ்டத்தைப்போல அபகரித்துப் புசிப்பதற்கு முடியாது,
அவ்விதமாய் அவைகளை எடுத்தாலும் அருகி லிருப்பவர்கள்
தடியாலடித்து இடுப்பையொடித்துக் கொன்றுபோடுவார்கள்.
ஆனால் பூனையோவெனின் தன்னால் தன்னை வளர்ப்பவர்கட்கு
யாதொரு பிரயோசனமு மில்லாமலிருந்தாலும், தனது மோச
தந்திரகுணத்தினால் பரிதாபமான கூச்சலிட்டுக்கொண்டு வீட்
டுக்குள் மெதுவாய்சென்று அங்ஙனம் இருக்கும் பதார்த்தங்
களை யெல்லாம் அபகரித்துத் தின்று யாதொருவரும் காணாத
விதமாய் ஓடிப்போய் விடும், வீட்டுக்காரர் பார்த்து வயறெரிந்
து ஐயோ! பாழும்பூனையே இப்படியும் மோசஞ்செய்யலாமா?
இனி அகப்பட்டால் உன்னை அடித்துக் கொன்று போடுவோ
மென்று சொல்லிக் கொண்டிருப்பார்கள், அப்பால் மறுதின
மும் அந்தப்பூனையானது மிகவும் பரிதாபமான கூச்சலிட்டுக்
கொண்டு அவர்கள் முன்னாலே வந்தாலும் தமது கோபம்நீங்கி
மிகவும் பரிதாபமாய் தாங்கள் புசிக்கும் பக்ஷணங்களில் அதற்
கும் கொஞ்சம் வைப்பார்கள். அது உதட்டில்உறவும் மனதில்
வஞ்சகமும் வைத்துக்கொண்டே சமயம் பார்த்துக்கொண்டே
யிருந்து அவர்கள் மறுவேளைக்கு வைத்திருக்கும் உணவுகளை
யும் பக்குவமாய் அபகரித்துக்கொண்டு போய்விடும். இதுஇவ்
வளவு மோசதந்திரத்தினால் பிறர்பொருளை அபகரித்தாலும்
அதனை யாதொருவரும் அடிக்கமாட்டார். நாயானது தன்னை
வளர்ப்பவர்களை தாய், தகப்பனைபோல நினைந்து, திருடர்பயம்
பகைஞர் பயமில்லாமலும், திருட்டுகுணமும் வஞ்சகநினைவும்
இல்லாமலும் சுத்தமனதுடனே இருந்தாலும் குலைக்குந் தன்
மையால், அதற்கு யாதொன்றும் கிடைப்பதுமில்லை. மனிதர்
களும் அதனை அடித்துத் துரத்துகின்றார்கள். அவ்விதமாக
வே நீ வாயாடுவதில் பெரியவனன்றி பிறர்பொருளை யபகரிக்
கும் மார்க்கமுனக்குத் தெரியாது. யான் மாபாவியென மாநில
மெங்கும் பெயரெடுத் திருக்கின்றமையால் யெனது பெயருக்
கிசைந்த குணமும் சரியா யமைந்திருக்கின்றேன்.

வாயாடி:— ஆ! அப்படியா? எனக்கு இத்தனைநாளாய்த் தெரியாது, சரி! உனது பெயருக்கிசைந்த குணநிசயம் எத்தகையதானதோ? அதை எனக்கு கொஞ்சம் விபரமாய்ப் புகல்வாயம்மா?

மாபாவி:— அம்மா? எனது குண மெவ்விதமான தென்றால் அன்னவஸ்திரத்திற்குப் பஞ்சமுற்ற சுத்த ஏழையாயிருந்தாலும் சரியே அவர்களுக்குப் பலவிதமான ஆசைவார்த்தைகளைப் புகன்று அவர்கள் அன்றைக்கு சமைத்துண்ண வைத்திருக்கும் அரிசியையும் பக்குவமாய் அபகரித்துக்கொண்டுவந்துவிடுவேன். அவர்கள் அன்றையதினம் பட்டினியாயிருந்து பரதவிக்கும்போது வேடிக்கைபார்த்து மனமகிழ்வேன். இன்னும் சில மதியீனர்கள் கஷ்டப்பட்டு காசுசேகரித்து வயற்றுக்குப் புசிக்கத் தெரியாதென்னுந் தன்மையாய் பொன்கார்த்த பூதம்போல ஆத்மதுரோகி மஹாபாபியெனும் பெயரெடுத்திருக்கும் வம்பர்களிடமிருக்கும் பொருளையெல்லாம் வாங்கி பத்திரப்படுத்தி வைத்திருக்கின்றேனென்றுவாங்கி யெல்லாம் மொத்தமாய்ச் சேர்ந்தவுடனே ஓர்நாளைக்கு திருடன் அபகரித்துக் கொண்டு போனனென்று பொய்யழுகை யழுது அவர்கள் வாயில் மண்ணை போட்டதுபோல மோசஞ்செய்து அவர்கள் அப்படியே மனந்திகைத்து, ஐயோ பணமே கைவிட்டுப் போனாயோ யென்று ஏங்கி யழுது அன்னம் புசியாமலும் யாருடனும் சரியாய் பேசாமலும் வெறியனைப்போ லலைந்து வியாதியஸ்தராய் கஷ்டப்படுவதைப் பார்த்து கைகொட்டி நகைப்பதும் எனக்குஓர் வேடிக்கையான விளையாட்டாகயிருக்கும் இவ்விதமெல்லாம் ஊராரையெல்லாம் பலவித கஷ்டப்படுத்தியதினல் எனக்கு மாபாவியெனும் சிரேஷ்டபெயர் வந்தது, இப்போதும் அந்த பெயருக்குத் தகுந்த விதமாகவே வல்லாளகண்டியை மோசஞ்செய்ய யோசித் திருக்கின்றேன்.

வாயாடி:— ஆ! அப்படியா ஈதென்ன நூதன புதுமை? வல்லாளகண்டியை நீ மோசஞ்செய்வ தெவ்விதம்? அவளோ வல்லாளகண்டி யாச்சுதே.

மாபாவி:— ஆ! அதுஓர் பெரியகாரியமா? அவள்புருஷன் பலபேரை வஞ்சித்து பத்துலக்ஷ விராகன்வரையிலும் சேர்த்து

வைத்திருக்கிறதாக குண்டுணியம்மாள் என்னிடத்தில் சொல்லியிருக்கின்றாள் ஆகையால், எனது குமாரனாகிய துர்க்குணனை அவள்வீட்டி லழைத்துச்சென்று அம்மா இதோ உனது மருமகனை பார்த்துகொள்ளுவா யென்றால் அவளும் மனமகிழ்ந்து மருமகன் றானையுண்டானால் தரணியில் நிகரேது யென்னுந்தன்மையாய் அவளுடையஆஸ்தி, பூஸ்திதியனைத்தும் மருமகனுக்கு சுவாதீனமாய்ச் செய்து மகளையும் கலியாணஞ்செய்து கொடுப்பாள். அவனோ மாபாவியின் வயற்றில் பிறந்தபேயனைபடியால் அன்னமிட்டவர்க்குஅபாயத்தைநினைக்கும் அதர்மர்களைப்போலதன்பேரிலெழுதியபூஸ்திதியின் சுவாதீனபத்திரமும்மனையாளையும்அழைத்துக்கொண்டு என்னிடம்வருவான் அச்சமயம் யான் அவைகளையெல்லாம் விற்கிரயம்செய்து பணமாகச் செய்துகொண்டு, கலியாணப்பெண்ணை நாளொன்றுக்கு ஒருபடியரிசிக்கு நெல் குத்திக்கொண்டு வரவேணுமென்று தீர்மானஞ் செய்வேன். அவள் தன்னால்முடியாதென்றால் அடி. உதை அபிஷேகம் செய்து வயற்றுக்கு அன்னமிடாமல் அலைச்சற்படச்செய்வேன் அவளுடையதாய்தகப்பன்பெண்ணைக்காண்பதற்குவந்தால்கட்டுசாதம்கட்டிக்கொண்டு வரவேணுமென்றுதீர்மானஞ்செய்வேன். இவ்வளவு சாமார்த்தியமனைத்தும்என்னால் முடியுமாகையால் கலியாண செலவும் பெண்வீட்டார்களே செய்துக்கொள்ள வேண்டுமென்று தீர்மானஞ் செய்திருக்கின்றேன்.

வாயாடி:— (சிரித்து) சரி! சரி!! மாபாவியென்றாலும் இவளுக்குத் தகுமென்று மதித்து, அம்மா! நீதான் பெண்வீட்டாரின் ஆஸ்தி பூஸ்திதிகளை யெல்லாம் மோசமாயபகரித்துக்கொள்ள யோசிக்கின்றாயே. அந்தப் பெண்ணையும் நெல்குத்தி நாளொன்றுக்கு ஒருபடியரிசி கொண்டு வரும்படியாகவும் தீர்மானஞ் செய்ய யோசித்திருக்கின்றாயே பெண்ணின் தாய்தந்தை கட்டுசாதம் கட்டிக்கொண்டு வருக வேணுமென்றால் அவர்களுக்கு அரிசியேது கையிற்காசேது, அவ்விதமாய் வந்தாலும் ஒருவேளை சாதம்போட்டு அனுப்ப லாகாதா?

மாபாவி:— அம்மா! அப்படி சொல்லாதே அவ்விதமாய் யான் செய்தால் பூமியில் அக்கிரமங்களெம்புவ தெவ்விதம், அகால மரணமாவ தெவ்விதம், எங்களைப்போன்ற பாவிகளிருந்தால் தானே நாடு காடாகும். அன்றியும்,

கலி விருத்தம்.

அரிசிவிற்றிடும் அந்தணர்க் கோர்மழை
வரிசைதப்பிய மன்னருக் கோர்மழை
புருஷனைக்கொன்ற பூவையர்க் கோர்மழை
வருஷமூன்று மழையென பெய்யுமே.

என்ருலும் எங்களைப்போன்ற மாபாவிகளிருந்தால் பஞ்சத்திற்கு குறைவில்லை யென்பதாய் * மாமாங்கத்திற் கொருதடவையும் மழைபொழிய மனமில்லாமல் வருணபகவானும் வானத்தில் மறைந்துக்கொண்டிருப்பான்.

வாயாடி:— சரி! ஊரெங்கும் பாழானல் நீ எவ்விதமாய் ஜீவிப்பாய்.

மாபாவி:— ஆ! இது ஓர் அதிசயமா? யான் தான் ஊரார் பொருளை யெல்லாம் ஒருமிக்க அபகரித்து சேர்த்து வைத்திருக்கின்றேனே விராகனுக்கு படியரிசி யாகிலும் வாங்கி, யானும்என்துமணாளனும்மைந்தனும்சுகானந்தமாகவே புசித்து ஜீவித்திருப்போம்.

என, "கேடுவருமுன்னே மதிகெட்டு வருமென்பது போல," தனது பெயருக்குத் தகுந்த குருட்டுயுக்தி, திருட்டுயுக்திகளெல்லாம் வாயாடிக்கு குருஉபதேசம் போல ஒவ்வொன்ருய் விபரம் விபரமாயுரைத்து நீ இக்ஷணமே சென்று வல்லாளகண்டியின் முன் வாய்ப்பேச்சுக்குப் பஞ்சமில்லா விதமாய்ப்பேசி, அம்மா அந்த பிள்ளையின் தாயாருக்கு யாதொன்றும் தெரியாதாம் கலியாணத்தை உன் வீட்டிலேயே வைத்துக்கொள்ளச் சொல்லுகிருள். பெண்ணும் உன்னுடையது தான் பிள்ளையும் உன்னுடையது தான், பிள்ளையோ மிகவும் குணசாலி யாகையால் அறிவுடை யொருவன் மருமகனுனல் மாமியார் பெருமை சாமியும் புகழும யென்பதாய் சர்வாதிகாரமும் அவனுக்கே கொடுத்துவிட்டு உனதுவீட்டு மருமகனுகவைத்துக்கொள்வாயென்று சொல்லி இன்னும்உனதுபெயருக்கு

* மாமாங்கம்=பனிரெண்டு வருஷம்.

த்தகுந்த விதமான மாயப்பேச்சு மந்திரப்பேச்சு, தந்திரப்பேச்சு, முதலானவை யனைத்தும் வெகு விமரிசையாய்ப் புகன்று எவ்வித மாயினும் காரியத்தைச் சரிப்படுத்திக்கொண்டு வருவாய்.

என, தந்திரோபாயமாய்ச் சொல்லி யனுப்பினள். அந்த மாபாவியின் சொல்லைக்கேட்ட வாயாடியானவள் மனமகிழ்ந்து சரி! சரி!! வல்லாளகண்டி மகளுக்கும், மாபாவி மகனுக்கும் கலியாணஞ் செய்து வைத்தால் கலகத்திற்கு பஞ்சமா? ஆ! ஹா!! தினந்தோறும் நாம் அவர்களுக்கு நியாயம் சொல்லிக்கொண்டே ஜீவித்துக்கொண் டிருப்பதற்காகு மென மனமகிழ்ந்தவளாய் மாபாவியின் வீட்டில் அன்றையதினம் அறுசுவை பதார்த்த திவ்யான்ன சுகபோஜன மதுமாம்ஸ பக்ஷணாதிகளுடன் விருந்து புசித்து கைச்செலவுக்கு வேணுமென்று நாலுவிராகன் வாங்கிக்கொண்டு வல்லாளகண்டி யின் வீட்டுக்கு வந்து சொல்வதாயினள்.

வாயாடி:— அம்மா! வல்லாளகண்டி! அதிர்ஷ்டம் வருவதென் றால் அகஸ்மாத்தமாய் வருவது தான் சிரேஷ்டம்.

வல்லாளகண்டி:— ஆ! அப்படியா? அதனை எனக்கு கொஞ்சம் விபரமாய்ச் சொல்வா யம்மா?

வாயாடி:— ஆ! ஹ!! யானென்ன சொல்வேனம்மா? யான் சொல்லும் போதே எனக்கு நாவில் நந்நீர் சுரக்கின்றதே அடடா! உன்னுடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். அதிர்ஷ் டம் வந்தால் அப்படிதான் வரவேண்டும்.

வல்லாளகண்டி:— என்ன அம்மா! அதிர்ஷடம் அதிர்ஷ்ட மென்று உன் வாயில் சொல்லிக் கொண்டிருந்தால் எவ்வித மாய் கிடைக்கும்? சக்கரைச்சர்கரையென்று வாயினல் சொல் லிக்கொண்டிருந்தால் தித்திக்குமா? அவ்விதமாகவே யாதொன் றும் விபரமாய்ச் சொன்னால் தானே உண்மைவிளங்கும்.

வாயாடி:— சரி! சொல்லுகின்றேன். கொஞ்சம் கவனித்துக் கேட்பாய். உமது குமாரத்தியாகிய அமிர்தரஞ்சினிக்கு கலி யாணஞ் செய்துக் கொள்ள பேசியிருக்கின்றோமே அந்தப் பிள்ளைக்கு பத்துலக்ஷ விராகனுக்கு அதிகமாக ஆஸ்தி பூஸ் திதி யிருக்கின்றது. அஃதெவ்வித மென்றால், அவனுடைய தகப்பனாகிய தீயனென்பவன் உலகத்தாரை பலவிதமாய்

மோசஞ் செய்து பொருள் சேகரித்து தன் பேரிலிருந் தால் கடன்காரர் வசூலித்துக் கொள்வா ரென்று யாவும் தனது புத்திரனாகிய பேயனுக்கு சுதந்திரமாய் சுவாதீனப் பத்திரமெழுதிக் கொடுத்து விட்டான். அவனுடைய தாய் நம்மைப்போன்றவளல்ல யாவரேனும் மிரட்டினால் மனமிரண்டு காசு பணத்தை கொடுத்து சமாதானஞ் செய்துக் கொண்டு எவரிடத்திலும் பேசாமல் சண்டையென்றால் மனமிரண்டு மவுனம் கலக நாஸ்தியென மனதிலெண்ணி சும்மாயிருந்தால் சுகமென்றிருப்பாள். யானும் அவர்களிடத்திலிருந்து பொன் பொருளுடன் வெகு திரவியஞ் சேகரித்துக்கொண்டு யாதொரு சஞ்சலமுமின்றிய சுகவதியாயிருக்கின்றேன் இவையனைத்தும் சொல்வதினால் உனக்கு பிரயோசனமென்ன? ஆனாலும் அங்கு நடந்த சமாச்சாரத்தை உன்னிடம் சொல்லுகின்றேன். கவனிப்பாய். பிள்ளையை உன்னிடத்தில் அனுப்புவார்களாம். நீயே கலியாணஞ் செய்து வைத்து உனது வீட்டிலே வைத்துக்கொண்டு பிள்ளையின் தாய் தகப்பனுக்கும் அன்னவஸ்திரங்கொடுக்கவேண்டுமாம். ஏனெனில் அவர்கள் சமர்த்தாய்ப் பேச தெரியாதவரென்று யான் உனக்கு முன்னமே தெரிவித்திருக்கின்றேனல்லவா? அதை யனுசரித்துதான் சகலமும் நீயே பார்த்துக்கொள்ள வேண்டும்.

வல்லாளகண்டி:— சரி! அப்படியே செய்வோம்.

என ஓர் புரோகிதனை வரவழைத்து பேயனுக்கும் அமிர்தரஞ்சனிக்கும் கலியாணஞ் செய்வதற்காக ஓர்சுப தினத்தை ஏற்படுத்தி கலியாணத்திற் குரியவை யனைத்தும் சித்தப்படுத்தி வாயாடியினால் தீயன், பேயன் மாபாவி முதலானோர்களையும் வரவழைத்து கலியாணப்பந்தல் ஜோடித்து அமிர்தரஞ்சினிக்கும், பேயனுக்கும், நலங்கிட்டு மங்கள ஸ்நானஞ் செய்து வைத்து நவரத்தின கசிதமாய்த்துலங்கும் ஆடை ஆபரணங்களாற் சிங்காரித்து மணவரைப்பந்தலில் உட்கார வைத்து வேத வேதியர் அக்ஷதைத் தூவி சுபீபவா! வென்றாசீர்வதிக்க, பேயன் அமிர்தரஞ்சனியின் கழுத்தில்மங்கிலியஞ்சூட்டினன். வந்த விருந்தினரனைவரும் மனோல்லாசமாய் விருந்தமுதருந்திவிட்டு அவரவரிருப்பிடமேகினர்.

அப்பால் தீயனும் மாபாவியும் வல்லாளகண்டிக்கு தந்திரமாய்ச் சொல்வதாயினர்.

தீயன் — அம்மா! நீ என் சகோதரியைப் போலிருக்கின்றமையால் எனது புத்திரனை உனது புத்திரிக்கு கலியாணஞ் செய்துக்கொண்டாய். ஆனால் அவன் மிகவும் உத்தமனுகையால் எனது ஆஸ்தி பூஸ்திதி யனைத்தும் அவனுக்கே சுவாதீனமாய்ச் செய்து விட்டேன். இவனுடைய தாயாராகிய உனது அண்ணியார் யாதொன்றுங் கவனிப்பதேயில்லை. பசி வேளைக்கு மாத்திரம் பக்ஷணங் கொடுத்துவிட்டால் மாடு போற் கஷ்டப்படுவாள். ஆகையால் எம்முடைய ஆஸ்தி பூஸ்திதியாவும் உனதுமருமகன்பேருக்குயான்சுவாதீனமாய்ச்செய்து விட்டதுபோல உங்களுடைய ஆஸ்தி பூஸ்திதியும் உமது மருமகனுக்கு சுவாதீனமாய்ச் செய்து விட்டால் உத்தமமாகும்.

வல்லாளகண்டி:— அண்ணன் நீ சொன்னதெல்லாம் சரியே! எனது மணாளனும், எனது குமாரனும், ஊராருடைமைக்குப் பேயாய்ப் பறப்பவர்க ளாகையால் எங்ஙனமேனும் கடன் வாங்கினால் கடன்காரர்கள் வந்து எமது பூஸ்திதியை விற்கிரயப்படுத்தி வசூலித்துக் கொள்வாரென்று மனமிரண்டு என் பேருக்கு சுவாதீனமாய்ச் செய்து விட்டார்கள். யானும் எனது மருமன் பேருக்கு சுவாதீனமாய்ச் செய்து விடுகிறேன்.

என, வல்லாளகண்டியானவள் "கெடுவான் கேடு நினைப்பது போல,, துர்நினைவை துணைவகித்துக் கொண்டிருந்தனள். இவளுடைய குணத்தை கவனித்த பேயன் பேராசையுடையவனாய் இனி நமக்கு நற்காலம் வந்துவிட்டதென மனமகிழ்ந்தவனாய்த் தனது தகப்பனுக்கு சொல்லுகிறான்.

பேயன்:— தந்தையே? இனியான் மாமிவீட்டிலிருக்கின்றேன் நீங்களிருவரும்உமதுவீட்டிற்குபோய் விடுவீர்கள் இனிஉமக்கு யான் சொல்லவேண்டிய யோசனை ஒன்றுமில்லை. பெண்ணைக் கொடுத்தமாமி கண்ணைக்கொடுத்த தெய்வமென்று சொல்லும் அநியாய சாஸ்திரம் முழுமையும் நன்றாய் கவனித்தவனானபடியால் தாய் தகப்பன் யென்ற பாசத்தை மறந்து விட்டேன்.

மாபாவி:— ஆம்! ஆம்!! என்வயற்றில் பிறந்த உனக்கு தெரியாத யோசனையா! மனையாள் வந்தபோதே மாதாத்துரோகியென்று துர்க்குணபெயரெடுத்து மாமியை சாமியாய் மதித்திருப்பதுதான் உனது துர்க்குணத் தன்மையாகும்.

என, தந்திரோபாயமாய் சொல்லிவிட்டு தனது மணாளனுடனே தனது வீட்டுக்குப்போய் விட்டாள். இவர்கள் சொல்லிக்கொண்டிருந்த மோசநினைவையெல்லாம் உண்மையாய் மதித்திருந்த வல்லாளகண்டியானவள் ஓர்நாள் தனது மணாளனாகிய தனபாலனையும், புத்திரனாகிய துர்க்குணனையும், அருகில் உட்காரவைத்துக்கொண்டு மருமகனுக்கு தனது ஆஸ்தி பூஸ்திதியை சுவாதீனமாகச் செய்வதற்கிசைந்த தந்திரோபாய மனைத்தும் உபதேசிப்பதாயினள்.

வல்லாளகண்டி:— பிராணபதி! யான் ஓர் ஆலோசனை சொல்லுகின்றேன். தாங்கள் அதனை சற்று விபரமாய் கவனிக்கவேண்டும். தாங்களோ எவ்வளவுதிரவியமிருந்தாலும்மேலும்மேலும்கடன்வாங்கிவரைமைகளையெல்லாம்மோசஞ்செய்துவிடுகின்றீர், சில சமயம் யாவரேனும் சமர்த்தராயிருந்தால் உமதுபேரில்வியாஜ்யந் தொடுத்து விட்டால் உமது ஆஸ்தி பூஸ்திதியாவற்றும் ஒன்றுக்குபத்தாய் வசூலித்துக்கொண்டு போய்விட்டால் என்னசெய்வது? ஆகையால்நமது ஆஸ்தி, பூஸ்திதியனைத்தும் நமது மருமகனாகிய பேயனுக்கு சுவாதீனமாய்ச் செய்துவிட்டால் உத்தமமா யிருக்கும்.

துர்க்குணன்:— ஆம்! ஆம்!! தந்தையே யானும் பலபேரிடத்திலும் கடன்வாங்கி யிருக்கின்றேன். ஆகையால் நமது பூஸ்திதியனைத்தும் எனது பிரியமுள்ள மைத்துனராகிய இவர்பேருக்கு செய்துவிட்டால் உத்தமமாயிருக்கும். நாம் யாதொரு பூஸ்திதியும் சுவாதீன மில்லாமலிருந்தால் இன்னமும் யாம் பலபேரிடத்திலும் கடன்வாங்கி மோசஞ் செய்வதற்குத் தகுதியாயிருக்கும்.

என, தனது குணத்திற்கிசைந்த மோச தந்திரங்களையெல்லாம் சொல்லி தாய்தந்தையும் தானுமாக சம்மதித்து தாங்கள் பலபேரா

மோசஞ்செய்து சேகரித்த பூஸ்திதியனைத்தும் பேயனுக்கு விற்கிரய பத்திரமாக எழுதிக் கொடுத்துவிட்டு, இன்னும் இவ்விருவரும் விசேஷமாய்க் கடன்வாங்குவதும் பேயனுக்கு கொடுப்பதுமா யிருந் தார்கள்.

இங்ஙனம் இவர்கள் நினைவு இவ்விதமா யிருக்கையில் பேய னைவனும் ஊராருடைமைக்குப் பேயாய் பறக்குந் தன்மையாய் நாலாபக்கமும் கடன்வாங்க யோசித்து தன்பேரிலிருந்த ஆஸ்தி பூஸ்திதியனைத்தும் தனது மனையாளாகிய அமிர்த ரஞ்சினியின் பேருக்கு சுவாதீனமாகச் செய்து விட்டான்,

இவர்களுடைய குணாதிசய மனைத்தும் கவனித்த அமிர்தரஞ்ச னியானவள் ஆச்சரிய மடைந்தவளாய்த் தனக்கு சுவாதீனப்படுத் திய பூஸ்திதியின் பத்திரங்களையெல்லாம் கொண்டுபோய் பத்திரப் படுத்திக்கொண்டு தனக்காக ஓர்பெரிய மாளிகை கட்டிக்கொண்டு அங்ஙனம் சேவகர், சிப்பந்திகளெல்லாம் உருவின கத்தியுடனே இராஜாஅரண்மனையில் காவலிருப்பதுபோல நியமித்து, தனக்கு சமையல் செய்யுமபடியாகவும், தனக்கு சதாகாலமும் துணையிருப் பதற்காகவும் மனதைரியமுடைய ஸ்திரீகளை துணையாய் நியமித்துக் கொண்டு மஹாராணியைப்போலிருந்தனள். ஆனால்இந்த * அமிர்த ரஞ்சனியானவள் நியாயவதி யாகையால் துஷ்டர்களாகிய தனது தாய், தந்தை, தமயன், மாமி, மாமனார், புருஷன் முதலானோர்க ளுடைய உறவு வேண்டியதில்லையென மறுத்து சதா பகவத்பக்தி யானந்தமாய் விளங்குவதினால் அந்த துஷ்டர்கள் வராமலிருக்கும் படியாக திட்டஞ் செய்திருந்தனள்.

இங்ஙனம் அமிர்தரஞ்சினியின் நினைவு இத்தகையதாயிருக் கையில், அவளுடைய தாய், தகப்பனும் தனதுபெண் இவ்விதமாய் கோபத்துடனிருக்கும் காரண மென்னவென்று மாளிகையில் வந்த னர்கள். அங்ஙனம் காவலாயிருக்கும் காவலாளிகள் வரக்கூடாதெ ன்று அடித்துத் துரத்திவிட்டனர். அப்பால் அவள் புருஷனாகிய பேயன்சென்றான். அவனையும் அடித்துத் துரத்திவிட்டனர். இவை யனைத்துங் கவனித்த இவர்களனைவரும்ஆச்சரியமடைந்து தங்களா லானவரையிலும் பிரயாசைப்பட்டும் முடியாமலிருந்தபடியால் தலை விதி வசமேயென்று தமது வீட்டுக்குப்போய் விட்டார்கள். ஆனால்

* உத்தமகுணத்தைத் துணையாய் வகித்தவர்கட்கு சதாகாலமும்பகவத் பக்தியானந்தமாய் யாதொரு கஷ்ட நஷ்டமு மில்லாமல் சுகஜீவியாய் ஜீவி த்திருப்பதற் காகும்.

அவர்களுடைய பூஸ்திதியனைத்தும் அமிர்தரஞ்சனிவசம் அகப்பட்டுக் கொண்டதினால் அவள் அவைகட்குத் தகுதியான சேவக, சிப்பந்தி, கணக்குப்பிள்ளைகளை நியமித்து அவைகளில் வருகிற திரவிய லாபத்தினால் தானதர்ம பரோபகார முதலானவையும் புரிந்து பகவத் பக்தி யானந்தமா யிருந்தனள்.

அமிர்தரஞ்சனி இவ்விதமா யிருக்கையில் இவர்களுடைய குணாதிசய மனைத்தும் சகலரும் கவனித்து, அடடா! ஈதென்ன மோசம் நாம் தனபாலனுக்கும், துர்க்குணனுக்கும், அநேக ஆஸ்தி பூஸ்திதி யிருக்கிறதென்று மதித்து கடன்கொடுத்து விட்டோமே கடைசியில் இவர்கள் துர்க்குணத்தைத் துணைவகித்து பலவிதமாகிய கெடுமதியுடனே சகலமும் அமிர்தரஞசனிக்குச் சுவாதீனமாய்ச் செய்துவிட்டு கடைசியில் கைவரண்ட பரதேசிபோல மனந்திகைத்து நின்று விட்டார்களே யென வியாஜ்யந் தொடுத்து விட்டனர்.

இந்த சமாச்சாரத்தைக் கவனித்த தீயனென்னும் சவ்கார் திடுக்கிட்டு ஐயோ விதிவசமே யாம் பிள்ளையினால் பெரிய தனவந்தராய் விடுவோமென்று யாவும பேயனுக்கு சுவாதீனமாய்ச் செய்து விட்டோம். அவன்மனையாளுக்கு சுவாதீனமாய்ச் செய்து விட்டதினால் அவர்களுக்கும் அன்னவஸ்திரத்திற்குப் பஞ்சமாய் விட்டதே இனியாமென்ன செய்வோமென்று மாபாவியினிடத்திற் சொன்னான். அவள் ஆச்சரியமடைந்தவளாய் தனது கணவனையழைத்துக் கொண்டு வல்லாளகண்டியின் வீட்டுக்குவந்து விசாரிக்க அவள் நடந்தசமாச்சார மனைத்தும் புகன்று அம்மா! யாங்களென்ன செய்வோம்உனதுசொற்படியே உமதுபுத்திரனாகியபேயனுக்குஎனதுகுமாரத்தியாகியஅமிர்தரஞ்சனியைக் கலியாணஞ் செய்துகொடுத்து எனது ஆஸ்தி பூஸ்திதி யனைததும் மருமகனுக்கு சுவாதீனப் படுத்திவிட்டோம். அவன் நம்மையெல்லாம் மோசஞ் செய்வதற்காக தனது மனையாளாகிய அமிர்தரஞ்சனிக்கு சுவாதீனமாய்ச் செய்து விட்டான், அவள் சகலமும் தனது சுவாதீனப்படுத்திக் கொண்டு சகலரையும் அருகிற் சேர்க்காமல் அடித்துத் துரத்தும் படியாகவே காவலாளிகளை நியமித்து பூஸ்திதிகட்கும் சேவகர் சிப்பந்தி கணக்குபிள்ளைகளை வைத்து சகல திரவியலாபமும் தானே வசூலித்துக் கொண்டு தேவாலயங் கட்டிக்கொண்டு தானதர்ம பரோபகாரஞ் செய்துக் கொண்டிருக்கின்றாள். ஈதென்ன நூதன் புதுமை யென்றழுதனள்.

இவ்வார்த்தை யனைத்தும் கவனித்துக் கேட்ட மாபாவி வயற்றிலும் வாயிலும் அடித்துக்கொண்டு, ஐயோ விதிவசமே பேராசை திராத்தரித்திரமென்பதுபோல புதுபணம்கிடைக்குமென்று பழைய பணத்தையும் போக்கடித்தோமே இனி என்ன செய்கிறதென்றழுதனள். மனையாளுக்கு நேர்ந்த மனசஞ்சலத்தைக் கவனித்த தீயன் மனதைரியத்துடனே பெண்ணே நீ இதைக்குறித்துவிசனப்படாதே யான் உனது வார்த்தையைக் கேட்டதினால் விவேகமற்ற வேடனைப் போலானேன். இனி இதற்கு யாவரென்ன செய்வதென்று சொன்னான். மாபாவி சற்று மனதைரியமடைந்து, பிராணபதி! யான் ஓர் விதமான பேராசையால் இவ்விதமாகிய கஷ்ட நஷ்டமடைந்தேன். ஆனால் விவேகமற்ற வேடன் கதையைச் சற்று விபரமாய்ச் சொல்வாயென்றுகேட்டாள். அவ்வார்த்தையைக்கேள்வியுற்ற தீயன் சொல்லுகின்றான்.

### விவேகமற்ற

## வேடன் கதை.

ஓர் கானகத்தில் அநேககாலமாய் ஓர்வேடன் தனது குலாசாரப்படியே தனது கரத்திற்றாங்கிய தனுசினால் பக்ஷி மிருகங்களை வதைத்து ஜீவனஞ் செய்துக்கொண்டிருந்தனன். இவ்விதமாயிருக்கையில் ஓர்நாள் ஓர் விஸ்வாசகாதகனாகிய வேடன் இவனை எவ்விதமாயினும் மோசஞ் செய்து இவன் கையில்லை அபகரித்துக்கொள்ள வேண்டுமெனும் மோச எண்ணத்தினால் அவனிடத்தில் மிகவும் பிரியமாய் நேசித்து ஐயா! தமது தனுசினால் அநேக மிருகங்களை வதைத்து ஜீவித்துக் கொண்டிருக்கின்றீர். ஆனாலும் அந்த தனுசின் நாணி எப்போதும் அறுந்து விடாமல் உறுதியா யிருப்பதற்குக் காரணமென்ன வென்று கேட்டனன்.

அதற்கு வேடன் சொல்லுகிறான். ஐயா! இது சாதாரணமானதல்ல ஓர்நாள் யான் மனிதசஞ்சார மில்லாத கானகத்திற் சென்றிருந்தேன். அச்சமயம் அவ்வனம் ஓர் முனிவர் தபஞ் செய்துக் கொண்டிருந்தனர். ஆனால் அவ்வனத்தில் சிங்கம், புலி, கரடி, சிறுத்தை முதலாகிய துஷ்டமிருகங்கள் விசேஷமாய் வந்து அவரை பயங்கரப் படுத்திக்கொண்டிருந்தது. அச்சமயம் அவர் என்னை

அருகில் வரவழைத்து அப்பா! யான் ஜீவகாருண்யமாய் யிருப்பதினால் இந்த மிருகங்களைவதைப்பதற்கு அஞ்சுகின்றேன். இல்லாவிட்டால் இவைகளையெல்லாம் கல்லாய் சபித்திடுவே னென்றார்.

அந்த மஹானை யான்வணங்கி சுவாமி! துஷ்டநிக்ரக சிஷ்டபரிபாலனஞ் செய்வது அறிவுடையோர் செய்கை யாகையால் உமக்கு கெடுதி செய்வதற்கு மனமிரளச்செய்கின்ற துஷ்டமிருகங்களை கொன்றுபோடாமல் விட்டுவிடுவது நன்கல்ல. ஆனால் உம்மை காக்கும்படியாக யான் நினைந்தாலும் என்கையிலிருக்கும் தனுசிற்கு அவ்வளவு திடமில்லை சிலசமயம் நாணியை வேகமாயிழுத்தால் அறுந்துவிடுமாகில் சகாயஞ் செய்ய நினைந்து அபாயம் நேரிட்டாற்போல முதலுக்கே மோசமாய் என்னை அந்த மிருகங்கள் கொன்று தின்றுவிட்டாலென்ன செய்கின்றதென்று அஞ்சுகின்றேன். ஆகையால் தாங்களென்மீது அன்புகூர்ந்து இந்த தனுசிற்கு ஆசீர்வாதஞ்செய்து அறுதநாணியும் குறையாத அம்புறாத்தூணியும் கொடுத்துவிட்டால் யான் உமக்கு காவலாயிருப்பேன். தாங்களும் உமக்கிஷ்டமானபடி யாகாதி வேள்வி யோக முதலானவையனைத்தும் புரிந்து புகவத்பக்தியானந்தமா யிருப்பீரென்று சொன்னேன்.

எனது வார்த்தையைக் கேள்வியுற்ற அம்மஹானும் கருணைகூர்ந்து தனது அருகிலிருந்த கமண்டலத்தின் ஜலத்தை யெடுத்து எனது தனுசிலும அம்புறாத்தூணியிலும் தெளித்தார். அச்சமயத்தில் எனது கரத்திலிருந்த தனுசும் முதுகிலணிந்திருந்த அம்புறாத்தூணியும் பொன்மயமாய் விளங்கினது. யான் மனமகிழ்ந்து அச்சமயமே தனுசிற் கணைதொடுத்து மிருகங்களின்மீதெய்தேன், அவைகளெல்லாம் வீறிட்டலறி உயிர் விடுத்தது.

அன்றைய தினத்திலிருந்து மிருகங்கள் யாதொன்றும் அவ்வனத்தில் வருகிறதில்லை, அப்படித் தப்பித்தவறி வந்தாலும் யான் அவைகளை அஸ்திரத்தினல் கொன்று விடுகிறதுமா யிருப்பேன். இவ்விதமா யிருக்கையில் அந்தக் காட்டில் யாதொன்றும் பக்ஷணத்திற்கு அகப்படாம லிருந்தமையால் அம்முனிவனை வணங்கி சுவாமி எனக்கு இவ்வனத்தில் யாதொரு மிருகமும், பக்ஷிகளும் பக்ஷணத்திற்குக் கிடைக்கவில்லையே யானென்ன செய்வேன்? யான் அடுத்த வனத்திற்குப்போய் ஜீவிப்பதற்காக செலவருள்வீரென்று வேண்டினேன்.

எனது பிரியவசனத்தைக் கேள்வியுற்ற அம்மஹான் மனமகிழ்ந்து சரி! அவ்விதமாகவே உனது இஷ்டப்படியே போய் வருவாயென்று அனுக்கிரகஞ் செய்தனர். அன்றையதினத்திலிருந்துயான் பலவனங்களிலுந் திரிந்து விதவிதமான மிருகங்களையும் பக்ஷிகளையும் வதைத்துப் புசித்துக்கொண் டிருக்கின்றேன். சிலசமயம் நகரவாசிகளுக்கு அவைகளை விற்கிரயஞ் செய்தால் அதனாற் கிடைக்கும் திரவியங்களை சேர்த்துவைத்திருந்து என்மனதிற்கிசைந்த அழகானபெண்களைக்கலியாணஞ்செய்துகொண்டேன். அவர்களுக்கும் பிள்ளைகள் பிறந்திருக்கின்றார்கள். அந்தப் பிள்ளைகளும் என்னைப்போலவே வேட்டையாடிக்கொண்டு ஜீவிப்பதற் கியலாமல் குடியானவர்களைப்போலபயிரிட்டு ஜீவித்துக்கொண் டிருக்கின்றார்களென்று சொன்னான்.

அவ்வார்த்தையைக் கேள்வியுற்ற வஞ்சகன் சொல்லுகின்றான் ஐயா! உலகிலுதித்த மனிதர்கள் பெண்ணைக் கலியாணஞ் செய்துக்கொண்டேனென்று சொல்வது வழக்கம். தாங்கள் பெண்களைக் கலியாணஞ் செய்துக் கொண்டேனென்று சொன்னீர்களே அவ்விதமாய் எத்தனை பெண்களைக் கலியாணஞ் செய்துக் கொண்டீர்களென்று கேட்டனன். அதற்கு வேடன் சொல்லுகின்றான். ஐயா! யான் முதலில் ஓர்பெண்ணைக் கலியாணஞ் செய்துக்கொண்டு அதன்பின் இஷ்டமான பெண்களை யெல்லாம் கலியாணஞ் செய்துக் கொண்டேன் எனக்கு இப்போது ஐந்து மனைவிகளும், பதினைந்து பிள்ளைகளு மிருக்கின்றார்கள். அவர்களை யெல்லாம் காப்பாற்றுவதற்கு நாளொன்றுக்கு ஐந்துவிராகன் பத்துவிராகனுக்கு மிருகங்களும் பக்ஷிகளும் விற்கிரயஞ் செய்து அநேக திரவியங்களை சேகரித்துக் கொடுக்கிறேன். இத்தனை வருஷ காலமாக இந்த அம்புறாத் தூணியில் அஸ்திரங் குறை யாமலும் எடுக்க எடுக்க வளர்ந்துக் கொண்டே யிருக்கின்றது இந்த தனுசும் ஒடிய வில்லையென்று மிகவும் பெருமையாய்ச் சொன்னான்.

அவன் புகன்றவை யனைத்தும் வினவிய அந்த வஞ்சகன் உதட்டில் உறவும், மனதில் பகையுமாய்ச் சொல்லுகிறான். தாங்கள் மிகவும் தர்மகுணசாலி யாகையால் உமக்கு யாவும் கிடைத்தது யானும் அவ்விதமே இந்த தனுசையும் அம்புறாத் தூணியையும் ஓர் ரிஷியினிடத்தில் வாங்கிக்கொண்டு வந்திருக்கின்றேன். இதுவும் அவ்விதமாகவே என்னைக் காப்பாற்றுகின்றதென்று சொல்லிவிட்டு

நாலைந்து நாள்வரையினும் அவனுடனே திரிந்துக் கொண்டிருப்பதும் அந்திப்பொழுதானால் அவனிடத்தில் கொடுத்த இவைகளை பத்திரமாய் வைத்துக் கொண்டிருப்பிரென்று சொல்லிவிட்டு தான் மஹா உத்தமனைப் போலிருந்தனன்.

இவன் நினைவையறியாத வேடன் இவன் மஹா உத்தமனென நம்பியிருந்தவனாகையால் ஓர்நாள் இரண்டு தனுசையும் அம்புறாத் தூணிகளையும் அந்தவஞ்சகன் கையில் கொடுத்துவிட்டு ஸ்நானஞ் செய்வதற்காக ஆற்றுக்குப் போயினன். அந்த சமயம் பார்த்துக் கொண்டிருந்த அந்த வஞ்சகன் அந்த தனுசுகளையும் அம்புறாத் தூணிகளையும் எடுத்துக்கொண்டு கானக மார்க்கமாகவே அடுத்த வனங்களில் பிரவேசித்து வெகு தூரத்தில் ஓடிப்போயினன்.

அப்பால் வேடன் ஸ்நானபானஞ் செய்துக்கொண்டு வந்து பார்க்கும்போது அம்புவில்லையும் காணவில்லை அருகில் காவலிருந்தவனையுங்காணவில்லை. என்ன செய்வான்? அப்படியேசோர்ந்தழுது தன்னை தேற்றுவாரில்லாமல் தானே மனதைரியப்படுத்திக்கொண்டு அந்தக்கானக முழுமையும் சுற்றிக்கொண்டு தேடியலைந்தனன். எவ்விதமாய் தேடினும் வைத்தவன் மறந்தால் எடுத்தவன் கொடுக்கானென்பதுபோல,

கவி.

தன்கைப்பொருளும் தன்னாயுதமும்
பிறன்கைகொடுக்கும் பேதையும் பதரே.

என்பதுபோல தனது கையிலிருந்த அஸ்திரத்தை அந்த வஞ்சகனிடம் கொடுத்ததினாலல்லவோ அபகரித்துக்கொண்டு போயினனென்று மனவிசார மடைந்தவனாய்ப் போய்விட்டனன்.

அவ்விதமாகவே நாம் சம்பாதித்தவை யனைத்தும் நாமே வைத்துக்கொண்டிருந்தால் நமக்கு இவ்வளவ மனசஞ்சலம், நேரிடாது ஆனாலும்பெரிதல்ல எனக்கு ஓர் வேசி நேசனாகிய துர்க்குணனென்பவன் எனக்குவட்டியும் முதலுமாக இரண்டுலக்ஷ விராகன் கொடுக்கவேண்டும் அதனை வசூலித்துக்கொண்டு ஜீவித்திருப்போமென்றான்.

மாபாவி:— ஐயோ! அந்த துர்க்குணனும் அமிர்தரஞ்சனியின் தமயனுஞ்கூட இப்போது அவர்களும் நம்மைப்போலவே யாதொரு காசும் சுவாதீனமில்லாம லிருக்கின்றார்களே,

தீயன்:— அதைக்குறித்து நமக்கென்ன வியாஜ்யந் தொடுத்துவிட்டால் கலகம் பிறந்தால் ஞாயம் பிறக்கும் அப்பால் ஆகின்றதைப் பார்த்துக் கொள்ளுவோம்.

என்று சொல்லிவிட்டு பாக்கித்தொகையை வசூலிப்பதற்காக வியாஜ்யந் தொடுத்துவிட்டான். அவ்விதமே ஒவ்வொருவரும் தனபாலன் மீதும், துர்க்குணன்மீதும், பேயன்மீதும், தீயன்மீதும், வியாஜ்யந் தொடுத்துவிட்டார்கள். அந்நகரத்தரசன் அவர்களனைவரையும் தலையாரிகளால் அரண்மனையில் வரவழைத்து விசாரிக்கலாயினன்.

அரசன்:— அடா! துர்க்குணநீயோசிறுபிள்ளையாயிருக்கின்றாயே நீ என்னகாரணத்தினால் ஒரு லக்ஷவிராகன் கடன் வாங்கினாய்.

துர்க்குணன்:— அரசே! ஓர்தாசியின் மோசகுணத்தினால் பேராசை பொருள் நஷ்டமென்னுந் தன்மையாய் இவரிடத்தில் யான் இலக்ஷவிராகன் கடன்வாங்கி பூமியில் புதைத்து வைத்தேன். அதை எவர்களோ திருடிக்கொண்டு போயினர் இப்போது யான் இவருக்கு கடன் கொடுக்க என்கையில் அரைக்காசுமில்லை.

என, பரிதாபமாய்ச் சொன்னான் இவனைப்போல அநேகர் கடன் கொடுக்கல் வாங்கல் முதலானவை யாவும் இராஜசபையிற் சொல்லிக் கொண்டிருக்கையில் அரசன் சற்று நிதானித்து இதற்கு காரணகர்த்தாயாரென்று விசாரித்தனர். அவர்களனைவரும் அமிர்தரஞ்சனியென்று நடந்தவையனைத்தும் விபரமாய்த் தெரிவித்தார்கள். அரசன் அப்படியாவென அருகிலிருந்த தலையாரிகளால் அமிர்தரஞ்சனியை வரவழைத்து விசாரிப்பதாயினர்.

அரசன்:— பெண்ணே! ஈதென்ன இவர்களனைவரையும் நீ மோசஞ்செய்து விட்டு இவர்களுடைய ஆஸ்தி பூஸ்திதியனைத்தும் நீ அபகரித்துக் கொண்டதாகச் சொல்லுகின்றார்களே இனி இவர்கள் ஜீவிப்பதெவ்விதம்.

அமிர்தரஞ்சனி:— அரசே! அவர்கள் சொல்வ துண்மையே யாகும். அஃதென்னவென்றால் உலகினுதித்த மாந்தர்களில் யாதா மொருவரும் சூதுவாதில்லாமல் சுத்தமனதுடையவரா யிருந்தால் இகத்தில் கீர்த்தியும் பரத்தில் முக்தியுமடைதற் கிசைந்த இலக்ஷுமி திருவருள் பெற்று, சகல சம்பத்துடனும் சதா சுகஜீவியாய் ஜீவித்து ஆயுள் முடிந்தபிறகு சாலோக, சாமீப, சாரூப, சாயுஜ்யமென்னும் மோக்ஷசாம்ராஜ்ய மடைவார்கள். அஃதன்றி நாம் சதாகாலமும் பூமியில் ஜீவித்திருப்போமெனும் மனகர்வத்தினால் பிறர்துன்பம் தனக்கின்பமென்று சதாகாலமும் கலகஞ்செய்து பிறர்மனதிற்கு சஞ்சலமும், துன்பமும், துயரமும், நேர்ந்து அலைச்சலுற்றுத் திகைக்கும்படியான மோசநினைவு, அடித்துக்கெடுத்தல், பொறாமை, நயவஞ்சக முதலான துர்க்குணத்தைத் துணைவகித்திருப்பவர்கட்கு மூதேவி துணையாயிருந்து, அவர்களை பலவிதத்திலும் துயரப்படச்செய்து கஷ்டப்படுத்துவதற்காகும், இதற்குத் திருஷ்டாந்தமாக யான் சாந்தம், பொறுமை தயாளம், தெய்வபக்தி, தருமகுணம் முதலானவைகளை துணைவகித்து, சுத்தமனதாயிருந்தமையால் எனக்கு சதாகாலமும் குறைபாத திரவிய சம்பத்து கிடைத்து சதா சுகஜீவியா யிருக்கின்றேன். இவர்களனைவரும் துர்க்குணத்தை துணைவகித் திருந்ததினால் இத்தகையதாய்க் கஷ்டநஷ்டமடைந்து அலைச்சற்படுவதாயினர். இதற்கு யாவரென்ன செய்வது? இதோபார்த்தீரா யான் இவர்களுடைய பூஸ்திதி யனைத்தும் கிரயத்திற்கு வாங்கியதற்கு சாக்ஷியாக யாவும் என்னுடையதென்றே சுவாதீனப் பத்திரமெழுதி கொடுத் திருக்கின்றார்கள்.

அரசன்:— ஈதென்ன ஆச்சரியம்? நீயோ பெண்பிள்ளை யாச்சுதே. நீ இவ்வளவு திரவியங்கொடுத்து, இவர்களுடைய பூஸ்திதிகளை எவ்விதமாய் கிரயத்திற்கு வாங்கிக்கொண்டாய?

அமிர்தரஞ்சனி:— (சிரித்து) அரசே! இவர்களுடைய மோசநினைவை என்னென்று சொல்வேன்? இவர்கள் ஆண்பிள்ளைகளாகையால், ஓர் வியாபாரத்தை முதலாக வைத்துக்கொண்டு, மிகவும் உத்தமகுணத்தினர்போல பலசரக்குகளை விலைசகாயமாகவும் விற்கிரயஞ் செய்துக்கொண் டிருப்பார்கள். அச்சமயம் சில மதிஹீனர்கள் மாடுபோற் கஷ்டப்பட்டு திரவியஞ் சேகரிக்

கத்தெரியும், செலவழிக்கத் தெரியாதென்று "பொருள் தனைப் போற்றிவாழ்,, என்னும் பதத்தை கழுத்தளவில் வைத்துக் கொண்டு, ஆத்மதுரோகி மஹாபாபியெனா வயற்றுக்கும் நாவுக்குந் துரோகஞ்செய்து, எறும்பு அநேகநாளாய் நொய்களை சேர்த்துவைத் திருந்தால் (யானைக்கு ஒருவாய் பக்ஷணமாகக் கொடுப்பதுபோல) அநியாயவட்டிக்கு ஆசைப்பட்டு இந்த துர்க்குணத்தினர்களிடம் கொடுத்தால் இவர்கள்வாங்கி பத்திரப் படுத்திக்கொண்டு வெள்ளி, பொன், நவரத்தின முதலியவைகளால் ஆபரணாதிகள் செய்து மனைவிமைந்தருக்கு அணிந்துவிட்டு மீதியா யிருப்பவைகளுக்கு பூஸ்திதிகள்வாங்கிவைத்துக்கொண்டு, சமயம் நேரிட்டபோது, கடன்காரர்வாயில் மண்ணைப்போட்டதுபோல தன்பேரி லிருப்பவைபனைத்தும் மனைவிமைந்தர்மீது சுவாதீனப் படுத்திவிட்டு, கடன்கொடுத்தவர் வந்துகேட்டால் வியாபாரத்தில் நஷ்டமாச்சுதென்று வஞ்சகதந்திர வார்த்தைகளைப் பேசிக்கொண்டு மோசஞ் செய்வதுமாயிருப்பார்கள்.

அரசன்:— ஐயோ! இவ்விதமெல்லாம் அநியாயஞ் செய்தால் பாபமல்லவோ?

அமிர்தரஞ்சனி:— அரசே! அதற்கென்ன சந்தேகமா! ஜீவர்கள் பிறந்தார். இருந்தார். இறந்தாரென்பது உலகியற்கையா யிருக்கின்றபடியால்

கட்டளைக் கலித்துறை.

மனையாளும்மக்களும் வாழ்வுந்தனமுந்தன்வாசல்மட்டே
இனமானசுற்றம்மயானமட்டே வழிக்கேதுதுணை
தினையாமளவெள்ளளவாகிலு முன்புசெய்ததவம்
தனையாளவென்றே பரலோகஞ்சித்திக்குஞ்சத்தியமே

என்னுந் தன்மையாய் உலகியல் பிருக்கின்றதென்று கவனித்து,

வெண்பா.

இருப்பதுபொய் போவதுமெய் யென்றெண்ணி நெஞ்சே
ஒருத்தருக்குந் தீங்குநினையாதே—பருத்ததொந்தி
நம்மதென்று நாமிருக்க நாய்நரிகள் பேய்கழுகு
தம்மதென்று தானிருக்குந் தான்.

என்பதை யனுசரித்து என்றைக்கிருந்தாலும் இறப்பது உண்மையென மதித்து தன்னைப்போன்ற ஜீவனுக்கு யாதொரு கெடுதியும் நினையாம லிருக்கவேண்டும், அவ்விதமின்றி அநியாயத்தைத் துணைவகித்திருந்த ஜீவர்கள் ஆயுள்முடிந்து மரணமானால் அவர்கள் ஆவியானது ஆண்டவனிடத்திற்சென்றபோது அவர்கள்செய்த அநியாயமானது அவர்கள் மனதிற்கு துணையாயிருந்து சாக்ஷிசொல்லும் அப்போது அவர்கள் செய்த பாபத்திற்குத் தகுந்தவிதமாய் பகவானால் மறுஜனனமெடுத்து பலவித கஷ்டநஷ்டமடைந்து துன்பமனுபவிப்பது உலகியற்கையாகும், அவ்வித மில்லாமல் யாதொருவருக்கும் தீங்கு நினையாமல் பிறர்பொருளை இச்சியாமலும் தான் கஷ்டப்பட்டு சேகரிக்கும் திரவியத்தையே செலவு செய்து ஜீவித்துக்கொண்டு சுத்தமனதமைந்தவர்களா யிருந்தால் இகத்தில் கீர்த்தியும் பரத்தில் முக்தியு மெய்துவார்கள்.

அரசன்:— . சரி! அவ்விதமானால் பகவான் சகலருக்கும் நற்குணமே பொருந்தி யிருக்கும்படி செய்தால் யாதொருவரும் பாபஞ் செய்யாம லிருப்பார்க ளல்லவோ!

அமிர்தரஞ்சனி:— அரசே! பகவான் தாயைப்போலவும் ஜீவர்கள் பிள்ளைகளைப்போலவு மிருக்கின்றார்கள். தாயானவள் பல பிள்ளைகளைப்பெற்றாலும் சகலரும் நன்மார்க்கத்தை யனுசரித்திருக்கவேணுமெனும் எண்ணத்தினால் சகலரையும் வித்யாசாலையில்விடுத்துகல்விகற்பிக்கச்செய்தால்அவர்களிற்சிலர் துஷ்ட பிள்ளைகளுடன் சேர்ந்து விளையாடிக்கொண்டிருந்து காலத்தை வீணாக்கச்செய்துவிட்டால்அவனுடையவாலிபவயதில் சம்பாதிக்கத திறமையின்றி ஆயுள்வரையினும் அன்னவஸ்திரத்திற்குப் பஞ்சமாயலைவார்கள். சிலபிள்ளைகள் வித்யாசாலைக்குப் போகாமல் கைத்தொழிற் புரிந்துக்கொண் டிருந்தால் தனது வாலிப காலத்திலிருந்து ஆயுள் வரையினும் கஷ்ட ஜீவனைய் ஜீவிப்பார்கள். சிலபிள்ளைகள் அற்பசிநேகம்பிராணசங்கடமென்று துஷ்டப்பிள்ளைகளுடன் சேராமல் வித்யாசாலையிற் சென்று ஆசிரியன் போதிக்கும் கல்வியைக் குறையாமல் கற்றுணர்ந்து வித்யா சமர்த்தனா யிருந்தால் சகலரும் புகழுந்தன்மையான கீர்த்திப்ரகாசமாய் இராஜாங்க உத்தியோகம் புரிந்து நானூறு, ஐந்நூறு விராகன் சம்பாதித்து மாநிலத்தோர் மஹாராஜனென்று மதிக்குந்தன்மையாய் திரவியஞ்சேகரித்து

மனைவி மைந்தருடனே ஜீவித்திருப்பார்கள். அச்சமயத்தில் இவர்களைப்பெற்ற தாயைப்பார்த்து அம்மா! இந்தப் பிள்ளைகளையெல்லாம் நீபெற்று சிலரை அன்னவஸ்திரத்திற்குப் பஞ்சமாயலையச்செய்வதும், சிலரைமாடுபோற் கஷ்டப்படச் செய்வதும்; சிலரை யாதொரு கஷ்டமுமின்றி மஹாதனவந்தராய் மனைவி மைந்தருடன் சுகானந்தமாய் ஜீவித்திருக்கச் செய்வதும் நீதியோ வென்று கேட்கத் தகுமோ! அவ்விதமே பகவான் ஜீவர்களை சிருஷ்டித்து அறிவையும் கொடுத்திருக்கின்றார். அறிவை ஸ்திரப்படுத்தி நற்குணமுள்ளரா யிருந்தால் ஜனனங்கள் தோறும் தனவந்தராய் மனைவிமைந்தருடன் சுகானந்தமாய் ஜீவித்திருப்பார்கள் ஆனால் சிலர் அஞ்ஞானத்தைத் துணைவைத்து தீயவினையினால் வஞ்சகம் சூது, வாது, மோசம், அடுத்துக்கெடுத்தல், பொய், கொலை, களவு, முதலாகியவை யனைத்தும் புரிந்து தன்னைப்போன்ற ஜீவர்களைப் பலவிதமாய் துன்பஞ் செய்துக்கொண்டிருந்தால் ஆயுள் முடிந்தபின்பு மறுஜனனத்தில் கூன், குருடு, செவிடு, ஊமைகளாய்ப் பிறந்து திரவியஞ் சேகரிக்கத் திறமையில்லாமல் அன்னவஸ்திரத்திற்கு பஞ்சமாய் அலைந்து திரிவார்கள். ஆகையால் இதற்கு காரணம் ஜீவர்களே யன்றி பகவானல்ல வென்றுணர்வீர்.

அரசன்:— சரி! அவ்விதமானால் நீயாதொரு கஷ்டப்படாமலும் இவர்களுடைய பூஸ்திதியனைத்து சுவாதீனப் படுத்திக்கொண்டு இவர்களை அன்னவஸ்திரத்திற்கு பஞ்சமாய் அலையச் செய்வது பாபமல்லவோ?

அமிர்தரஞ்சனி:— அரசே! யான் இவர்களுக்கு யாதொரு ஆசை வார்த்தையும் சொல்லி மோசஞ் செய்யவில்லை. இவர்கள் பல பேரிடத்திலும் கடன் வாங்கிக்கொண்டு பணங்கொடுத்தவர் வாயில் மண்ணைப்போட்டதுபோல கெடுவான் கேடுநினைக்குந் தன்மையாய் இவர்கள் மோசமாய் சேகரித்த ஆஸ்தி, பூஸ்திதியனைத்துந் தமது வசத்திலிருந்தால் கடன்காரர்கள் வழக்குத் தொடுத்து வசூலித்துக் கொள்வாரென்னும் மோசயெண்ணத்துடனே எனக்கு சுவாதீனப்படுத்தி விட்டார்கள். இவ்விஷயத்தில் எனக்கு யாதொரு பாபமும் கிடையாது. ஆகையால்;

வெண்பா.

தீயாரைக்காண்பதுவும் தீதே திருவற்ற
தீயார்சொற்கேட்பதுவும் தீதே - தீயார்
குணங்களுரைப்பதுவும் தீதேயவரோ
டிணங்கியிருப்பதுவும் தீது.

என்னுந்தன்மையாய் யான் இவர்களை அருகிற் சேர்க்காமல் சுத்தமனதாய்ப் பகவத் பக்தியானந்தமாய் தானதர்ம பரோபகாரம் புரிந்து இகத்தில் கீர்த்தியும் பரத்தில் முக்தியுமெய்து மார்க்கத்தை யனுசரித்திருக்கின்றேன். ஆகையால் இந்த துன்மார்க்கர்கள் மாத்திரம் இந்த தேசத்தி லில்லாமல் ஓடிப்போய் விட்டால் நமது தேசத்தி லிருப்பவர்கட்கு யாதொரு கஷ்டநஷ்டமுமில்லாமல் சுகானந்தமா யிருப்பதற்காகும்.

என்று, நடந்தவை யனைத்தும் ஆதியோ டந்தம்வரையினும் விபரம் விபரமாய்ச் சொன்னவுடனே அரசனுக்கு கோப மதிகரித்து அருகிலிருந்த மாபாவி, தீயன், பேயன், துர்க்குணன், வல்லாளகண்டி முதலானவர்களைப் பார்த்து, துர்க்குணத்திற்சிறந்த குரூரகுணமமைந்த துஷ்டர்களே நீங்கள் கெடுவான கேடு நினைப்பது போல் மோச குணத்தைத் துணைவகித்திருந்ததால் உங்களுக்கு இப்போது "சூதும்வாதும் வேதனைசெய்யும்," என்பதுபோல பலவிதமான கஷ்டநஷ்டம்நேர்ந்து அன்னவஸ்திரத்திற்குப் பஞ்சமாய்க் கஷ்டப்படநேரிட்டது. நீங்கள் இந்நகரிலிருந்தாலும் அநேகருக்குக்கெடுதி சம்பவிக்கும், ஆகையால், நீங்கள் இந்நகரி லிருக்ககூடாது யென்று அருகிலிருந்தகாவலாளிகளையழைத்துநீங்கள் இன்றையதினமேஇந்த துர்க்குணரை மறுதேசத்திற்கு ஓடிப்போகும்படி துரத்திவிட்டு, இனி இவர்கள் இந்நகரத்தில் வந்தாலும் சேர்க்கவேண்டாமென்று சொல்லிவிட்டார். காவலாளிகளும் அரசன் உத்தரவின் படியே வல்லாளகண்டி, துர்க்குணன், மாபாவி, பேயன் தீயன், முதலான துர்க்குண சிரேஷ்டர்களையெல்லாம் அத்தேசத்தை விடுத்து அந்த தேசத்தின் ஆரண்யத்தில் கொண்டுபோய் விட்டு விட்டு அரண்மனைக்கு வந்துவிட்டார்கள்.

ஆனால் அமிர்தரஞ்சனி நற்குணம் பொருந்திய உத்தமியாகையால் துஷ்டர்களை அருகிற் சேர்க்காமல் சுத்த மனதுடனே சதா காலமும் தான தர்ம பரோபகாரம் புரிந்து பகவத் பக்தியானந்தமாய் தனக்கு ஆகஸ்மாத்தமாய் கிடைத்த ஆஸ்தி பூஸ்திகளினால் வரும் திரவியலாபத்தினால் அன்னவஸ்திரம் குறையின்றி சுகானந்தமாய் ஜீவித்துக்கொண் டிருந்தனள்.

## அகடவிகட அமிர்தரஞ்சினி கதை.

முற்றிற்று.

85324

பூ. சு. துளசிங்கமுதலியார் அண்டு சன்ஸ், சுந்தரவிலாசம் பிரஸ்
பெரம்பூர் பாரக்ஸ் போஸ்ட், மதராஸ்.

---

## நூதன பவளக்கொடியாள் சரித்திரம்.

அல்லிநாயகி தர்பாரில் தேசவிசாரணை புரிந்தபின் புலந்திரன் தன்தாயாராகிய அல்லியிடம் பவளத்தேர்கேட்க தாதிகளால்அல்லி பவளமிருக்குமிடமறிந்து தனஞ்செயனுக்கு நிருபமெழுதி தூதரிடம் தந்தனுப்ப தூதர்கள் இந்திரபிரஸ்தம்சென்று நிருபத்தை தர்மரிடம்தர தர்மர் தனஞ்செயனுக்கு அறிவிக்க பறைசாற்றச் செய்ய சாம்பன் பறையறை ஓசையைக்கேட்ட அர்ச்சுனன் சுபத்திரையிடம் விடைபெற்று தர்மரிடமவந்து விஜயமுணர்ந்து கண்ணனுடன் தனஞ்செயன் மதுராபுரிக்குச்சென்று புலந்திரனுடைய இஷ்டப்படி பவளத்தேர் கொண்டுவருப்படி அல்லிநாயகியால் அனுமதி பெற்று கண்ணனுடன் பவளக்கொடிவனம்வந்து வேடரால் பவளக்கொடி மின்னளின் வனப்பைக் கேள்வியுற்றுமோகித்தபர கண்ணன் பெண்வடிவெடுத்துப் புலம்ப அச்சமயத்தில் பவளக்கொடி வருகை ஏற்பட்ட அப்பெண்மணியாள் அர்ச்சுனனை பவளக்கொடியால் கட்டிவிட்டுச்செல்ல பார்த்தன் மறுபடியும் காமுற இறந்தவன் போலிருக்க கண்ணபிரான் பிரலாபிக்க பவளக்கொடி மின்னாள் சரப்பளியைக் கையில் கட்டி பிழைப்பு மூட்டிச்சென்று தாதிகளை விடுத்து சரப்பளியைக் கேட்டும் கொடுக்காததால் வெகுண்டுசொல்லக் கண்ணன் வேடனைப்போல உருக்கொண்டு அர்ச்சுனனை அன்னப்பட்சியாக்கி பவளநாயகியிடம் தந்துசெல்ல தனஞ்செயனென்றறிந்து அவளை விவாகம் செய்தபிறகு அர்ச்சுனன் இறந்ததாய் கண்ணன் மாயம்செய்து யாவருக்கும் விசனமுண்டாக்கி மறுபடியும் சந்தோஷம் விளைவிக்க புலந்திரனுக்குப் பவளநாயகி பவளத்தேர் தந்தனுப்புதல் இக்கேட்லாக்கில் கதை சுருக்கமாயிருந்தாலும் புஸ்தகத்தில் பாடல்களெல்லாம் பார்ஸி வர்னமெட்டுகளாகவும் நல்லவசனநடையாகவும் அனைவருக்கும் நன்றாய் தெரியும்படியாகவும் நல்ல திக்கு காகிதத்தில் 12-பேஜ சைஜில் படத்துடன் அச்சிட்டிருக்கிறோம்.

இதன் விலை அணா 0 6 0

## அனுபோக ஜாதகரகசிய விளம்பரம்.

இந்த (அனுபோக ஜாதகரகசியமென்னும்) கைகண்ட சாஸ்திரமானது புதைநிதியம்போல் கிடைத்து அச்சிட்டறங்கேற்றி யாவரும் கையாண்டு வருமாறு வெளிவந்திருக்கின்றமையால் இன்னூலைக் கண்ணுற்ற நண்பர்களியாவரும் சோதிடரை விரும்பாமல் ஜாதகம்-குறிப்பு-லக்கினப்-கோசாரபலன் முதலிய எல்லா நன்மை தின்மைகளையும் தாங்களே யறிந்துக் கொள்ளலாம் அன்றியும் ஸ்திரீகள் ஜாதகமும் அடங்கியிருக்கிறது, உயர்ந்த கிளேஸ்கடிதத்தில் அச்சிட்டு புல்பயிண்டு செய்திருக்கின்றது.

இதன் விலை அணா-12.

மஸ்தான் சாகிபுபாடல்

# மூலமும்-உரையும்.

சகல சாஸ்திரங்களிலும் முன்னோர்கள் செய்யும் மகிமைகளிலும் சதா ஊக்கங்கொண்டு மனக்கிளர்ச்சியோடிருக்கின்ற புத்திமான்களுக்கும், கல்விமான்களுக்கும், ஏனையோருக்குந் தெரிவித்துக்கொள்ளுவதென்னவென்றால் மகா மகிமைபொருந்திய (மஸ்தான்) சாகிபு பாடல் இதுவரைக்கும் விஷயம் புலப்படும்படியான (பொழிப்புரை) இல்லாத குறைவினால் பயன்படா திருந்ததென்று யாவரும் உணர்ந்தவிஷயமே அந்த அரிய நூலுக்கு தக்க கல்விமான்களைக்கொண்டு உட்கருத்து நன்றாய் விளக்குப்படியும் கற்றோர்மனம் குதூகலமடையும்படியும் ஒரு பொழிப்புரை யெழுதி உயர்ந்த கிளேஸ்கடிதத்தில் அச்சிட்டிருக்கிறோம். இதைவாங்கி வாசிப்பவர்கள் சரியை-கிரியை-யோகம்-ஞானம் முதலியவைகளையும், சன்மார்க்கத்தையும் சர்வேஸ்வரனிடத்தில் அன்புடையவர்களு மாவார்கள் என்பது திண்ணம் ஆனதுபற்றி ஒவ்வொருவரும் இதை அவசியம் வாங்கிப்படிக்க வேண்டுமென்று பிரார்த்திக்கிறோம்.

இதன்விலை கலிக்கோபயிண்டு ரூபா-2.

## உத்தரராமாயண வசனம்.

இதில் குபேரப்படலம், மாலியவான் வதைப்படலம், ராவணனிலங்கைபுகுப்படலம், ராவணன் மணம்புரிபடலம், அளகையழித்தபடலம், ராவணன் வரையெடுத்தபடலம், வேதவதிப்படலம், மருத்துராசப்படலம், அனரண்ணியப்படலம், காலப்படலம், வருணனைத் தி[illegible]கொண்டபடலம், மதுப்படலம், அரம்பைப்படலம், இந்திரன் க[illegible]ண்டப்படலம், கார்த்தவீரியனால் ராவணன் கட்டுண்டப்படலம், வாலிவாலால் ராவணன் கட்டுண்டப்படலம் அனுமப்படலம். வானரவீரருக்கு விடைகொடுத்தபடலம், முதல்நாள் யுத்தம், இரண்டாநாள்யுத்தம், மூன்றாம்நாள்யுத்தம், நாலாநாள்யுத்தம் ஐந்தாநாள் யுத்தம், ஆறாநாள் யுத்தம், ஏழாநாள் யுத்தம் எட்டாநாள் யுத்தம் ஒன்பதாநாள் யுத்தம் பத்தாநாள் யுத்தம், பதினோராநாள் யுத்தம், பன்னிரண்டாநாள் யுத்தம், பதின்மூன்[illegible]ம்நாள் யுத்தம், பதினாலாநாள் யுத்தம், பதினைந்தாநாள் யுத்தம், [illegible] புகுபடலம், உபகதை, லவணாசூரன் வதைத்தபடலம், [illegible]சப்புகன் கதை, சுவேதன் கதை, தண்டன் கதை, விருத்திராசுரன் கதை, இளன்கதை அசுவமேதியாகம், பரத புத்திரர் பட்டாபிஷேகம், லக்ஷ்மண புத்திரர் பட்டாபிஷேகம், இவ்வளவும் அடங்கியது.

உயர்ந்தபதிப்பு புத்தகம் 1-க்கு விலை அணா-6.

## கைமுறை பாக்கெட் வைத்தியம்.

இதில் வயித்திய பாகங்களெல்லாம் சுலபமாய் செய்யக்கூடியதாய் சுமார் 600-முறைகளுக்குக் குறையாமல் அடங்கியிருக்கிறது பாக்கெட்டிற்குள் அடங்கும்படியாக சிறிய பாக்கெட் பஞ்சாங்க அளவில் உயர்ந்த கிளேஸ் கடிதத்தில் அச்சிட்டு புல்கலிகோபயிண்டு செய்து தங்ககிலிட்டில் கைமுறை பாக்கெட்வயித்தியமென பேர் குத்தி வெகு நேர்த்தியாயிருக்கும்.

புத்தகம் 1-க்கு விலை அணா-12.